127

பிஸ்மில்லாஹி.

இஃது

தக்க சுறாத்தென்று வழங்காநின்ற சலாத்துல்

அஃறுக்கான் மாலை.

காயற்பட்டணம்

சுலைமான் லெப்பை ஆலிம் சாகிபு அவர்கள் குமாரராகிய

சா. மு. நெயினலெப்பை ஆலிம் சாஹிபு அவர்கள்

அருளிச்செய்தது.

இதனை

சென்னை, திருவல்லிக்கேணி,

ஹாஜீ M. A. ஷாஹுல் ஹமீது & ஸன்ஸ்,

அவர்களால்

தங்களது

ஷாஹுல் ஹமீதிய்யா அச்சியந்திர சாலையிற்

பதிப்பிக்கப்பட்டது.

1948

[அணா 8.

0-194NA4A
N48
103711

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
JAN 1949
MADRAS

பிஸ்மில்லாஹி.

இஃது

தக்க ‘சுறாத்தென்று வழங்காநின்ற சலாத்துல்

அறுக்கான் மாலை.

காயற்பட்டணம்
சுலைமான் லெப்பை ஆலிம் சாகிபு அவர்கள் குமாரராகிய
சா. மு. நெயினாலெப்பை ஆலிம் சாஹிபு அவர்கள்
அருளிச்செய்தது.

இதனை
சாத்தான்குளம் மகாகனம் பொருந்திய
முஹியித்தீன் அப்துல்காதிறு அவர்கள்
குமாரராகிய ஸ்ரீமான்
கே. எம். எம். முஹமத் ஹஸன்,
அவர்கள்
உபகரித்த காருண்ய நிதியைக்கொண்டு

சென்னை, திருவல்லிக்கேணி,
ஹாஜி M. A. ஷாஹுல் ஹமீது & ஸன்ஸ்,
அவர்களால்
தங்களது
ஷாஹுல் ஹமீதிய்யா அச்சியந்திர சாலையிற்
பதிப்பிக்கப்பட்டது.

இதன் விலை] 1948 [அணா 8.

திருவாங்கூர்

மு. கு. சுல்த்தான் முஹிய்யித்தீன் இயற்றியது.

இந்நூலைப் பொருளுதவி முயற்சிசெய்து

அச்சிடுவித்தவர்பேரில்

புகழ்க்கவிகள்

அறுசீரடியாசிரிய விருத்தம்.

தென்னிந்தி யாவில்வளஞ் செறிநகர்சாத்தான்குலத்திற்
சிறந்தலோலன்
உன்னுந்தியாமுஹி யித்தீனப்துல்க்காதி
றுவந்த பாலன்
மன்னுந்தி யாகனி வாணரகங் களிப்பநல்கும்
வரதசீலன்
இன்னிந்தி யாணர்முஹம் மது அசனென் றியற்பெயர்வாய்த்
திலக்குங் கூலன் (1)

முற்காலத் தினிலிருந்த மூதறிஞ ரியற்றியபன்
முதுநூ லாய்ந்து
தற்காலத் தெவருமறி தகமுயன்றச் சிடுபுதரு
தகைமை தன்னாற்
சொற்காலும் பொருள்வளனும் புகழ்வளனுங் காசினியிற்
றுதியிற்றந்து
விற்காலுந் துறக்கநறும் பதிவாழ்வுந் தந்தருள்வாய்
விமலகோனே. (2)

முற்றிற்று.

பிறசித்த சிறப்புப்பாயிரம்.

எல்லாவுயிர்களையுந் தன்னை வணங்கற்காகப் படைத்து இரட்சிக்கும் வல்லமையுடைய முழுமுதலோனாகிய நாயகனுடைய கருணையொளிவிற்றிரண்டு எல்லாப்பொருளினு முட்பொருளாகித்தோற்றி நிற்கும் எங்கணயினார் முஹம்மது நபி மக்கத்திலிருந்து மதீனத்திற் கெழுந்தருளிய ஹிஜுறத்து ஆயிரத்து இருநூற்று ஐம்பத்தேழுக் குச்சரியான சகாத்தவருடம் ஆயிரத்து எழுநூற்று அறுபத்து மூன்றில் காயற்பட்டணத்தில்வாழு மானாப்பிள்ளையி லப்பையாலிம் அவர்கள் ஹபீபுமுகம்மது லெப்பை குமாரராகிய பலபுராணஞ்செய்யும் பாவகை வல்ல செய்கு அப்துல்காதிறு லெப்பையாலிம் அவர்களிடத்தில் மேற்படி ஊரில்வாழும் விளக்கு முகம்மது முஹியித்தீன் அவர்கள் குமாரராகிய முஹம்மது இபுறூஹீம் சாகிபு நம்கருத்துக் கொண்டுவந்து நம்முடைய ஊரிலிருந்த முன்னர் முதிர்ந்த அறிவாளராகிய சுலைமானிலப்பை ஆலிம் அவர்கள் குமாரரில் சாமு நயினாலெப்பை ஆலிம் அவர்கள் தமிழாற்பாடிய தக்கசுறாத்தென்று வழங்குகின்ற சலாத்துல் அறுக்கான்மாலையினை நன்றாக வுரை செய்து தரவேண்டுமென்றுகேட்க அவர்கள் மனமகிழ்ந்து அக் கருத்தையுநோக்கி யெல்லாருக்கும் வேண்டிய பொருளென்று கருதி அதன் கவிகளையெல்லாந் திருத்தி அவரவரே சேத்த கவிகளையும் ஒதுக்கி அதற்கு வேண்டிய சில கவிகளும் பாடிச்சேர்த்துக் கோவையாக்கி முறைபோல வியல்புப்படுத்திக் கவிகளுக்குள்ள பொருளை வெளிப்பொருளாக்கியும் உள்ளமைந்த கருத்துப்பொருளை யெடுத்துக் காட்டியு முன்னோர் நூல்களிற் பெருநூலி லமைந்த துறையெல்லாந் தோற்றுதல் செய்தும். இலக்கண முணர்ந்தவர்களுக்கும் மற்றவர்களுக்கும் புதைந்தும் புதையாது நிற்கும்படியாகவும், படிப்போருக்குந் தமிழெழுத்து நடையும் பொருள் தொடர் நடையும் வரும்படியாகவும், அக்கவிகளினருமையும், பொருளினருமையுஞ் செய்பவரருமையும் வெளிப்படும்படியாகவும் விருத்தியுரையாக வுரை செய்து கொடுத்தார்கள். அதனை முன்னோர்கள் சிறந்த தன்மையாக அச்சிட்டு வழங்கி வந்தார்கள். பின்பு அதனைத் தற்காலத்திற்

சென்னையிலுள்ள பற்பல தமிழாதிகளும் தமக்கியைந்தவாறாய்த் தப்புந் தவறுமாக அச்சிட்டுக் கெடுத்து விட்டார்கள். அதைக் கண்ட ஸ்ரீமான் க. மீ. மு. முஹம்மது ஹஸன் என்னும் யான் ஷெ முன்னோர்களின் பிரதியைக் கொண்டு பால போதங்களுக்குப் படிப்புத் தெரிதற்காகும் பொருட்டு பாட்டுக்களிலும் உரைகளிலும் எழுத்துத் தொடர்பாகிய திரிவுகளில் விளங்கு மென்பது நீங்கலாக மற்றுந் திரிவுகளான வெழுத்துகளைப் பிரித்து என் முயற்சி மூலமாக அச்சிற் பதிப்பித்தேன்.

இதனைப் பாடினாருக்கும், உரை செய்தாருக்கும் இதற்கு முயற்சி செய்தோருக்கும், படித்துக் கொடுப்போருக்கும், படிப்போருக்கும், விரும்பிக் கேட்போருக்கும், இதன்படி யமல் செய்து வரும்சயத்தைப் பெற்றுக் கொள்ள அல்லா றஹ்மத்துச் செய்வானாகவும்.

இப்படிக்கு,

க. மீ. மு. முஹம்மது ஹஸன்.

பிஸ்மில்லாஹி.

இஃது

தக்கசுறூத்தென்று

வழங்காநின்ற

சலாத்து லறுக்கான் மாலை.

காப்பு.

தக்கசுறூத்தின் சலாத்துலறுக்கானை
மிக்க தமிழ் நூலா விளங்கவே-காக்கவே
யோது புறுக்கானுரையை யோத வெளியேன் மனத்தி
னீதியுறவே யருள்வாய் நீ.

என்பது, அறபுப் பாஷையாகிய சலாத்துலறுக்கானென்னு நூலினைத் தமிழ்ப்பாஷையாலாக்கத் துணிந்தவாசிரியர் தானெடுத்த கருமஞ் சிதையாது நிறைவு கொளற் பொருட்டுத் தன்னெளிமை யினையுங் கண்ணழி வினையுந் தோற்று வித்தெல்லாம் வல்ல நாயகனது வலிமை யினையுங் கருணையினையு முயர்த்திரந்து காவற்தேடி நாற்பாவினுண் முதற் பாவாகிய வெண்பாவாற் கூறிய காப்பு.

(இதன் பொருள்.) தகுதியாகிய சறுத்துக்களை யுடைய சலாத்து லறுக்கா னென்னு மறபுப் பாஷையாலுள்ள நூலதனைத் தமிழிற் கூறிய தொழுகைபி னியல்பமைந்த நூல்களெவற்றினு மிக்க நூலாக விளங்கும் பொருட்டு எல்லாவுலகமு முயிர்களுந் தாந்தாந் தேடிய தேட்டம் போலப் பெறு பேறனைத் தினையும் பெற்றனுபவிக்கும் படி யதன தனனுட போகமே யென்னாளுஞ் செலுத்துவிக்கு நாயகனே யோதுகின்ற புறுக்கா னென்னும் வேதத்தின மைந்த நின் சொல்லினுரையினைப் பனுவல் செய்ய அறிவானு நடக்கையானு மெளியனாகிய வென்னுடைய மனத்தின் கண்ணேயச் சொல்லி னனிபயன் கணிலை பெயர்ந்து வேறு நிலை கொள்ளாது தத்த நிலையே கொள்ளு நேர்மை யுண்டாகக் கருணை புரிந்து காப்பாய் நீயே யென்றவாறு.

சலாத் துலறுக்கானை புறுக்கானுரையை யென்ற தன் முதனூ லென்றறி தற்கெனக் கொள்க. அன்றியும் புறுக்கானுரையாகிய சலாத்துறுக்கானை யென்று முணர்க. (கக்காவே) யென்று மெளி யென் என்று மடியான் மாட்டாமை யுடையா னென்று மவன் வல்லபமுடையா னென்றுந் தன்னிரத்தலை வெளியாக்கினனென்று முணர்க விளங்கும் பொருட்டுப் பனுவல் செய்யுங் கருணை புரிந்து காப்பா யென்று கொள்க.

சிறப்புப்பாயிரம்.

ஆலந்தனை யெல்லாம் படைத்தாள்கிற
அல்லா தனக்கெல்லாப் புகழ்ச்சியுமாம்
ஆலநபிக்கு மவர்கிளைக்கும்
அவர் தந்தோழன்மாரனை வருக்கும்
ஆல நபியும்மத்தான வர்க்கும்
அல்லா கிருபையுண்டாகவுமே
சாலநபி தம்மைமிகப் போற்றிப்பின்
சலாத்து லறுக்காரனைச் சாற்றுவனே.

என்பது, வல்லநாயகனைப் புகழ்ந்தவற்குரிய நூல்வரின் சலவாத்தோதித்தான் கருதிக்கொண்ட பொருளினை நுதலிப் புகந்தவ் வெண்பாவிற்கடுத்த பாவான்மாலை புனைவானெண்சீர்கழி நெடிலடியா சிரிய விருத்தத்தாற் கூறிய சிறப்புப்பாயிரம்.

(இதன் பொருள்.) எல்லாப்புகழ்ச்சியுமாவது எல்லாவுலகங்களையு முயிர்களையும் படைத்தவற்றிற் கிரிமையாகிய பண்புன தொழிலும் பயனும் வெளிப்படுத்தி யருட்கொடை கொடுத்தாளுகின்ற அல்லாவென்னும் வலிய திருநாமங்கொண்ட நாயகனுக்குரித்தாகு மவனது கிருபையானது இவ்வுலகமடங்கலுக்கு முயிர்களடங்கலுக்கு முதற்காரணமாகிய நபி முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமுக்குமவர்கள் கிளையிலுள்ளவர்களுக்கு மவர்களை றியானு மியற்கையானுஞ் செயற்கையானுங் கலந்துரிமை பற்றிய தோழன்மாரனைவருக்கு மந்நபியாருக்கொழுகு மொழுக்கமுடைய முன்னும் பின்னும் வாராநின்ற உம்மத்துக்களெல்லாருக்கு முண்டாகக்கடவது மேலுமதிகரித்த நபிமார்கள டங்கலையும் போற்றுதல் செய்து பின்னரிச்சலாத்து லறுக்கான் மாலையினைச் சாற்றுவே னென்றவாறு.

(புகழ்) அவனுக்குரியதென்றும் கிருபையிவர்களுக்குண்டாகக் கடவதென்றும் புகழினையுஞ் சலவாத்தினையும் படர்க்கை வாக்கியமாகக்கூறிப் பின்னர் போற்றிச்சாற்றுவேனென்று தன்மையொருமையின் முற்று வித்தமையால் அவனை யானும் புகழ்ந்து அக்கருணை புரிவாயென்று சொல்லிப் போற்றிச்சாற்றுவேனெனத் தன் மேம்பாட்டுரையிற்று. இவ்விதிமுத னூலினியல் பென்றுணர்க [எல்லாப்

புகழ்ச்சியு மென்று முற்றுணமயா கொடுத்தமையா லப்புகழ்ச்சி நான்கு வகையென்பதும் தன்மைமுன்னிலேப் படர்க்கையென்னு மூவிடத்தன வென்பதுவு மடங்க வரையறைக் கூறினுராயிற்று.

[அவற்று ளுன்கு வகையாவன இறைவன் றன்னேவியந்து மவனடிமையைவியந்து அவ்வடிமைத் தன்னேவியந்துந் தன்னிறைவனே வியந்துங் கூறுதலாகிய கூற்று நான்குமாம். [மூவிடத்தனவாவன தன்மையிடத்திலும் முன்னிலேயிடத்திலும் பிறந்த விந்நான்கு கூற்று மன்றிப் படர்க்கையிடத்திற் றறந்த அடிமைத் தன்னினத்தையும் வியந்து கூறுதலோடைந்து கூற்றுமாமென்றுணர்க. [சலாத்து லறுக்கனென்பது பலவுறுப்படங்கிய தொருபிண்டமருதாவது பலபறுலுகளுஞ் சேர்ந்த பலசறுத்துக்களு மகத்தாயதைப் பொதிந்து விருவகை சுன்னத்துக்களும் புறந்ததாயொன்ருகத்திரண்ட தொழுகையா மிவற்றை நன்குணர்ந்து கொள்ளப்படு மினிவருங் கவிகளா லென்றுணர்க.

நிறுத்தவியலிணேக் கூறல்.

அல்லாசுபுஹான ஹூத் தஆலா
அருளின்படியன்பாத் தொழுந்தொழுகை
யெல்லாவமலினு மேற்றமுமாய்
இஸ்லாந்தனக்காணி வேருமாகுரு
சொல்லுந் தொழுகைதானு லுவின்றியே
துரிஸ்தாகாதென்றபடியாலிமாம்
வல்லதொழுகைக்கு முன்றுடக்கின்
வரலாறுரைத்திட்ட வகையைக்கேளீர்

என்பது, இம்மாலேயிலகமும் புறமுமாகிய பலவியல்களே நிரல்பட நிறுத்தியா வொழுங்கிணேக் கூறியது.

(இதன் பொருள்.) தூயதன்மையு முயர்ச்சியு முடைய வொருமை நாயகனடியார்களே நேர்காட்டியாளுங் கருணையாற் பணிதத்பணி யேற்றவனன்பு கொள்ளத்தாமு நிறைந்த வுள்ளன்போடு தொழுந் தொழுகையாவது மற்றைய விரத முதலிய தவத்தியல் புகழெல்லா வற்றினுமேறிய புகழிணேயுடையது மாகி யிதன் முன்னின்ற விசுலா மென்னுமா தார நிழலொடு படர்ந்து வளர்தோங்குந் தருனுக்குப்

பாரரை முதலாப் பற்றி நின்ற வடியாணி வேருமாக விருக்கு மித்தன்மையாகச் சொல்லுகின்ற தொழுகை தான் உலுவாகிய புனித மில்லாமன் முடியா நிறைவேறு தென்று வேதத்திற் போந்த படியால் இதன் முதனூல் செய்வான் புகுந்த விமாம் சாபி யித் தொழுகை யினியலெனப் பெயர் காட்டி அத்தொழுகையினைக் கூறுதற்கு முன்னருலுவிமவ்வுலு வினைக் கூறுதற்கு முன்னரதற் கிடையூறுகிய துடக்குமாக வியன்முறை நிரல் பட நிறுத்தித் துடக் கின் வரலாற்றினைத் தலைக் கொண்டு கூறினார்க ளல்வொழுங்காக யானுங் கூறுவ னதனை நீவிருங் கேட்பீராக வென்றவாறு.

[துடக்கென்று பொதுப் படக் கூறினமையாற் பெருந் துடக் கென்றுஞ் சிறு துடக்கென்றுங் கொண்டது உலுவில்லாமன் முடியா நிறைவேறு வெனவே தயம்மங் கொண்டு நிறை வேறினு முலுவைக் கொண்டு மீளுமென்பது உமோரோவிடத்து மீளா வென்பது உங்கருத் தென்று கொள்க. இதன் விரிவு கூறியவிடத் திற் காண்க.

முழுக்கியல்.

முழுக்கின் வரலாறு கூறல்.

கூறு முழுக்குத் தாறு வகை
கொண்டு விதிக்கு மென்ற றிமினிந்த
ஆறிலொரு மூன்று மாண் பெண்ணுக்கும்
ஆகும் பவரைய பத்துள்ளானல்
ஊறுமனி விமிற்றுஞ்சிடிலும்
ஒரு மூன்று மின்னார்க் காகும் பிள்ளைப்
பேறுங்க யிலாகி லீரமின்றிப்
பிள்ளைப் பெறுகிலு மொக்கு மென்றார்.

என்பது, முற்கூறிய துடக்கிரு வகையுள் முழுகுதலை விதி யாக்குங் கருமங்கள் பெருந் துடக்கென்று மிதனை வேண்டா துலு முதலிய கொண்டு நீங்குவன சிறு துடக்கென்றும் போத்த வகை யினம் முழுகுதலின் வரலாறு கூறல்.

(இதன் பொருள்.) முன்னர் கூறிவந்த துடக்கினுன் முழுகு தலாறு காரணங் கொண்டு விதிக்கு மென்றறிந்து கொள்வீராக. இந்த ஆறிலொரு மூன்று காரணமும் ஆண்ஜாதிக்கும் பெண்ஜாதிக்

கும் பொதுவாக வுண்டாவதாகும். 1-வது ஆண் குறியின் வரை வளவும் பெண் குறியிற் குள்ளாக மறைந்தாலும், 2-வது விந்து வெளிப்பட்டாலும், 3-வது மாணித்தாலு முழுகுதலிருவருக்கும் விதிக்கு மற்றொரு மூன்று காரணமும் பெண்ஜாதிக்கே தனதாகும். 1-வது பிள்ளைப் பெறுதலானாலும், 2-வது மாதவிடை யானாலும், 3-வது ஈரமில்லாது பெற்றாலு முழுகுதல் விதிக்கு முவினைய விரண்டுஞ் சோரி மறுத் தொழிந்த பின்முழுகுதலினோடு பின்னைய தொன்று மொத்து வருமென் றிமாம் சொன்னார்க ளென்றவாறு.

[விதிக்கு மென்பதனைப் பிறவினை யாக்கி முழுகுதலை வருத்தி விக்குந் துடக்கினை முழுக்ககன்றாக்கி யிவ்வாறு காரணங் கொண் டுண்டாகிய முழுக்கானது முழுகுதலை விதியாக்குமென்று பொருள் கூறிற் பொருந் தாதா மிறைவனரு மொழி கருந்தாலன்றி வேறு கறுத்தாத் தோற்றுதலா னென்றுணர்க. [அபமென்று பொதுப் பட நிற்கையால் விலங்கினத்தின் குறிகளையுங் கொண்டமையின் ஆண் விலங்கின் குறி வரையளவுமடவார் பெண் குறியுள்ளாக மறைந்தாலு மாடவரி னாண் குறிவரையளவும் பெண் விலங்கின் குறியுள்ளாக மறைந்தாலு மன்றியு மிருவகையாரிற் மற்புறத்தபத்தி னுள்ளாக மறைந்தாலு முழுகுதல் விதிக்கு மென்று கருத்தாயிற்று. பிள்ளைப் பேறுகில் கைலாகி லெனவிவ் விரண்டு மொற்றுமையைத் தோற்று வித்த லானி பாசின் சோரியும் கைலின் சோரியுமென்று விளக்கிற்று. ஈரமின்றி பெற்றாலு மென்னு மெதிர் மறை யும்மையா லீரத்துடனே பெற்றாலு மென்றமையுமாகிய பேறுமென்று சொல் லாராசிரிய ராகையால் ஈரத்துடனே யென்றாலும் பிள்ளைப் பேறென் றாலு நிபா சென்பதாயிற்று.] அவ்வீர மில்லாமைப் பிள்ளை விழு தலிற்கு மிரத்தத் திரளை மாங்கிசத் திரளைக்கு முண்டா யிருக்கினு மவ்விதியின் பாற்படு மென்றுணர்க.

முழுக்கின் பறுலுகளைக் கூறல்.

இந்த முழுக்கினிற் பறுலுலு லொருமூன்
றென்றே யியம்ஞரிமாம் ஷாபியி
தந்த மேனியின சிசுண்டாகிற்
றன்னை யேதுய்தா நீக்குதலும்
இந்தப் பறுலானத் துடக்குத் தன்னை
யானீக்கிறே னென்று நிய்யத் தெண்ணல்
அந்த நிய்யத் தோடே மேனியை
அடங்கலு மப்பாற்றேய்த் தலுமே.

என்பது, அவ்வாறுகாரணங்கொண்டு விதித்தமுழுகுதலிற் குரிய பறுலுகளைக் கூறல்.

(இதன் பொருள்.) இவ்விதித்த முழுகுதலினிடத்திலுள்ள பறு லொருமூன்றென் றிமாம்ஷாபியி சொன்னார்கள். 1-வது முழுகுவான் றன் சரீரத்தில் யாதோர் நஜீசுபட்டிருந்தா லச்சரீரந் தூய்தாகும் படியதனை நீக்குதலும், 2-வது இம்முழுதலுக்கேதுவாய்விதித்தவித் துடக்கினை யானீக்கிறேனென்று மனதில் நிய்யத்துவைத்தலும், 3-வது அந்நிய்யத்துடனேயவனது சரீரமடங்கலையும் தண்ணீராற் றோய்த்தலுமாகிய விம்மூன்றும் பறுலுகளா மென்றவாறு.

[என்றேவெனத் தேற்றேகார மிவ்விமாம் துணிதலுக்கேயா யிற்று.] இமாம்ஷாபியென்று பெயர்கொண்டமையான் மற்றவிமாம் கள் மூன்றன் றிரண்டேயென்று முன்னையது சுன்னத்தென்றுங் கூறுவாரென்பதாயிற்று. [அப்பின்மூழ்கலென்னுதப்பாற் றோய்த்த லென்றேதுப்பயனாகக் கூறினமையி னிடையூறினு லக்நீரினைப்பிற பொருளிற்றோய்த்தவன் மேனியினைக் கழுவுதலுமொன்று இதன் விரிவுய்த்துணர்ந்து கொள்க.

முழுக்கின்

சறுத்துஞ் சுன்னத்துங் கூறல்.

சொல்லுந்துடக்கறச் சறுத்துமூன்று
துய்யபுன்றேடல் இஸ்லாமாலால்
நல்லமேனியிற் புனல்விலகல்
நாடியதைநீக்கல் சுன்னத்தாறே
வெல்லும்பிசுமி முன்கைகழுவல்
மேவியுலுச்செய்தற் றொடற்பிடித்தல்
வல்லகரத்தாலே சரீரந்தேய்த்தல்
வலதுபுரமுந்தக் கொள்ளலுமே.

என்பது, அம்முழுகுதலுக்கு முதற்காரணமாகிய சறுத்துக் களையு மதனைச்சார்ந்த வியல்பாகிய சுன்னத்துக்களையுங் கூறல்.

(இதன் பொருள்.) முன்சொன்ன காரணங்களாலாகிய துடக் குக்களை நீக்கு முழுகுதலுக்கு முதற்காரணமாகிய சறுத்துக்கள்

றூன்றும். 1-வது தானுஞ்சேர்ந்தாருந் தூய்மைபெறத் தூய்தாகிய தண்ணீர்வேண்டலும், 2-வது அம்முழுகுதலுடையானி சுலாமை யுடையவனுதலும், 3-வது அவனல்லமேனியிற் புனல்சொல்லா திடைப்பட்டுச் செறுத்து நிற்குஞ் சந்தனமுதலிய வுள்ளவை யெவற்றினையுமாய்த் துணர்ந்து முற்படநீக்கிக் கொள்ளலுமாகிய விம்மூன்றுமாம் இனியதனைச்சார்ந்த வியல்பாகிய சுன்னத்துக் களாறும். 1-வது அவன் முழுகைக்குத் துவக்கும்போதில் பிஸ்மிச் சொல்லுதலும், 2-வது முன் கையிரண்டினைக்ங் கழுவிக்கொள்ளு தலும், 3-வது உறுவினைப் பூரணமாகச் செய்தலும், 4-வது தலை முதற்பாதாந்தமுந் தொடர்பாகத் தண்ணீர்விடுதலும், 5-வது கைகளாலெவ்வளவு நீளவல்லதோ வவ்வளவுஞ் சரீரத்தினைத்தேய்த்து நீர்விடுதலும், 6-வது வலப்பாகத்தை முற்படுத்திக் கொள்ளுதலு மிவ்வா றிமாமென்றவாறு.

[துய்யபுனலெனப் பண்படை யடுத்தமையாற்றன் றாய்மை யன்றியும் பிறபொருளையுந் தூய்மைசெய்தலுமங்கீரிற்குரித்தாயிற்று. அஃதாவதுதன்னிலதானுந் தன்னிற்றேற்றிய பொருளானுமன்றி மணமுஞ் சுவையு நிறமும்வேறுபடாது மற்றோற் காரணத்தாற் றன்னியற் பெயர்நீங்காது பலவாய்ப்பட்ட டொருங்கடைந்து மிக் காயினுந்தன்குணமேகொண்டு நிற்குநீரக மிதற் கினஞ்செப்பிமறுப் பினஃது துய்ய புனலாகா தென்றுணர்க. [இஸ்லாமாதன் முதற் காரணமாகையார் காபிறுனவனுக்கித்துணையும் வேண்டாவாமென்று கொள்க. [நல்லமேனியெனவே அல்லாதமேனியாயி னுண்டாகிய நலிவிற்கோர்பற்றேனுமள்ளேனு நீரினைச் செறுக்குமோர் விலகலு முண்டாயிருக்கிறதனை நீக்கலானச்சமும் பிறக்குமாயிற் புனித மில்லாதபோதின மைந்த தாயினு நீக்காது முழுகிப்பின்னருந் தன் றொழுகையினைமீட்டுத் தொழுவானென்பது மொன்றென்று விளக் கினாராயிற்று. இதன்விரிவுய்த்துணர்ந்து கொள்க.

முழுக்காளர்.

செய்யலாகாத கருமங்கூறல்.

சுனுபானோர்க்கைந்து செயல்ஹறுமாம்
தொழுக்குறுமேனுத முஸஹ்றபைதொட
வினிதாப்பள்ளியிற்றறிக்சுமக்கத்
தியல்பாங் கஃபாவைப் பிதக்கணம்வா

வளிதைகைலாசில் கருமோரெட்டு
    வகைமுன்சொன்னவைந்து முறந்தாட்கொப்பூழ்
தனதிற்கிடையேகை யிணக்கஞ் சேர்க்கை
    தான் செய்யனோன்பு பிடிக்கவுமே.

என்பது, இம்முழுகுதல் விதியாளர் செய்யலாகாத கருமங்களிவைபிவையென வகுத்துக் கூறல்.

(இதன் பொருள்.) முன்கூறிய காரணங்களி னொன்றொழிந்த காரணங்கொண்டு முழுகுதல் விதியானவர்க ளிருவகையாருமைந்து கருமஞ்செய்தல் ஹறாமாகும், 1-வது தொழுகையைத் தொழவும், 2-வது குறுஆனை யோதவும், 3-வது முஸஹ்றபைத்தொடுதல் செய்யவும், 4-வது தொழுகைக்குரிய பள்ளிற் றறிபடவும், 5-வது மக்கத்துக் கஃபாவைத் தவாபு செய்யவும் இனிவனிதையர் இம்மூன்றுமன்றித் தமக்குரிய விரண்டு துடக்கு முறிலிவ் வைந்துடனே, 6-வது முழங் காலுக்கும் கொப்பூழுக்கு மிடையில் கையாளிணக்கஞ் செய்யவும், 7-வது புணர்ச்சிகொள்ளவும், 8-வது நோன்பு நோற்கவுமாகா விவ்வெட்டுங் ஹறாமா மென்றவாறு.

[முன்னைய மூன்று முடையர் சுனுபாளர் பின்னயவிரண்டு முடையார் கைலாளரென்று கோடற்குச் சுனுபானோர் கைலாகிலென்று பிரித்துக் கூறினார். [வனிதைகைலாகிலெனவே நிபாசாகிலென்று மக்குறியீடுகொண்டு நின்றது. பள்ளியிற்றரிக்க வெனவே தரிபடாது விரைந்து போதலுங்கடத்தலும் விலக்கன் றென்றாயிற்று. இம்முழுகு தலிலவ்வவத் துடக்கினையா வதிவைகன்றாற் செய்யுந் தொழுகை முதலியவற்றை யாவதுன்னி நீக்குகிறேனை மாக்குகிறேனென்று நிய்யத்து செய்தல் வேண்டுமென் றித்துடக்கினால் விலக்குண்ட கருமங்களிற் குறைந்து கூடியும் வருமுறைமை விளக்கிற்று. இதன் விரிவெல்லாம் பெருநூலிற் கண்டுகொள்க.

முழுக்கினியல் முற்றிற்று.

உ லு வி ய ல்.

உலுவின் சறுத்துக்களைக் கூறல்.

விதியாகு மூர்தம் உலுவுக்குமுன்
    மேவுஞ் சறுத்தாறுஞ் சொல்லக்கேண்மின்
அதபினி சுலாமும் புத்தியுமுண்
    டாதல் பின்னுலுபறு லென்றெனல்

உலுவினட வெல்லாமுற்றறிதல்
உலுவுக்காகந்துய்ய தண்ணீர்தேடல்
உலுவின்பறுலான மேனியிடத்
தொன்றுமறைவின்றி நீக்கலுமே.

என்பது, முன்னரெடுத்துக் காட்டிய விருவகை துடக்கினுண் முழுகுதலை விதிக்கும் பெருந்துடக்கின் காரணமுங் கூறியதன் முழுக்கின் பறுலுஞ் சுன்னத்துங் கூறியதனால் விலக்கிய கருமங்களுங் கூறியொழிந்த சிறு துடக்கினைக் கூறுவான் புகுந்தா ரதனை நீக்கிவிக்கு முலுவினியலினைத் துவக்கினா ரங்ஙனங் காரணங் காட்டி முழுக்கினியலினைத் துவக்கியது போலன்றிக் காரணங் காட்டாது வக்கியதென்னையெனி னிவ்வுலுவில்லாம லவ்வணக்க முதலானவை முடியாமையாலி தன்செய்கையின்றி யவற்றைச் செய்தலை விலக்கிய சுபாவமுமிவ்வுலுவினை நீக்கிவிக்கு மிடையூறுங் காணப்படாது நின்ற சிறு துடக்காகையால் மேலுமிவ்வுலுவினைக் கூறவே சுபாவமுமிவ்வுலுவின் முறிதலைக்கூறவே யவ்விடையூறு மவ்வணக்கமுதலிய கருமங்களை விலக்கியதாயிற்று

இவ்விடையூறு மெப்போது முடையாறுக் கிவ்வணக்க முதலியவில்லையா மோவாகா அவரவர்களுக்குப் பறுலுக ணிறை வேற்று மாத்திர மவ்வுலுவெடுத்தற்கு வேறுவிதி கூறிவருதலான தனை நன்குணர்ந்து கொள்க. அவ்வுலுவினியலிம் முதற்கவியின் முற்பட்ட சறுத்தினைக் கூறுங்காலம் முழுக்கினிய லினீதனிரல படுமுறை முன்பின்னாயினு மொழுக்கென்றுணர்க. இக்கருத்தா னெடுத்த வுலுவின் முற்பட நின்ற சறுத்துக்களைக் கூறல்.

(இதன் பொருள்.) நுந்தமக்கு விதியாக நின்ற வுலுவுக்கு முதற் காரணமா யவ்வுலுவினை யெடுப்பானுக்குரிய பண்புமாகிய சறுத்தாம் வந்தனையு மவற்றினைக்கூறக் கேட்பீராக, 1-வது அவ் வுலுவிற் குரியவ னிசுலாமையுடைய வனாதலும், 2-வது நம்மிடாறு பகுத்துக்காணும் புத்தியுடையவனாதலும், 3-வது அவன் அவ்வுலு வினைப் பறுலென்றறிதலும், 4-வது அவனவ்வுலுவிளடவெல்லா முற்றிதலும், 5-வது முன்சொன்ன துய்ய தண்ணீர் தேடிக் கோட லும், 6-வது உலுவினுறுப்பாகிய முகங்கைதனை கால்களின்மேனியி னீரினைச் செருக்கும் பொருட்களை மறைவு கொள்ளலு நீக்குதலு மாகிய விவ்வாறுமா மென்றவாறு.

[ஆறுமென்றச் சவும்மையா னிவையல்லவு முளவாயிற்று. 7-வது உறுப்புகளிற் றண்ணீரொலித்தோடுதலும், 8-வது உலுமுறி

வெப்போது முடையார் வணங்கும்பொழுதி லுலுச்செய்தலுமாம். [அதபிணிஸ்லாமும் புத்தியுமென்றடை யிரண்டிற்குங்கொள்க. [இஸ்லாமை யணியாதகாபிறுக்கும் புத்தியணியாத பித்தனுக்கும் பறுலாகாவென்றுணர்க. [அடவெல்லா முற்றறிதலெனவே யவ் வுலுவின் பறுலினெழுங்கு சுன்னத்தி னெழுங்கிவையென்று பறுலை சுன்னத்தென்று யேதியாதுணயர்தறிதலாம். [மறைவின்றி நீக்கு தலிற் கேலாவாயி னீரானீவலுமென்றென்றுணர்க.

உலுவின்

பறுலுகளைக் கூறல்.

உறுதியொலுவினியபறுலாறென்றூர்
உன்னுமுதனிய்யத்ததனடவு
பறுலாங்தொழுகையைகலாலாக்கிறேன்
யென்றுட்பதிவொடுமுகங்கழுவல்
செறியுமுழங்கையுட்புடக்கழுவல்
சிரத்தின்மயிர்முன்னிற்சிலநனைத்தல்
குறிகாற்பறடுள்ளாக்கழுவுதலுங்
கொண்டமுறைபோலேயொழுதலுமே.

என்பது, அவ்வுலுவிற்குரிய பறுலுகளை யித்துணையவென வரையறைகூறல்.

(இதன் பொருள்.) இவ்வுறுதிப்பட்ட வுலுவினிடத்துள்ள பறு லாறென்றிமாம் சொன்னூர்கள். 1-வது மனத்தில் முதனிய்யத்து வைத்தலும் அதனெழுங்காவது பறுலாகிய தொழுகையை கலாக் குகிறேனென்றுளத்திற் பதித்தலோடு முகத்திலெவ்விடத்தேனு முகற்கழுவுதல், 2-வது உள்ளத்திற்பதித்த நிய்யத்தோடு முகங் கழுவலும், 3- முழங்கையுள்பட விரண்டுகைகளையுங் கழுவுதலும், 4-வது தலையினிடத்தின் முன்னுரோமத்திற் சிறிதை நனைத்தலும், 5-வது பரடுள்ளாகக் காலிரண்டினையுங் கழுவுதலும், 6-வது சொல்லி வந்த முறைபோல முன் பின்னுகாமற்தொடர்ந் தொழுகலுமாகிய வில்வாறுமாமென்றவாறு.

[உலுவினில் பறுலென்று பின்னிய்யத்திடைவு [பறுலாங் தொழுகையை கலாவாக்கிறேனென்று பொருள் விட்டிசைக்கக்

கூறிய தென்னையெனி னின்னூற்றொழுகைபி னியற்கையினையு மதற்காகிய வுலுவினையும் பொருந்திக் கிடந்தமையானுமன்றியுந் தொழுகைக்காக வேண்டுமுலுவு மற்றுள்ள பல பறுலாஞ் செய்கைகளையும் சுன்னத்தாஞ் செய்கைகளையு நிறைவேற்று தலானுமற்றொரு செய்கைக்காக வேண்டு முலுவித்தொழுகையை நிறைவேற்றுமையானுமென்றுணர்க. [இவ்வுண்மை நிலையல்லாம லவாய்நிலையானும் பொருள் கூறினும்மையும் அவைவருமாறு உன்னுமுதனிய்யத்தென்பதை இவ்வுலுவிற்குமுந்திய துடக்கினை நினைக்குநிய்யத்தென்றாக்கித் துடக்கினை நீக்குகிறேனென்றுந் துடக்கினைவிட்டுத் தூய்மையாகிறேனென் றிரண்டுவாக்கிய மமைத்தலும் இந்நிய்யத்து நீங்காத் துடக்குடையானல் லானுக்குரியதாயிற்று. [இத்துடக்கு முதற்கவியிற்கூறிய சுபாவமுமிவ்வுலுவினை நீக்குவிக்கு மிடையூறுமாகிய சிறுதுடக்காயிற்று. இவ்விடை யூறாகிய சிறு துடக்குப் பலவகையா லவற்றுளொன்றினைக் குறித்தானுபினுமாம். ஒருவனிடத்திவ்வுலுவிற்கு முன்னக்காற்றுக்கழிதல் சிறு நீர் பெய்தல் நித்திரை செய்தலாகிய சிறு துடக்குகளுண்டாயிருக்க விவற்றினொன்றனைக்குறித்து இத்துடக்கினை நீக்குகிறேனென் றுலுச் செய்வானுமென்றதற்கு முந்தியதை நினைக்கு நிய்யத்தென்றார். [இனி உன்னுமுத னிய்யத்ததனடவு என்பதை முதலாகிய நிய்யத்து அவ்வுலுவினொழுங்கினை நினைக்குமென்று பொருளாக்கி உலுச்செய்கிறேனென்று உலுவினுடைய பறுலைச் செய்கிறேனென்று முலுவை யிறுக்கிறேனென்று முலுவினுடைய பறுலை யிருக்கிறேனென்று முலுவும் பறுலுங்கொண்டாகிய விந்நான்கு வாக்கியங்களையு மமைத்தலுமன்றியும் [உன்னுமுதனிய்யத்ததனடவு பறுலா மென்பதை அவ்வாறு பறுலின் முதலாகிய நிய்யத்து அவ்வுலுவினுடைப்பட்ட பறுலை நினைக்குமென்று முன்னுநிய்யத்து அதனடவுபறுலா மென்றும் பொருளாக்கித் தொழுகையையாமாக்கத்தேடுகிறேனென்றுந் தொழுகைபோல் வனவாமாக்கத் தேடுகிறேனென்றும் இஃதன்றி இவற்றிற்குத் தூய்மையாகிறேனென்று மிந்நான்கு வாக்கியங்களையு மமைத்தலும் உன்னுநிய்யத்து அவ்வுலுவினடவுபறுலு ஆனென்றதற்கு அவ்வுலுவினடவு சுன்னத்தாமென்று பறலிற்கினஞ்செப்பி யுலுவுசுன்னத்தாகிய கருமங் குறுஆனோதல் ஹதீதுசொல்லலிவைபோல்வன பலவுமொன்றினையாவினுங் குறித்துக் குறுஆனோதலை யாமாக்கத்தேடுகிறேனென்று மமைத்தலாகாவென்பதற்கு நிய்யத்து நடவுபறுலாகு மென்றார். அந்நிலைப்பொருள் களனைத்து முய்த்துணர்ந்துகொள்க. இவ்வாக்கியமனைத்து முலுவினிடத்துள்ளன சொல்லா தொழிந்தவை விளங்கிக் கிடந்தன.

உலுவின்
சுன்னத்துகளைக் கூறல்.

பத்துசுன்னத்துண்டுலுச்செய்வதிற்
பகர்தல்பிசுமில்முன்கைகழுவல்
சுத்தவாய்நாசிநீர்செலுத்தல்
சொல்லுஞ்சிரத்தினாலத்தொன்றுஞ்
சத்தமணிகாதுமசகுசெய்தல்
தாடிக்கால்விரகுடைந்திடுதல்
சித்திபெறவலப்பாகமுந்தல்
செறியுமுறுப்பைமுக்காற்கழுவல்.

என்பது, அவ்வுலுவினைப் பொதிந்து நின்ற சுன்னத்துக்களித்துணையவென வரையறைகூறல்.

(இ-ள்.) உலுவினையெடுக்குஞ் செய்கையிடத்திற் சுன்னத்துப் பத்துள் அவை 1-வது, அதனைத் துவக்கும்போதில் பிஸ்மில் சொல்லுதலும், 2-வது அப்பிஸ்மிலுடனே முன்கையிரண்டுமணிக் கட்டவுங் கழுவுதலும், 3-வது வாய்கொப்பளித்தலும், 4-வது நாசி நீர்செலுத்தலும் 5-வது, தலையினாலத் தொருபங்கு மசகுசெய் தலும், 6-வது காதிரண்டுமுப்புறஞ் சோனையுடனே மசகுசெய்தலும், 7-வது அடர்ந்ததாடியை வலக்காவிரல்களைவரித்துட்புறங் கோலிக் குடைந்து கழுவுதலும், 8-வது இரண்டுகால் விரல்களைக்கைவிரல் களாற் கோத்துக்கழுவுதலும், 9-வது கைகளேனுங் கால்களேனும் வலப்புறத்தினையே முற்படுத்திக்கொள்ளுதலும், 10-வது இவ் வுறுப்புக்களனைத்திடத்துங் கழுவுதலேனு நீவுறலேனுங் கோதுத லேனுங் கோத்தலேனுங் குடைத்தலேனு மும்முறை செய்தலு மாகிய விப்பத்துமாமென்றவாறு.

[சுத்தவாயென மிசுவாக்குச்செய்தலும் வாய் நாசியென விரண்டும் பிரித்திடா தொருமையாகச் செய்தலும் [சொல்லுஞ் சிரமெனச் சிரமடங்கலு மசகுசெய்தலும் [செறியுமுறுக்கை முக்காற்கழலென முன்னோக்கிக்கிடப்பது முகமேயாயினு நாடியுஞ் சிரமுநடந்து காதிரண்டையுங்கூடிக்கலக்கவேற்றிக் கழுவுதலு முழங்கையின்மேற் றோள்மேற்படக்கழுவுதலும்சிரமுழுவது நீவலு மதற்கொவ்வாதாயிற் பாகைமேல் மசகுசெய்தலும் சுன்னத்துக் களாமைம்பது கருதிக் கூறினாராகவுணர்க. ஆக்கச் செய்கைகூற லினாக்க மின்மையுஞ் சிலவுளவென்றுணர்க. [அம்மும்முறைச்செய்

கையுந் தொடர்பு விடாதலுந்திறத்தோன் மற்றொருவனீர் பெய்தற் குதவிவேண்டாதலும் வெறுத்தலின் குறிப்பாகச்சேர்த்த புனலை யுறுப்புக்களிற் போர்த்திடற்குத்தருஉம் தவத்திற்குரிய செய்கை யின் சலத்தினை யெவற்றானுந் துடைத்திடாதலுமன்றி யுமவ்வவ் வுறுப்புக் கடோறுந்துவாக்கலோதலு மவ்வுலுவின்பின்னர் சகாதத் தோதலுந் தசுபீஹூதஹ்மீது துவாவோதலுமாகிய வனைத்துஞ் சுன்னத்தாமென்றுணர்க. பிறவு மூளவேற் கண்டுகொள்க.

உலு நீங்குங்காரணங் கூறல்.

சொன்னாரிமாமைய்ந்துபிரகாரத்தாற்
றுய்யவுலுமெய்யாய்முறியுமெனப்
பின்முன்றுவாரத்தாலியாதொன்றாலும்
பிறபட்டாலுமாமணியொழிய
உன்னிச்சமைந்ததோரிருப்பின்றியே
யுறங்கிலபந்தனிலகங்கைபட்டிற்
றன்னைமறந்திடிற்றனக்குக்கொள்ளத்
தக்கமாதரைத்தொடுகிலுமே.

என்பது, இவ்வுலுவுடையானுக்குந் தனக்குமுள்ளத்தொடர்பு விட்டு நீங்குதற்குக் காரணங்கூறல்.

(இதன் பொருள்.) தூய்மையாகிய வுலுவானது தன்னாற்செய் யுங் கருமங்களுண்டாகாமையின் மெய்ம்மையாகத் தொடர்புவிட்டு நீங்குமாறு விசேடணத்தானென் றிமாம் சொன்னார்கள். 1-வது பின்புறத்துத் துவாரத்தானு முன்புறத்துத் துவாரத்தானு மிவை யடைபட்டுக் கொப்பூழின்கீழ்பட வுண்டாகிய துவாரத்தானும் வழக்கப்படு நீராயினு மலமாயினுங் காற்றாயினும் பிறபொருளாகிய புளுவாயினுஞ் சோரியாயினும் விந்தொழிந்த விவைவெளிப்பட் டாலும், 2-வது உலுவினை மனத்துட் பேணிச்சகனப் பரப்பிரண் டையுத்தரையிற் பொறுக்க வையாதுறக்கங் கொண்டாலும் 3-வது அபமாகிய பவனவாயினு முன்குறிபினுங் கைகளினுட் புறப்பட் டாலும், 4-வது எவ்விதத்தானுந் தனமதியறத்தன்னை மறந்தாலும், 5-வது தனக்கு மணத்தற்காவானென்று வேதம் விதித்த மட வாரைக் கைகொண்டாவது மேனிகொண்டாவது தொடப்பாலும் என்றவாறு.

[முறியு மெனச்சினை வினை கொண்டதாயினுந் தொழுகை முதலிய கருமங்களை யெடாத சுற்றி நின்றதான் முதலாகி முதல வினை நீங்கு மென்றவ்வுளுவு கொண்டதாயிற்று. [யாதொன்றென் பதித்து வாரமன்றி மற்றொரு துவாரம் பிறவென்பது பிறவிசேடணங்கள் பட்டாலு மென்பது வெளிப்பட்டாலும் சமைந்த விருப் பினுறங்கினு மவ்விடங்களிற் புறங்கை படினுந் தன்னை மறவா தவ் வுளுவினை மறந்தாலுங் கொள்ளத் தகாத மாதரைத் தொட்டலு மத்தொடு தன் மேனியன் றிநகமு முரோமமு மாயினுங் கொள்ளத் தக்க மாதர் சிறு வியாயினு மவ்வுளுவு நீங்கா தென்றுணர்க. [இவ் வுளு விரண்டு ஜாதியார்க்கும் பொதுவாக லானுத் தொடுதலு மிரண் டிங் கொண்டமையானு மந்நீங்கலும் பொது வென்றுணர்க.

உளுவிலார்
செய்தலாகாதனவுந் தொழுகையின்
சறுத்தின் றொகையுங் கூறல்.

செறியு முளுவிலார் மூன்று செபற்
செய்ப தருமாகு மெனச் செப்பினர்

மறையாம் புறுக்கானைத் தொடவே தொழு
மக்காகஃபா வைப்பிதக் கணம்வர

நெறியா முழுக்குடனுளு வுடவும்
நிகழ்த்த முடித்த பின்றொழுகைக்கு முன்

அறியவிதிபத்துச் சறுத்துண்டென
வருளினரி மாமதனைக் கேளீர்.

என்பது. இவ்வுளுவில்லார் செய்தலாகாத கருமங்களையுந் தொழுகையின் சறுத்துக்களின் றொகையுங் கூறல்.

(இதன் பொருள்.) முன் சொன்ன விடையூறுகள் செறியு முளுவில்லார் மூன்று கருமஞ் செய்தற்காகா ரென்றிமாம் சொன்னார்கள். 1-வது வேதமாகிய புறுக்கானைத் தொடுதல் செய்யவும் 2-வது தொழுகையைத் தொழவும் 3-வது மக்கத்துக் கஃபாவை வலஞ் செய்து வரவுமாகா [ஒழுங்காகிய முழுக்கினியலு முளுவினியலுங் கூறி முடித்தனன் பிரத்தொழுகையி னியல்பினைக் கூறுதற்கு முற்பட அறிய விதியாகிய சறுத்துப் பத்துண்டென இமாமருளிச் செய்தாராம் முற்பட்டசறுத்தினை யானுமம் முறையே கூறுவ னீவிருங் கேட்பீராக வென்றவாறு.

[புறுக்கானைத் தொட வெனவே யனைத்து மாயினுமதிற் சிறியதாயினு மொரு சூறத்தோராய்த் தாயினுமன்றித் தொடுத லன்றிச் சுமக்கினு மெல்லாம தன்பாற் பாடுமென்றுணர்க.

[தொழுவென்ற பொதுவினைத் திலாவத்தில் சுக்றிற் செய்யுஞ் சஜதாவுங் கொண்டது இவ்வுரைகளி மனூடுறைந்த துரைகளனைத் தையு மூய்த்துணர்ந்து கொள்க.

உலுவியல் முற்றிற்று.

தொழுகையில்

தொழுகையின் சறுத்துக்களைக் கூறல்.

முந்த முஸ்லிமாய்ப் புத்திமானாய்
மொழிந்த துடக்குடனே சீசுநீக்கல்
சந்தேகமின்றி யுயர் கிபுலாத்
தன்னைமுக நோக்கல் மறைத்தல்
இந்தத் தொழுகையின் பரிசறிதல்
யிதற்காம் பொழுதையு மத்தொழுகை
தந்த மேற்பறுலெனற் பறுலைத்
தக்க சுன்னத் தென்றெண்ணுமையே.

என்பது, முன்னர் சலாத்து லறுக்கானைச் சாற்றுவேனென்று நூதலிப் புகுந்ததற்கு வேண்டி நின்றமுழுக்கு முலுவுமாகிய வியலி ரண்டுங் கூறியதனைக் கூறுவான் றலைப் பெய்து மதனைச் செய்யுங் கருத்தாவினிடத்தில் விதிக்கு முதற் காரணமுமதனை நீங்காது நிலைப் படுத்துங் காரக வெதுவுமாகிய சறுத்துக்களைக் கூறல்.

(இதன் பொருள்.) 1-வது அக்கருத்தர் இத்தொழுகை விதியாவதற்குமுன்னரிசுலாமையுடையவனாதலும், 2-வது புத்தியினை யுடையவனாதலும், 3-வது முற்படச் சொல்லிய பெருந்துடக்குச் சிறுதுடக்கிரண்டினை நீக்கிக் கொள்ளலும், 4-வது சரீரத்திலு முடையிலு மிடத்திலு நஜீசுகளில்லாது தூய்மை செய்து கொள் ளலும், 5-வது பிசகாதுயர்ந்த கிபுலாவை முகத்தானேரிட்டுக் கொள்ளலும், 6-வது மேனி தோற்றுதுமான முள்ளவிடத்தை மறைத்துக் கொள்ளலும், 7-வது தொழுகை யகத்தும் புறத்தும் பொதிந்த பாங்குகளை யறிந்து கொள்ளலும், 8-வது அத்தொழு கைக்குரிய பொழுதினையு மறிந்து கொள்ளலும், 9-வது அத்

தொழுகை தன்மேற் பூண்டகட னென்றுறுதி கொள்ளலும், 10-வது அத்தொழுகையிற் குவிந்த பறுலுகளி னொன்றனையேனுந் தகுதியாகிய சுன்னத்தென்றி தயத்திலெண்ணிக் கொள்ளாமையு மென்றவாறு.

முந்த முஸ்லிமாய்ப் புத்திமானாயெனவே மற்றவையெல்லா மிதற்கும் பிந்தியெனவென்று மிவ்விரண்டு முண்டாதற்கு முதலாகியது பக்குவப்பருவமென்று மாண்பெண்ணென்னு மிரண்டு ஜாதியாருக்கும் பொதுவென்றுந் தோற்றுதலா னிதனோடியைந்த வொரு வினையாகியத்தொழுகை வந்திறங்குதற்குச் சில காரணம் வேண்டியதா லவையுமக்கருத்தாவிற்கே யுரிமையாயின. [இவ்விரண்டு மப்பக் குலமுமன்றி மற்ற வெண்வினைக்குங் கருத்தாவிவனாகையா லிவற்றையியற்றி யதனை நிலைப்படுத்தானாகி லிவனது கருத்துங் கருமமு நோக்கி வேதம்விதித்த தண்டனைக்குள்ளாகி யிம்மையிலுமறுமையிலுந் துன்பப்படுவன். [இங்ஙனம் புத்தியென்ற வழக்கு நல்லுணர்வோடு நிற்றல் இம்முதலாகிய பக்குவ மில்லாமையும் புத்தியாகிய நல்லுணர்வில்லாமையு மத்தொழுகையியைதற் கேதுவாகாவென்றுணர்க. [இவர்கள் சிறுவன் சிறுவிபக்குவமிலா பித்தன் பித்தி நல்லுணர்விலரென்றுகொள்க. [இனிப்பக்குவமும் புத்தியு முண்டாயிருந்து மிஸ்லாமையுடையனாகா தாயினவன் காபிறென்றுணர்க, அவன்புத்தி யிம்மையினு மறுமையினும் படுந் துன்பங்களை விட்டொழி தலைமறைத்து நின்றது ஆகையா லவன் மேலிவ்வணக்கம் பூண்டவிதி யாகாதோவென்றால் விதியாதலும் விதியாகாமையுமுண்டு. அஃதென்னையெனிற் புத்தியா னிஸ்லாமிய லறிந்து தனக்கிறைவனை வணங்கற்கிடமுண்டா யிருக்க அதனை நோக்காதால் மறுமை யிலதனாலுண்டாகுந் தண்டனைவிதியாக அவன்மேல்விதியாகக்கிடந்தது தொழுகையுமென்றும் அவனிவ்விய லாகாமையானிவ் வணக்கமுமவனாற்சென்று கொண்டென்னப் படுதலு மில்லாமையா லிம்மையினிடத்தவனைதகைந்து கொள்ளல் விதியாக அவன்மேலித் தொழுகையும் விதியாகாதென்றுமுணர்க. [துடக்குடன நஜீசு நீக்கலென்று கூறுத் துடக்கு நீக்கலும் நஜீசு நீக்கலு மென்றெண்ணத் தானும்மையைத் தொகுத்துப் பிரிந்தமையான்வேறாயிற்று அத்துடக்கின்வகை முற்கூறினு மஃதாவன தகத்ததென்றுணர்க. [நஜீசென்று பொதுப்பட கூறினமையாலத் தொழுகையை விலக்குவனவும் விலக்காதனவு மென்றிரண்டாகிப் படு நிலனும் பெற்றுப் புறத்ததாயொதுங்கியு மொதுங்காதுமாகிய அசுத்தமென்றுணர்க. [அவற்றுட்டொழுகையை விலக்குவன ஜந்துக்களின் மலமுன் சலமு மிச்சையான் விந்துவன்றி முன் வருநீரும் பின் வருநீரு மிரத்தமுஞ்சீழு முனமுஞ்சத்தியும் பெண் குறியில்வரும் வெண்ணீரும் பிள்ளையுடன் வெளிப்படும் நீரு

மனிதர் பாலன்றி மற்றுங் ஹறாமான மிருகங்களின் பாலுங்கள்ளு மதுபானமு முதலான மயக்கு நீர்த் தன்மையுடைய பொருள்களு மனிதருமீனும் வெட்டுக்கிளியு மல்லாது மற்றுஞ் செத்த வஸ்துக்களனைத்தும் பன்றியுநாயு மிவைமற்றொன்றிற் கலந்தீன்ற குட்டிகளு மிவைபோல்வன பிறவு நஜீசுகளைத் தொழுபவன் சரீரத்தினாலாவது பையினாலாவது தொழுமிடத்தினாவ துண்டாயிருக்கில் விலக்கும். [இனிவிலக்காதன பொடித்தசிரங்கினாற் றெள்ளினாற் கொதுகினாற் கண்டவிரத்தமு மீப்பீமுதலாவிடம் பிரியா வூனங்களுமிம் மூவிடங்களிலுண்டா யிருக்கில் விலக்காவென்றுணர்க. [சந்தேகமின்றிக் கிபுலாத்தன்னை முகநோக்கலென்று றதிபயத்த வுணர்வினுள்ளத் துடைமாபுபிசகாது நிற்றற்கு முகத்தினையே துவாக்கி மேனோக்கல் வலமிடந்திரும்பல் மக்றாஹாக்கி வலியுறுத்தி வற்புறுத்தினா ரென்றுணர்க. [அபமறைத்தலெனவே இத்தொழுகையைச் செய்யு மிருவகைச் ஜாதியாயிருக்குப் பொதுவாக நின்றமையா லவ்வபமென்னு மானமுடைய விடங்களு மிருவகையாயிற்று கொப்பூழ்முழங்காலுட்பட்டவிடமே யாடவர்க்குங் கைவிலைப்பட்ட காரிகையார்க்கு முகமு முன்கையு மன்றி மற்றவிடமடங்கலுமே பெண்ஜாதியார்க்கு மானமென்னும் வெட்கமுடைய விடங்களிவ்வனைத்து மறைத்தலென்றுணர்க. [மற்றவையெல்லாம் வெளிப்படக்கிடந்தமையா லொன்றிற்கொன் றெவ்வளவாயினும் பேதமிருந்தாலுமவ்வறிவிற்குப் பேதமின்றிச் செல்லுகையானந் நான்குமித்தன்மைத்தனவென்றுணர்ந்து கொள்க.

தொழுகையென்னும் பறுலின் றொகையுங் கூறல்.

வழுவாதேயிந்த சறுத்தோர்ப்பத்து
வகையுமுற்ற றிந்தியற்றியபின்
பழுதாங்கருமங்கள் வாராமலுட்
தயத்தாந்தவுபாவுஞ் செய்துமீண்டு
குழுவாமனிதர் மேற் பூண்டவிதி
கொண்டதொரு நாளைக் கைந்துநேரந்
தொழுவார் தொருகையுள்ள றியவிதி
தொகுத்தபறு லுபத்தொன்ப தொன்றார்

என்பது, விதியாகிய தொழுகையினெண்ணமுமதன் பறுலின் றொகையுங் கூறல்.

(இதன் பொருள்.) குழுவாகிய மனிதர் வழுவில்லாதபடி யீண்டிக்கூறிய சறுத்தோர் பத்து வகைபினையு முட்புகுந்து விளங்கிய நிந்து முஸ்லிமாகிப் புத்தியுடையராகித் துடங்கிநா நீக்கி நஜீசுகளை விலக்கிய பத்தினை மறைத்துக் கிபுலாவை முன்னோக்கிப் பாங்கும் பொழுதுந் தெரிந்து மேற்பறுலென்று நித்துப் பறுலுகளைப் பறுலென்றுண்மை பற்றிடு பிடைப்படு முறை யல்லாஞ் செய்தபின்னர் தந்த மக்குரிய சொல்லிடத்துஞ் செயலிடத்தும் பழுதாகிய கருமங்கள் வராதபடி யிச்சொல்லிற்குஞ் செயலிற்கு மெட்டாத வுள்ளத்தினைச் சத்தாகிய தவுபாவுஞ் செய்து தாழ்தரு துறை விட்டு வாழ்தரு துறையின் மீண்டு மற்பூண்ட விதித்தலைப் பெற்றுக் கொண்ட தொழுகையைப் பகலாலு மிரவாலு நாளொன்றிற் கைந்து பொழுது தொழுவார்களது தொழுகையு ளறிய விதியாகிய பறுலு பத்தொன்ப தென்றிமாம் சொன்னார்க ளென்றவாறு.

[கருமங்கள் செயல்களின் பாங்கிற்சிறந்த காரணங்களெட்டு மாகையாலவை சொல்லிடத்துஞ் செயலிடத்தும் பிறந்தற் கிடையூறிலாவது வந்தமைதல் பழுதிலாத கருமமா மவ்விடை யூறினை நீக்குதற்காகத் தானியற்றுதற் மருத்தாமென்று முழுமுதலோனேவுதற் கருத்தாவென்று முணர்ந்து தன்னியற்றலவேவலுக் கிணக்கபடுமோ மாறுபடுமோ வென்று மாறுபடுகிற் றண்டனைக்குட் படுவேனே யென்று பயப்பாடுள்ளத்தினுக்கி நின்னே வலாடியே னியற்றுஞ் செய்கை முதலாகிபவற்றுள் மாறுபடாது காத்தும் படுகில்யான் செய்த குற்றத்தை நின்னருளினாற் பொறுத்துக் கொள்வா யென்னுரைத் துலகமாகையால் வருமிக்குறைவானக் கருமங்களைக் கருத்தினால் விட்டொழிந்து மேலின்பமாகிய வேவுதற் கருத்தாவை யடுத்து நிற்றற்காகத் தவுபாவுஞ்செய்து மீண்டுமென்று கூறினார். [சொல்லொடு செயலுக்கொண்டு நின்றமையிற் றவுபாவையுஞ் செயற்பாலதாக்கினு ரிதிற்பயன் படுவென வெல்லா முய்த்துணர்ந்துகொள்க.

தொகுத்த பறுலை வகுத்துக் கூறல்.

நிய்யத்து மவ்வல் தக்பீறும்
நிற்கு நிலையும் பின்பாத்திஹாவும்
மெய்யாம் றக்கூவுடன தன்றரிப்பும்
மீளுமிகுதித்தால தன்றரிப்புஞ்

செய்யுமுன் சுஜூத தன்றரிப்புங்
சேர்ந்த விடையிருப்ப தன்றரிப்புந்

தொய்யும் பின்சுஜூத்தின் றரிப்புஞ்
சொல்லும் பறுலிது பதினாலாமே.

மற்றபறுலைந்து மொடுக்கத்தினில்
வருமத்த ஹிய்யாத்த தனிலாகும்

உற்றவிருப்பு மத்தஹியாத்தும்
ஓதுஞ் சலவாத்து மொழுலாமும்

பற்றிப்பறு வெல்லா மடவடவாப்
பாங்க முடித்திடிலாகும் பின்னர்

முற்றும் பறுலுபத் தொன்பதிலும்
மொழியுஞ் சுறுத்தோதுவாமே.

இரண்டுகவியு மொருதுடர்

என்பது முன்னர் தொகுத்துக்கூறிய பறுலுகளை வகுத்துக் கூறல்.

(இதன் போருள்.) 1-வது நிய்யத் துள்ளத்தில் வைத்தலும், 2-வது முற்பட்ட தக்பீறுசொல்லுதலும், 3-வது நிலையினிற்றலும், 4-வது பாத்திஹா அந்நிலையினுதலும், 5-வது றுக்கூவிற்போதலும், 6-வது அதனிற் றரிபடலும், 7-வது அதனைவிட்டு இருத்தித்தானிலையின் மீளுதலும், 8-வது அதனிற்றரிபடலும், 9-வது முந்திய சுஜூதிற் போதலும், 10-வது அதனிற்றரிபடலும், 11-வது அதனைவிட்டிடையி னிருந்திடலும், 12-வது அதனிற்றரிபடலும், 13-வது பிந்திய சுஜூதிற்போதலும், 14-வது அதனிற்றரிபடலும்மாக வீண்டுவகுத்த பறுலுபதினாலாகு மற்ற பறுலைந்தும் றக்அத்தினுடைய வீற்றில்வரும் அத்தஹிய்யாத்திலுண்டாவதாம், 1-வது அத்தஹிய்யாத்திற்காக றக்அத்தினீற்றி லிருந்திடலும், 2-வது அத்தஹிய்யாத்தினையோதலும், 3-வது அகன்புறத்தே நபியுல்லா பேரிற் சலவாத்தோதலும், 4-வதுவலப்பாக முற்பட சலாம் சொல்லுதலும், 5-வது மேற்சொல்லிய பறுலுகளை யெல்லா முந்தியது முந்திப் பிந்தியது பிந்தி யொன்றேடொன்று தாமதியாது பற்றிக்கொண்டு சொல்லு மொழுங்கு மொழுங்காகப் பாங்கு பெறமுடித்திடு தலுமிவ்வைந்து மப்பதினான்குமாகப் பத்தொன்பதாகு மிதன் பின்னர் முற்றுப் பெற்ற பறுலுபத் தொன்பதிடத்து மிமாம்கள் மொழிந்த சுறுத்துக்களை யாமு மெடுத்துக்கொண்டு கூறுவாமென்றவாறு.

மற்றப் பறுலைக்கு மொடுக்கத்திலே யென்று மிருத்தமை யித் தொகையினை யெண்ணினூர்க்கு விடையாகவு மவ்வணக்கமுற்ற முடுகுதலாகவுங் காட்டியதாயிற்று. ஆயினும் பதினூன்கென்று மைம்தென்றும் பிரித்தமை யஃதி றக்அத்திற்கு மிஃததனை முடித் தற்கும் பகுந்து நின்றதாயிற்று. இதனூலொருவன் அத்தஹிய்யாத்தி லிமாமைத் தொடர்வானுகில் அதனையு மதற்கு முந்திய வினைகளை யுஞ் சென்றெண்ணிக் கொள்ளாமையு மன்றிறுக்கூவிற் றொடர் வானுகி லஃததனியுமதற்கு முந்திய வினைகளையுஞ் சென்றெண்ணிக் கொள்ளுதலாலு மென்றுங்காள்க.

(இனிப்பறுலின் சறுத்துகளைக் கூறல்.)

நிய்யத்தின் சறுத்துகளை கூறல்.

உன்னு நிய்யத்தில் சறுத்தாறென்றூர்
உலகமியாவையுங்காண் போன்றிரு
முன்னேதொழுகிறேனெனு நிய்யத்து
முதிரும்பறுலானூற்பறுலெனவும்
இன்னுமா தாவானூலதாவெனவும்
இயம்புஞ்சலாவானூற்கலாவெணவும்
பன்னு நிய்யத்தைக்கல்பாலுன்னிப்
பகருந்தக்பீரிற்சேர்த்திடலே.

என்பது, முன்னர் வகுத்த பறுலுக ளனைத்திற்கும் வழுவுதல் கொள்ளாது தாமேசென் றெண்ணிக்கையு ளகப்படவியற்றுங் கார கமும் ஞாபகமுமாகியவெதுக்க யென்னுஞ் சறுத்துக்களைக் கூறு வான் றுவக்கி யப்பறுலுகளின் முதலாகிய நிய்யத்தின் சறுத்து களைக் கூறல்.

(இதன் பொருள்.) நினைக்கு நிய்யத்திற்குரிய சறுத்தா றென்றி மாம் சொன்னூர்கள். 1-வது உலகங்களியாவையு மறையாதுதானூ நிற்பவன் றிருமுன்பாக வணங்குதலைச் செய்கிறேனென்று வணக் கத்தை யுமதன்செய்கையையு நாடுதல் 2-வது அவ்வணக்க மவன் மேல் விதியாயதாயின் பறுலைச்செய்கிறேனென்று நாடுதல், 3-வது அவ்வணக்கமதற்குரிய பொழுதோடுசெய்கைகொண்டு முடிவ தாயின் பொறுத்தபொழுதி னிறுக்கும் பொலிகடனேபோல் அவ் வணக்கமதாவாகச் செய்கிறேனென்று நாடுதல், 4-வது அவ்வணக்க

முரிய பொழுதன்றி மற்றோர்பொழுதின் முடிவதாயின் அவதி
நீங்கியப் பரலிறுக்குமொப்பியகடனேபோல் அவ்வணக்கம் கலா
வாகச் செய்கிறே னென்று நாடுதல், 5-வது அந்நாட்டத்தினைக்
கல்பாகிய உள்ளக்கருத்தா லுறுதிப்படுத்தல், 6-வது அவ்வுறுதியை
நாவாற்சொல்லுந் தக்பீரிடத்திற்சேர்த்து முற்றுவித்தல் ஆகிய
விவ்வாறுமா மென்றவாறு.

இவ்வாறுந் தொடர்ந்த வாக்கியமாவன லுஹறுடைய தொழு
கையை யதாவாகத் தொழுகிறேன், லுஹறுடைய தொழுகை
யைக் கலாவாகத்தொழுகிறேன் லுஹறுடைய பறுலை யதாவாகத்
தொழுகிறேன் லுஹறுடைய பறுலைக்கலாவாகத் தொழுகிறேன்,
லுஹறுடைய பறுலாகிய தொழுகையை யதாவாகத் தொழு
கிறேன். லுஹறுடைய பறுலாகிய தொழுகையைக் கலாவாகத்
தொழுகிறேன் என்பன மற்றவுரிய பொழுதையு மொட்டிக்
கொள்க. [காண்பவன்றிருமுன் னென்பதனை முற்படுத்தினும்
படுத்தாதேனுமமையும். [நிய்யத்தைச் சேர்ப்பதென்று
போந்தமையாலத் தக்பீறின் முதலெழுத்தோடு மொன்றியந்
நாட்டங் கடையெழுத்தோடு முடிபவருதல்வாசியாயிற்று. அத்
தொழுகைமுற்றினும் வருதலுமத்தக்பீரிற் பிரியாது அந்த அத்
தொடர் வாக்கியத்தை நாவால் மொழிதலு மவ்வுரிமையின்மை
யால் சுன்னத்தாயிற்று. [பறுளானுலென்றவெது வினை நீக்காது
மறையேற்றியல்லாதானுலென்று நபிற் பாற்படுத்திலதனை யெடுத்
துக்காட்டல் சுறுத்தன்மைவலியுறுத்திற்றென்றுணர்க. இந்நபியில்
காலமுங்காரணமுற்கணித்த நபிலுமிவ்விரண்டுங் கணியாத நபிலு
மெனவிருவகையை இவற்றுள் தருவிகுலுகா, வித்று இரண்டு
பெருநாள் இரண்டுகிராணம் மழைமற்ற பறுலுகளைத் தொடர்ந்த
முவக்கதாவாகிய றவாத்திபுகளைந்து மிவைபோல்வன பிறவுங்கால
முமன்றிக்காரணமு மிவ்விரண்டுங் கொண்டு நின்றதொழுகைகள்
இவற்றிற்கு இன்னதொழுகையைத் தொழுகிறேனென்று செய
லையும் தன்காரணக்குறியையு முன்னர்பறுலினுக்குரைத்தது போல
நிய்யத்து வைத்தலு மமையுமென்றுணர்க. [அதாவான லதாவென்
றுங் கலாவானுல் கலாவென்றுமிவர் கூறிய சுறுத்திற்கு மோரேது
வினைக் கூறினமையா னிவ்வேது மயங்கும் போது மயங்காப்போது
மதாவென்று நிய்யத்துக்கலாவில்லைவப்பினுங்கலாவென்றுநிய்யத்து
அதாவில்லைவப்பனு மந்நிய்யத்துச் சென்றெண்ணப் படுதாமென்
றுணர்க. மற்றமைந்தகருத் தெல்லாம் வெளிப்படக்கிடந்தனகண்டு
கொள்க. [யாதோர்காரணத்தாற் சூரியகிரணம் வெளிப்படாது
போது மயங்கவொருவன் அதாவென்று தொழுத தொழுகை
கலாவாயினுங் கலாவென்று தொழுத தொழுகையதாவாயினு
மந் நிய்யத்துச் சென்றெண்ணப்படுதலா மித்தொழுகையு

மொப்ப முடிந்தமையுணர்க. [இக்கவியிற் போந்தபொருள் எல்லாவுலகங்களு மவ்வுலகங்களினமைந்த வெல்லாவுயிர் களி னெல்லா வியற்கையு மெல்லாச் செயற்கையு முற்றவுணர்ந்து காணும் வல்லபத்தினிறைவன் றிருமுன்னர் றெதிர் நோக்கி நின்று நினைவா நினைத்துச் சொல்லாமற் சொல்லி யுறுப்புகளின் செயற் களாற் செய்து இன்னபொழுதி னென்பேரில் விதியாகிய பறுலினை யன்னபொழுதே யிறுத்தலாக அன்று யிறந்துபோய் பொழுதில் விதியாகிய பறுலினை யிப்பொழுதி லிறுத்தலாகத் தொழுதலைச் செய்ய நின்றேனென்று வணக்கத்தி னியலோடு செய்கையினை நாடு நாட்டத்தினை யுள்ளத்தாற் கருத்துற நிலைப்படுத்தி யதனை நாவா லுரைக்குந் தக்பீரிற் சேர்த்து முடித்திடலா மென்றுணர்க. இதற் காறு சறுத்து மதற்குப்பத்து சறுத்தும் பேணிக்கொள்ளுகை யாலுங் கருத்து நாவு மெத்துமைப்படுதலாலு முரிமைப் பட்டொன் றோடொன்று தொடர்ந்து தோன்றிற்று நிற்றலொன்று கொள்க. யாவையுங் காண்போன்றிரு முன்னென்றிறைவன் றற்குணப்பண் புப், பெயராற் கூறினார். தொழுபவன் றன்னையுந் தன்னினைவையுந் தன் சொல்லையு நிலைமுதலாகிய தன்செயல்களனைத்தினையுங் காணா நின்றோனென்றுள்ளத்தி னச்சத்தோடு வேறுநினைவு தோற்றா தடங்கி யொடுங்கித்தான் கொண்ட அடிமைத் தன்மையை யவனி வன் றன்முகத்திலெறியா தொப்புக் கொள்ளச்செய்ததற்கு மோராடியான் றன்னாளுடை யிறைவனி யாவையுங் காணா நின்றோ னென்றறுதியவன் கருத்திற்பயக்குமா யினவன்றனக்கியா தொரு கருமத்திலுந் தன் சம்மதிப்புக் கொள்ளாதவன் சம்மதிப்போ கொண்டு மவனுடைய வேவலினையேயல்லாது மற்றொன்றினையு மெடுத்தற் குரியனாகா னென்பதற்கு மென்றுணர்க. [உறுதன வெல்லாமுய்த் துணர்ந்து கொள்க.

தக்பீறின்

சறுத்துக்களைக் கூறல்.

தக்பீறுதனில் சறுத்தீரைந்து
சாற்றக்கேண்முனம் அல்லாஹு
அக்பறென்னுஞ்சொல் அறபாலுரை
யானவெழுத்தொன்றும் விடாதேசத்து
மிக்க அலிபுங் ஹேயும் பேயும்
மிகவு நீட்டாதே சொல்றேக்கு
சுக்கூன் படச்சொல் செவிகேட்கச்சொல்
தொடாடவானிலை தனின்முடியே

என்பது, தக்பீறினியைந்த சறுத்துக்களைக் கூறல்.

(இதன் பொருள்.) முந்திய நிய்யத்தோடு முடிவுபடுத்திய விரண்டாம் ப்றுலாகிய தக்பீறு சொல்லுகையின் கண்ணே பத்து சறுத்துண்டதனை யான்கூற கேட்பாயாக. 1-வது, கருதிய கருத்தோடு முற்பட அல்லாஹு அக்பரென்ற சொல்லினையறபுப்பாஷையால் மொழிவாயாக 2-வது அவ்வாக்கியம் பேணிக்கிடந்த வெழுத்துக்களி லோரெழுத்தையேனும் விடாது மொழிவாயாக, 3-வது அதிலுள்ள சத்தாகிய வொன்றெழுத்தையும் விடாது மொழிவாயாக, 4-வது அதிலுள்ள அலிபாகிய அகரத்தையா காரமாக நீட்டாது மொழிவாயாக, 5-வது அதிலுள்ளஹேயாகிய அங்காத்தலிட மாக்கிய வாய்தவெழுத்தினோசைகொண்ட குற்றெழுத்தினை நெட்டெழுத்தினோசை கொள்ளாது மொழிவாயாக, 6-வது அதிலுள்ளபேயாகி வோசையுரப்பிய பகாவகரத்தை பகாரமாக நீட்டாது மொழிவாயாக, 7-வது அதினீற்றெழுத்தாகிய வல்லினறகரத்தினை யொற்றாக்கிய மொழிவாயாக, 8-வது இவ்வாக்கியத்தினோசையை நின்செவி கேட்க மொழிவாயாக, 9-வது அதினெழுத்துக்களின் றொடரொழுங்காக முடிப்பாயாக, 10-வது இவ்வாக்கியத்தினை நிற்குநிலையின் கண்ணே முடிப்பாயாக வென்றவாறு.

[அல்லாஹு அக்பறை யறபாலுரையென்று பின்னரதனெழுத்திற்கு மோசைக்குந் திறங் கூறினமையிற் பொருட்பேதக மின்றி முடிதல் கருத்தாயிற்று. ஆகையாலிவ்வாக்கிய மொழிதற்கேலா வொருவன் வேறுமொருதிக்று முதலாகிய தறப்புப்பாஷையாற் கூறாது தன்பாஷையாலி தன் பொருள்சிதையாது கூறுவனாயினுந் தக்பீறாமென்பதாயிற்று. வல்லானொருவன் தட்பொருட் பேதகப்படா தறபுப்பாஷையன்றிப் பிறபாஷையான் மொழிவானாயிற் கூடாதென்பதூஉமிங்ஙனந் தொழுத தொழுகையுங் கலாச் செய்வானென்பதூஉங் கூறாக்கூற்றா விளங்கிற்று இதன் விரிவுய்த்துணர்ந்து கொள்க.

கியாமின் சறுத்தினைக் கூறல்,

நிற்குங்கியாமுலே சறுத்தொன்றென்றார்
நிலைதனினின்றன் முதுகென்பெலாம்
ஒக்கவேநேரே நிற்பதாகும்
ஒருகுறைவின்றி யொருத்தன்வலப்
பக்கம்வளையினு மிடங்கோணினும்
பணியினு முன்பினிறு மாக்கினுஞ்
சக்கின்றிக்கியாம் போதாதென்று
சாற்றினார் நல்லவுலமாக்களே.

என்பது, நிற்குநிலையாகிய வியாமினி யைந்த சறுத்தினையு மதன் வழுவினையுங் கூறல்.

(இதன் பொருள்.) நிய்யத் தோடொன்றிய தக்பீரிற்கு நிலை ஞகியாகியா மென்னு நிலையியைதற் கொரு சறுத்துரிய தென்றி மாம் சொன்னார்கள். அஃதாவது நின்னுடைய முதுகுபுறத் தூணக் கிடந்த வென்புக் கணுக்களெல்லா மொன்றிச் செவ்வையா நடுநிலை பொருந்தி நிற்றல் இனி யொருத்தன் றன்னுடலி னெச்சுக் குறை பாடுக ளொன்று மில்லான் வலப்புறம் வளையினு மிடப்புறங் கோணினும் முற்புறம் பணியினும் பிற்புற மிறுமாப்பினு மந்நிலையத் தொழுகையி னிலைபாகா தென்றையமற நன்குணர்ந்த வுலமாக்க ளுரைத்தார்க ளென்றவாறு.

அன்றியாதொரு குறைபாட்டினு லொருவனிக் குலாலலோடு நிற்பானு யினவனது நிலை யந்நிலையாகை யாலவன் றெழுகைக்கு மதுவே நிலையா மென்றுணர்க.

பாத்திஹாவின்

சறுத்து மதன்வழுவுங் கூறல்.

பாத்திஹாவினில் சறுத்தெட்டென்றார்
பகருமெழுத் தொன்றும் விடா தேசத்தும்
ஏற்றபயனைப் பேதகங்களாக்கும்
இருரூபு வாராதாகப் பேணிச்
சாற்றுந் தொடராகவடவு மாகத்
தக்கசெவி கேட்கவோதலும்
வேற்றுப் பாஷையா லோதா மலுங்
மேவுநிலை தனின் முகித்திடலே.

என்பது, பாத்திஹாவினியைந்த சறுத்துக்களையு மதன் வழு வினையுங் கூறல்.

(இதன் பொருள்.) பாத்திஹாவோதலின் கண்ணே யுள்ள சறுத் தெட்டன்றிமாம் சொன்னார்கள். அவை 1-வது அதனி லுள்ள வெழுத்துக் களினொ ரெழுத்தினையும் விட்டிடா தோதலும் 2-வது அதனிலுள்ள சத்தாகிய வொற்றெழுத்தினையும் விட்டிடா தோதலும், 3-வது அஃதேற்றுக் கொண்ட பயன்களைப் பேதக மாக்கி விக்கு மிருரூபாகிய அறிகுறி தோற்றுவு யிரியக்க மனுகாத படி யோதலும், 4-வது அதன் சொற்றொடர்பாக வோதலும், 5-வது அதன் வாக்கியங்கள் வைத்த நிரையினெழுங்காக வோத

லும், 6-வது ஓதுவான் றன்செவி கேட்டுக்கொள்ள வோதலும், 7-வது அறபுப் பாஷையாலோதலும், 8-வது முன் சொன்ன நிலையினிடத்தே முற்றவோதி முடித்திடலுமாகிய விவ்வெட்டு மாமென்றவாறு.

[விடாதென்னு மெதிர் மறையெச்ச மோதலோடு முடிந்தது பாத்திஹா வென்றதனுளமைந்தது கோபிசுமிலென்று யேல பின்னராமீன் கூறுதல் சுன்னத்தென்று முன்னர் அவூதோதுதல் சுன்னத்தென்று மேலே விதந்து கூறுகையா லதனின மைந்ததாயிற்று. சுறுத்துக்களின் வகைகூறு மொழிகளி னினஞ் செப்பில் எழுத்தினை விட்டோதல் சத்தினை விட்டோதல் பேதகவி குறுபுவா வோதல் தொடர்பு விடவோதல் ஒழுங்கு கெடவோதல் செவி கேளாதோதல் வேற்றுப் பாஷையாலோதல் மற்றோரிடத்தின் முகித்திடல் ஆகியவிவ்வெட்டானு மதன் சுறுத்துக்க ளொழிந்தமையாற் பெரும் பான்மையுங் கூடாதென்பதாயிற்று சிறுபான்மையிதன் றொடர் பிற்கிடையி லிமாமுடைய வோதலிற் பொருத்தாலெடுத்துக் காட்டலு மவரோதலிற்கு ஆமீன் கூறலு மிடைப்படுமாயிற்றொடர்பு நீங்காமற் றோர் காரணத்தா லொருத்திக்று தஸ்பீஹூ இடைப்படுகிறும்வாய்வாளாமை யிடைப்படுகிலுந் தொடர்பு நீங்கு மென்பதற்கும் பேணிச் சாற்றுந் தொடராக வென்றுரென்று கொள்க. அறபுப் பாஷை யாலோத லெனுது வேற்றுப்பாஷையாலோதாமலுமென்று வலி யுறுத்தியதால் யாதானு மோரிடை யூறினாற் படித்துக் கொள்ளற் கேலாதொருவனத் தொழுகை யினிடத்திற் பாத்திஹாவிற்காக அப்பாஷையிலுள்ள திக்றுகளினை தங் கொண்டு வருதலு மந்தித்திக்றுகளு மதனெழுத்தின் றொகையிற் குறையாம லிருத்தலுமன்றியு மது தானு நயப்படானுகிற் பாத்திஹா வோதலி னளவுவாய் வாளாது கியாமில் நிற்றலே யன்றி வேறு பாஷையான் தன் பொருள் கொள்ளக் கூறிக் கோடலாகா தென்பதாயிற்று. இதற்குத் தக்பீறு முரணிய தென்றுணர்க.

அதனை மாறுபாஷையாற்கூறலா மென்பதாயிற்று. பாத்திஹாப் பாடமில்லாதவன் குறுஆனிலே ஆயத்துத் தொடர்பாக வோதிக் கொள்ளுவன் றொடர்பாக மன்னமில்லாதவன யலகூறத்தினுமுளவாயினு மேழாத்தேயோவதுவ னில்வோதலிருவருக்கும் பொதுவுமா மென்றுணர்க. இவ்வனைத்தும் வேற்றுப் பாஷை கொள்ளாதாயிற்று. [தொழுவார் றக்அத்தனைத்தினு நிலையில் பாத்திஹா முற்றுப் பெறுதலு மோரிமாமைப் பிந்தித் தொடர்ந்தவனுக்கு முற்றுப் பெருமையு முளவாகையால் மேவு நிலைதனின் முகித்திடலென்றதற் கெதிர் மறை மேலா நிலைதனின் முகித்திடலன்றென்பதாயிற்று: இவற்றிற் காந்திரிபுகள் சிலவுள வெனுமுய்த்துணர்ந்து கொள்க.

றுக்கூவுந்தரிப்பிலுருஞ்

சறுத்துகளைக் கூறல்.

உற்றறுங்கூவினில்சறுத்திரண்டாம்
உள்ளங்கைமுழுங்காலிரண்டிற்
பற்றுமளவினிலுமராத்தாழாப
பணிதல்பணிதலான்மற்றொன்றினைச்
சற்றுங்கருத்தினினாடாதாதல்
தரிப்பிலொருசறுத்துண்டுணர்க
அற்றநிலையினின்முதுகுசீரம்
அசையாமலசைவொடுங்கலாமே.

என்பது, முந்நினுபினுக்கடுத்த பறுலாகிய றுக்கூவினியைந்த சறுத்துக்களையு மதிற்றரிபடலினியைந்த சறுத்தினையுங்கூறல்.

(இதன் பொருள்.) தொழுகையி னிலையினுக்கடுத்த றுக்கூவி னிடத்திரண்டு சறுத்துண்டாகும். 1-வது, இரண்டுள்ளங்கையு மிரண்டு முழுங்காலின் முட்டிடத்திற் பதியவைக்குமளவின்கண் தலையுயராமலுந் தாழாமலுமொப்பக்குனிதல். 2-வது, அக்குனி தலிக் கெய்துவான் மற்றொரு கருமத்தை யெவ்வளவேனுங் கருத் தினிற்குறித்து நாடியெய்ததால் அந்தறுக்கூவிற் றரிபடுதலி லொரு சறுத்துண்டதனை யுணர்ந்து கொள்வீராக, அஃதாவது ஏகநிலை யினரைப் பங்காகிய றுக்கூவிற்றரிபடுதலின் முதுகுஞ் சிரமுமசையா மலுடலமசை வொடுங்கி யிருத்த லென்றவாறு.

[பணிதலான கருத்திற் மற்றொன்றினை நாடாதாதலன்றி மற் றொன்றினை நாடி யிதனைக்கொண்டு முடிப்பனாயினவன் றுக்கூவு தன் பெயர் கொள்ளாது ஆகையால் ஒருவனேதலி னுரியசசதாவை நாடிக் கியாமாகிய நிலையினைவிட்டுக் குனியும்போது னற்றநிலையில்லாத போகிலதனை றுக்கூவென்றமைத்துக் கொள்வானாயினது பொருந் தாது அவனிலையின்மீண்டும் பின்னரதற்குரிய கருத்தோடெய்துமா யிற் பொருந்துமென் றுணர்க.

இருத்தித்தாலிலுந்தரிப்பிலுஞ் சறுத்துக்களைக் கூறல்.

சறுத்துமுன்றென்றுரிருத்தித்தாலிற்
சாற்றுமிருத்தித்தாறனக்கென் றுன்னிக்

குறித்ததலையினையுயர்த்துதலுங்
கோணுமலர்தநிலையைநேரே
நிறுத்துதலுமந்தஇருத்தித்தாலை
நீளாதுகொள்ளலதிற்றரிப்பில்
உறுத்தசறுத்துளதொன்றசையா
தொடுங்கிநிற்றலென்றறிந்துகொள்வாய்.

என்பது, முன்னைய றுக்கூவினுக்கடுத்த பறுலாகிய இருத்துத தாலினியைந்த சறுத்துக்களையு மதிற்றரிவிளியைந்த சறுத்தினையுங் கூறல்.

(இதன் பொருள்.) இருத்தித் தாலின்கண் மூன்று சறுத் தென்றிமாம் சொன்னார்கள். 1-வது சொல்லா நின்ற இருத்தித் தாலாகிய செவ்வனிலை தன்னளவின் மீண்டக்கென்று ளுளத்தின்னி றுக்கூவிலகுறித்தத்தலையதனை யுயர்த்துதலும், 2-வது கோணுமலர் நிலையினைச் செவ்வகையாக நிறுத்துதலும், 3-வது இவ்விருத்தித் தால் நிலைபாத்திகாவோது பொழுதளவு நீளாதாகக்கொள்ளலு மாகிய விம்மூன்றுமாம். அந்நிலைபிற்றரிபடுதலி லுறுதிப்பட்ட சறுத்தொன்றுளது. அஃதசைவற்றுலடமொடுங்கி நிற்றவென்ற றிந்து கொள்வாயாக வென்றவாறு.

[தனக்கென்றுன்னித் தலைமையுயர்த்துத லெனதே மற்றொன் றிற்குத் தலையையுயர்த்துதல் பொருந்தாதென்றுணர்க. ஆகையால் ஒரு வனியாதானு மொருகாரணத்தாற் றிடுக்குற்றுத் தன் றுக்கூவி னிடத்திற் றலையினையுயர்த்தினுனுபி னவ்வுயர்த்த லிருத்தித்தாலிற் குரிய வுயர்த்தலாகாதென்றுணர்க.

சுஜூதின்சறுத்துக்களைக் கூறல்.

உண்ணுஞ்சுஜூதிலேசறுத்தாறென்றார்
உரைக்கக்கேணெற்றித்தரையில்வைத்தல்
அன்னவியல்போடேதுறந்துவைத்தல்
அகங்கைமுழந்தாளும்பாதவிரற்
றன்னையகம்பற்றத்தரையில்வைத்தற்
றலைபிடர்கனம்பொறுக்கவைத்தற்
பின்னுயர்ந்துமுன்பணியக்கொள்ளற்
பேணுஞ்சுஜூதன்றிப்பணியாதுமே.

என்பது கூறிய விருத்தித்தாலுக் கடுத்த பறுலாகிய சுஜூதி அமைந்த சறுத்துக்களைக் கூறல்.

(இதன் பொருள்.) முன்னரெடுத்துக் காட்டிய சுஜூதின் கண்ணுறு சறுத்தென்றிமாம் சொன்னார்க ளதனை யானுரைக்க நீ கேட்பாயாக. 1-வது வணங்குந் தலத்தி னெற்றியிற் சிறிது பட வைத்தலும், 2-வது அந்தவியல் பாகிய நெற்றுக்கு மத்தலத்திற்கு மிடையிலியா தானுமென்று மறைத்துக் கொள்ளா மற்றுறந்து வைத்தலும், 3-வது அகங்கை யிரண்டையு மிரண்டு காலின் விரல் களினுட் புறம் பொருந்த அவ்வணங்குந் தலத்தில் வைத்தலும், 4-வது தலையின் பாரமும் பிடரியின் பாரமு மந்நிலத்திற் பொறுக் கும் படியாக வைத்தலும், 5-வது பிற்றட்டு மதன் பக்கமு முயர்ந்து முற்புறமாகிய தலை பணிந்திருக்கக் கொள்ளலும், 6-வது சுஜூதிற் குத்தாழாது மற்றொன்றூற் றூழாமையு மாகிய விவ்வாறுமா மென்ற வாறு.

தரையென்ற தீண்டு வணக்கத்தைச் செய்பவன் செய்கைக்குக் காரணமாகிய நிலனென்றுணர்க. அதனை நஜீசு நீக்க லென்னுஞ் சருத்திற் கூறப்பட்டது. [அன்னவியல் போடே நெற்றியைத் துறந்து வைத்த லென்ற மிகையான் நிலனு நெற்றியும் பொருந்த லாகிய வியல்பன்றி யந்நெற்றியையா தொரு காரணமுமின்றி மறைத்து வைத்தாலு மல்லது தலைப்பாகை நான் மூந்தி மறைத் தாலு மல்லது தன் மேலணியு மாடையாயினு மற்றொன்றாயினு மவ்விரண்டிற் கிடையின் மறைத்தாலு மிதுவு மிவனசைதலோட னசயுமாகி லந்த சுஜூது போதலாகா தென்றுணர்க. [காரணத் தான் மறைவு பட்டாலுந் தன்னசை தலோடசையாத பண்ட மிடைப்பட்டு மறைத்தாலு மந்தசுஜூதா மென்றுணர்க. [இனி சுஜூதன்றிப் பணியாது மெனவே பணிவானுயிற் போதா தென்று ணர்க. ஆகையால் ஒருவனிருத்தித் தாலினின்று முகங்குப் புற்றுச் சுஜூதிடுந் தலத்தில் வீழுமாயின் மீண்டிருத்தித் தாலில் வந்து சுஜூதிற்குப் போதல் வாசிப்பாயிற்று. [இனி யொருவன் சுஜூதினை நாடிக்குனியும் போதினெற்றிற்குப் புற்று வீழுமாயி னவன் அந்நெற்றியினுன்று தலைக் கருதுவாயினுற் கூடாதன்றியர் நாட்டமே யுளதாயில் சுஜூதிற் சென்றெண்ணப்படு மென்றுணர்க. இவைகளிலமைந்த விகற்ப வெல்லாமாந்து கண்டு கொள்க.

சுஜூதின் வக்கணையுந் தரிபின் சறுத்தினையுங் கூறல்.

செய்யுஞ் சுஜூதினி னெற்றியன்றிச்
சிரமூச்சுக் கன்னற்புறம் வைக்கினுங்
கையுளகமன்றி விரலூன்றினுங்
காலுளக மன்றிப் புறம் வைக்கினு
மெய்யாஞ் சுஜூதுதான் போதாதென்று
விளம்பினார் சுஜூத் தரிப்பில்
உய்யுஞ் சறுத்தொன்றுண்டஃ தசைவற்
றொடுங்கலாகு மென்றறிந்து கொள்வாய்.

எண்பது, சொன்ன சுஜூதின் சறுத்துக்களின் மொழுமாறு வமைந்த வழுவினை விகற்பித்துக் காட்டியதனைத் திறம்படுத்தலு மதன்றரிப்பின் சறுத்தினையுங் கூறல்.

(இதன் பொருள்.) செய்கின்ற விந்த சுஜூதின் முன்ன ரெடுத்துக் காட்டிய சறுத்துக்களி னெற்றியினை யந்நிலத்தில் வைத் தலன்றித் தலையினை வைத்தாலும் மூக்கினை வைத்தாலும் கன்னப் புறத்தை வைத்தாலும் அன்றியு முள்ளக்கைகளை வைத்தலன்றிப் புறங்கையை வைத்தாலும் கையருகினை வைத்தாலும் விரனுனிகளா லூன்றினாலும் அன்றியும் பாதவிரல்களினுட் புறம் வைத்தாலன்றி விரனுனியை வைத்தாலும் புறங்காலை வைத்தாலு மெய்மையாகிய சுஜூதுகூடா தென்றிமாம் சொன்னார்கள். அந்த சுஜூதுடைய தரி படுதலிற் பிழையற்ற சறுத்தொன்றுண்டு அஃதாவது தசை வில்லாம லுடலு மொடுங்கியமைதலாகு மென்றறிந்து கொள்வாயாக வென்ற வாறு.

[கையுளகமன்றிப் புறம் வைக்கினு மென்றது விரலூன்றினு மென்றார் புறமகத்தார் போந்த பொருளாயுமிது தோற்றுப் பொரு ளாயுமிது தோற்றுப் பொருளாயுங் கிடந்தமையா னென்றுணர்க. கால்விரற்கு மிம்முறையே யுய்த்துணர்ந்து கொள்க.

இடையிருப்பின் சறுத்தும் பின் சுஜூதிருப்பின் முறையுங் கூறல்.

இந்த சுஜூதிரண்டாவதற்கும்
இடையிலிருப்பினில் சறுத்து மூன்றும்

அந்தவிருப் பினைச் செவ்வையாக்கல்
அதற்கன் றிச்சிர மூயர்த் திடாதற்
சுத்தி நீளாம லொருமட்டாதற்
றரிப்பிற் சறுத் தொன்றுமசை வொடுங்கல்
பிந்தி வருஞ்சுஜூ தொடுதரிப்பும்
பேணுமுன்னைய போலாகுமே.

என்பது, இரண்டு சுஜூதிக்கு மிடைப்பட்ட விருப்பின் சறுத்துக்களையும் அதிற்றரிப்பின் சறுத்தினையும் பிந்திய சுஜூதிற்றரிப்பின் முறையினையுங் கூறல்.

(இதன் பொருள்.) இப்போது சொன்ன சறுத்துக்களையுடைய சுஜூது இரண்டாமுறை வருதற்கு மிதற்கு மிடையிலிருக்கு மிருப்பின்கண் சறுத்று மூன்றாகும். 1-வது அவ்விருத்தலைவு கொள்ளாது செவ்வையாகச் செய்தல், 2-வது அதற்கல்லாது வேறொன்றிற்காகத் தலையையுயர்த்தாதற் கென்றுள்ளி யுயர்த்தல், 3-வது குலறந்த அத்தஹிய்யாத் தோதலினளவு நீளாமலொரு மட்டாதல் அதிற்றரிப்பிலொரு சறுத்தாகும் அஃதுடலமசை தலொடுங்கி யிருத்தலாமன்றியினி வருஞ் சுஜூதிற்கு மதிற்றரிபடுதலிற்குஞ் சறுத்துக்கள் முன்னர் பேணிச் சொன்ன சுஜூதிலுந் தரிப்பிலு மமைந்த சறுத்துக்களை யொத்தலவா மென்றவாறு.

[சந்தியென்ப திடையிருப்பு அதற்கன்றிச்சிரமு யர்த்திடாத லெனவே மற்றொன்றினு லுயர்த்திடலாகா தென்பதாயிற்று. [ஆகையால் ஒருவன் சுஜூதினொரு முண்ணுனியாவது தேளின் கொடுக்காவது தெற்றியினூன்றலிற் றலையெடுத்தானாயின் மீளவுஞ் சுஜூதினெய்தியிருப்பில வருவானென் றுணர்க.

பிற்பட்ட அத்தஹிய்யாத்
திருப்பின் சறுத்துக்களைக் கூறல்.

பேசும்பதினைக் தாம்பறுலாகிய
பிற்பட்ட அத்தஹியாத் திருப்பில்
ஓசைபெறவந்த சறுத்திரண்டாம்
உணர்த்த நன்றாகவுணர்ந்து கொள்வீர்

வாசமுளவுந்த முதுகுதன்னை
வளையாமற் செவ்வையிருத் திடலும்
மோசமணுகாமலதற் கென்றுன்னி
முதிருந்தலை பிளை யெடுப்பதாமே.

என்பது, மருத்தபறுலுஞ் சறுத்தும் பொதிந்த றக்அத்தி ணீற்றில்வரு மத்தஹிய்யாற்திற்குஞ் சலவாத்திற்குமாகிய விருப் பினியைந்த சறுத்துக்களைக் கூறல்.

(இதன் பொருள்.) முன்னர் பேசிவந்த பதினோர்தாம் பறுலாகிய பிற்பட்ட அத்தஹிய்யாற்திருப்பிற் சொல்லோசையாற் பருக்கப் பெற்ற சறுத்திரண்டாகுமதனை யானுணர்த்தநீவிர் நன்றாகவு ணர்ந்து கொள்வீராக. 1-வது வாசத்தினையுடைய வுங்களின் முது கினை வளைவி கொள்ளாமற் செப்பமாக்கியிருந்திடலும், 2-வது பழு துவாராமற் பேணியதற்காக வென்றுள்ளத்தினிய்யத்துப் பிந்திய சுஜூதினியன்ற முதிர்ந்த தலையினை யெடுத்தலுமாகிற இவ்விரண்டு மாமென்றவாறு.

[வாசத்தினையுடைய நீங்கள் புனிதத்தை யுடைய நீவிரென்று கொள்க. [வளையாமற் செவ்வையிருந் திடலென்வே அம்முதுகு கொண்ட வளைவன்றி நீவர்கொள்ளும் வளைவென்றுணர்க.

அத்தஹிய்யாத்து சலவாத்துக்களின் சறுத்துக்களைக் கூறல்.

அத்தகிய்பாத்தினிற்சறுத்தேழென்றார்
ஆனவெழுத் தொன்றும் விடாதேசத்தும்
உற்ற பயனைப் பேதங்களாக்க
வுரைக்கு மிகுறு புவாரா தோதல்
சத்தஞ் செவிகேட்கத் தொடர்படவாத்
தக்க விருப்பினின்முகித் திடலே
வெற்றி பெறுஞ் சலவாத்தினுக்கும்
மேவுஞ் சறுத்தது போலாமென்றார்.

என்பது. கூறியவிப்பின் கண்ணமைந்த பறுலாகிய அத்தஹிய் யாத் தோதலுக்குமதிற் சலவாத்தோதலுக்கு மியைந்த சறுத்துக் களைக் கூறல்.

(இதன் பொருள்.) அத்தஹிய்யாத்தோதலின் கண்ணேழுசறுத் துண்டென்றிமாம் சொன்னார்கள். 1-வது அத்தஹிய்யாத்திலமைந்த வெழுத்துக்களி லியாதொன்றினையும் விடாதோதலும், 2-வது சத்தாகிய வொற்றெழுத்துக்க ளியாதொன்றினையும் விடாதோதலும், 3-வது அதின் பொருள்களைப் பேதகப்படச் செய்விக்கும்படியாக வுரைக்குமிகுறுபுகள் வாராதோதலும், 4-வது அதன் மொழியினோசையைத் தன்செவி கேட்கவோதலும், 5-வது அதின் சொற்களின் றொடர்பு கெடாதோதலும், 6-வது அதன் வாக்கியத்தின் வைப்பின் றொழுங்காகவோதலும், 7-வது அதினிருப் பின் கண்ணே முடித்திடலும் ஆகிய விவ்வேழுமாமினிப்பதினேழாம் பறுலாகிய சலவாத்திற் குரிய சறுத்துக்களிவ்வேழுமேயா மென்றிமாம் சொன்னார்களென்றவாறு.

ஆனவெழுத்தொன்று விடாதோதலென்று றத்தமையாற் சில சொற்கள் கூடியுங் குறைந்தும் வருவனவுளாவால் வந்தகோவையினெழுத்துக்களை யென்றுணர்க.

சலாமடவிரண்டின் சறுத்துக்களைக் கூறல்.

ஐந்துசறுத்தென்றார் முன் சலாமில்
அமையுமெழுத்தோடுசத்துசுந்தா
துய்ந்தொடர்பாகச்செவியிற்கேட்க
வோதலிருப்பினின்முகித்திடலே
வந்தவடவினில்சறுத்தொன் றுண்டு
மருவும்பறுலுகண்முன்பின்னாகா
தந்தமுறைப்பேணிக்கொடுவருதல்
அணியும்பறுலெனவறிந்திடலே.

என்பது, தொழுகையின் முடிவினை யறிவிக்கு மூந்திய சலாமிலுமணைத்தையும் பேணியவடவிலு மிசைந்த சறுத்துகளைக் கூறல்.

(இதன் பொருள்.) முற்படக்கூறுஞ் சலாமின்கணியைந்த சறுத்தென்றிமாம் சொன்னார்கள். 1-வது அதினுள்ள வெழுத்துக்களொன்றுங்கொடாதுரைத்தலும், 2-வது அதின்சத்துங் கொடாதுரைத்தலும் 3-வது, அதின்சொற்றொடர்பாக வுரைத்தலும், 4-வது அதினோசை செவியிற்கேட்க வுரைத்தலும், 5-வது அவ்

விருப்பின்கண்ணே முடிய வுரைத்தலும்மாகிய விவ்வைந்துமா மினி முன் சொல்லிவந்த பத்தொன்பது பறுலினீற்றினின்ற அடவின்க ணியைந்த சறுத்தொன்றுண்டும் அஃதாவது அந்த பறுலுகண் முற்பட்டது பிற்படாமலும் பிற்பட்டது முற்படாமலுந் தந்தமக் குரிய நிலையினிருந்தத் தொழுகையினுக்கழகாகிய பூரணத்தைத் தரும்படிக்குப் பேணிச் செய்துகொண்டு வருதலிப்பத் தொன்பது பறுலுள்ளு மணிந்து கொள்ளும் பறுலென்றறிந்திடறென்வாறு.

[ஓதல் முகித்திட லென்பதனை யோதி முகித்திடலென்றுங் கொள்க.

சத்துக்கண்-முற்றிற்று.

தொழுகையினொழிபுவிதி கூறல்.

தக்கதொழுகையுட்பறுலானவுஞ்
சமைந்தசறுத்தையும்பேசியபின்
மிக்கதொழுகையில்விடப்படாது
மேவும்புஆலுசுன்னத்தோடும்
ஒக்கஆத்துசுன்னத்தையும்
ஊறுபடுதலுமில்லாமையும்
புக்கிப்பொருத்தஞ்செய்சுஜூதினையும்
புகல்வாம்நல்லோர்கண்மகிழ்ந்திடவே.

என்பது, சலாத்து லறுக்கான்மாலையென்னு மொருபிண்டத் திற்கு முற்பட முழுக்கு முழுவுங்கூறிப் பின்ன ரதனியல்பிற் பறுலும் அப்பறுலினியைந்த சறத்துங்கூறி யிதனின் அகமும் புறமுமாகிய சுன்னத்து மிதனின் வழுவு வவ்வழுவினமைதியுங் கூறுவான் புகுந் தொழிபே லென்றியற்றி யிவற்றினை யிக்கவியிற் றெகுத்துக் கூறல்.

(இதன் பொருள்.) பருவமாக்க ளிருவகையார்க்குவிதியாகிய தொழுகையின் அகத்துறுப்பாகிய பறுலென்பன அனைத்தையு மவைசென்றெண்ணத்தினு தற்கமைப்பன விருவகையேதுவாற் போந்த சறுத்துக்களையுங்கூறி முடித்த பின்னர் அம்மேலாகிய தொழுகையி னகத்தின் கணமைந்து மதனைவிட்டு நீங்காதுமாய் யாதானு மொருகாரணத்தானு நீங்காதுமாய் அதனுறுப்பிற் சில வாகிய அகத்தனவென்றும் புறத்தனவென்றுந் தோற்றுதாய் அத்தொழுகையிற் சில விவையென்னும் பெயரேற்றப் புறவுறுப் பாகிய அபுஆலு சுன்னத்துக்களையும் அவற்றோடுமத் தொழுகைக்

லின்றியமையாச் சிறப்பிற்றாய்தற் கலங்காரமாகிய பேரழகிற்றாய் விளங்கும் [கைஆத்தென்று மலங்கார சுன்னத்துக்களையு மன்றியும் அத்தொழுகையை முறிவினை செய்யும் வழூஉக்களையு மவ்வழு வில்லாதாற்கு மூறையுமிதற் கிடையினந்த சருமங்களைக் குறைவை நிறைத்து மிகுதலைக் கழுத்தும் பொருந்தச் செய்த செய்கையிடப் பட்டதற்கும் வேறுணர்வு போந்ததற்குமோர் அபராத தண்ட மாகப்புகுந்து பொருத்தத்தைச் செய்யுஞ் சுஜூதுக்குவு மதனியல் புகளையுங் கூறுவாமவற்றினை நன்குணர்ந்தவர்கள் மகிழ்ந்திடும் பொருட்டாக வென்றவாறு.

இத்தொழுகையின் வகையெல்லாம் வான்முறை யணியா வுணர்ந்துகொள்க.

அபுஆலு சுன்னத்துக்களைக் கூறல்.

அழிவிலானே வல்வணக் கத்தினில்
அபுஆலுசுன்னத் தாறுண்டுகேள்
தொழுகை நடுவத்தஹியாத் திருப்புந்
தூயநபி பேராற் சலவாத் தோதல்
வழூவாதீற்றத்த ஹியாத்திடத்தில்
வள்ளல் கிளையார்க்குஞ் சலவாத் தோதல்
பழுதில் சுபக்கும் றமலானுக்கும்
பகருங் குனூத்தோ தனிலைதானுமே.

என்பது, தொழுகையின் யுறவுறுப்பாகிய அகத் துறுப்போ டொழியாது நிகழும் அபுஆலு சுன்னத்தின் றொகையினைக் கூறல்.

(இதன் பொருள்.) தன் பண்பாகிய குணங்களும் குணங்களின் குணபாடுகளு மட்டிலா வுலக வுயிர்கடோறுந்தோற்றி யித்தோற் றஞ் சாண்ற பொருளெல்லாந் தம்மின்மையே குயங்கியுந் தம்வேற் றுமையே காட்டியுமறையே மறையாது பேதகப்படாது தன்னுண் மையே விளக்கா நிற்கு மொருவனுகிற முழுமுதற் கடவுள் அடியார் களை யிரட்சிக்குங் கருணையால், விதியாக்கி தொழுகையின் கண்ணே அபு ஆலுசுன்னத்தாறுண்டு. அவற்றைக் கூறுவனீ கேட்பாயாக. 1-வது அத்தொழுகை நடுவில் வரு மத்தஹிய்யாததில் கடைசியில் வருமத்தஹிய்யத்தி லோதும்படி விதித்த வாக்கியங்க ளம்முறை

போலவோதலும், 2-வது அதற்காக விருத்தலும், 3-வது அவ்வத்தஹிய்யாத்தில் தூய்மையுடைய நபிபேரிற் சலவாத் தோதலும், 4-வது ஈற்றில் வருமத்தஹிய்யாத்தில் வழுவாதபடி வள்ளலாகிய நபியுல்லாவின் கிளையார்பேரிலுஞ் சலவாத் தோதலும், 5-வது சுபுஹுடைய தொழுகையிலும் றமலான் மாதம் பிற்பக்கத்தி வித்றுத்தொழுகையிற் பிற்பட்ட றக்அத்திலும் குனூத்தோதலும், 6-வது அவ்வோதலிற்காக நிற்கு நிலையுமாகிய விவ்வாறுமா மென்றவாறு.

[ஏவல் வணக்க மென்றது ஏவலாகிய வணக்க மென்ப் பண்பொட்டா நிற்கையால் ஏவிய பொருளாயிற்று. [நடுவத்தஹிய்யாத்து மிருப்பு மெனவும்மையை வருவித்துக்கொள். இதில் றமலான் மாதத்தைக் கவியிற் றேற்றிவித்தது அக்குனூத்தினிடத்தை முற்றிவித்தற் கென்றுணர்க. இவையன்றி மற்றுமிட முண்டென்று வருங் காலதற்கிடமில்லாத காரணமியாதேனு முண்டாதலாகையானு மிவ் வெண்ணினுளடங் காமையானு மொழிக்கப்பட்டது. [குனூத்தென்று பொதுவாகையால் அதினமைத்த றசூலுல்லாபேரிலு மவர் கிளையார் பேரிலுஞ் சலாவாத்தோடு மோதலென்றதற்குப் பகருங் குனூத்தென்று விதந்து கூறினாரென்றுணர்க.

அலங்கார சுன்னத்துக்களைக் கூறல்.

நல்லபறுலான தொழுகை தன்னில்
நடேசர் சுன்னத் தெண்ணான்கு மென்றார்
சொல்லுமுதல் அவ்வல் தக்பீறுக்குத்
தோணர் செவிமட்டாக்கர மெடுத்தல்
வல்லவயிற்றின் மேலிடக்கைவைத்து
வலக்கையாற் பூணப்பிடித்திடலும்
செல்லும்றுக் கூவுக்கு மிகுத்தித்தாற்குஞ்
செப்புமுறை யாற்கையுயர்த்ததுமே.

என்பது, முற்கூறிவந்த வித்தொழுகைக் கின்றியமையாச் சிறப்பிற்றாய் அதனை யலங்கரிக்கும்படி அதன் கண்ணேயன்றித் தனித்து நடவா விறல் பிற்றாகிய கைஆதென்னும் *அலங்கார சுன்னத்துக்களைக் கூறல்.

(இதன் பொருள்.) மக்களுக்கு நற்பயன்களைக் கொடுக்கு பறுலாகிய தொழுகையின்கண்ணே நடைசேர்ந்த சுன்னத்து முப்பத்தி

ரண்டும் பிறவுமென்றிமாம் சொன்னார்கள். 1-வது, ஈண்டு கூறு நின்ற தொழுகையின்றலையினிற்கு முற்பட்ட தக்பீறுக்கா விரண்டு கைகளையுமிரண்டு புயங்களுக்கு மெதிராக விரண்டுசெவிகளி னளவாக வெடுத்துயர்த்தலும் அஃதாவது தொழநின்று ஒருவன் கிபுலாவுக்கு முன்னிட்டுச் சுஜூதிடுந் தலத்திணை நோக்கி வலமிடங் கோணுமற் செவ்வையாக நின்று தன்னிரண்டுகைகளின் விரற் களுடைய மேனுனிகள் இரண்டு செவிகளின் மேற்றுளிரினளவாகவு மிரண்டு பெருவிரற்றலைகளு மிரண்டு செவிகளின் கீழ் சோணையி னேரளவாகவு மவ்விரற்கள் பற்றிய குடங்கைகளின் புறமிரண்டும் இரண்டு புயங்களினே ரெதிராகவும் அகமிரண்டுங் கிபுலாவினே ரெதிராகவுங் கைகளையுயர்த்திலாம் இத்திரமுயர்த்தலே மற்ற வுயர்த்து மிடங்களடங்கலுக்குங்கொள்க, 2-வது அவ்வுயர்த்திய கைகளை வயிற்றிற்கு மேலு நெஞ்சிற்குக் கீழுமாகிய தலத்திலிடது கையை வைத்து அதின் மணிக்கட்டை வலதுகையால் விரற்கள் பூணும்படியாகப் பிடித்தலும் இப்பிடித்தல் முன் சொன்ன தக் பீறின் முகலெழுத்தோடுயர்த்தி யீற்றெழுத்தின் முடிவோடும் அக்கைகளை பிடித்தலாம், 3-வது றுக்கூவிற்போம்போது அதுபோல் கைகளையுயர்த்தலும், 4-வது இகுத்தித்தாலில் வரும்போதும் அது போற் கைகளை யுயர்த்தலுஞ் சுன்னத்தாமென்றவாறு.

எண்ணுன்குமென்ற வெச்சவும்மையாற் பிறவும் வருவன வெல்லா மாங்காங்குணர்க. [சொல்லுமுதலென்பதற்கு முதல் நாவாற்சொல்லுதலும் சுன்னத் தென்றுகொள்க. அஃதாவது தக்பீறு சொல்லுதற்குச் சற்றே முன்னர் தன் கருத்துளமைத்த நிய்யத்தை வாயினுல் மொழிதல் அக்கருத்துள்ளத் தினின்ற தொழுகை முடியுமளவு மறவாது வருதல் இவ்விரண்டுஞ் சுன்னத்தாமென்றுணர்க. [செப்பு முறையாலெனவே முன்னர் கையுயர்த்தற்குச் செப்பிய முறையாக வென்றது முன்னர் இமாம் செப்பிய முறைமையாற் கையுயர்த்தலென்று பொருள் கொண்டு தக்பீறு சொன்னவனுகவும் சமிஅல்லாஹு சொன்னவனுகவுந் தலைகுனிதலோடு மெடுத்தலோடுங் கையுயர்த்தலென்றுகொள்க.

இதுவுமது.

ஓசையமத்தியொச் சருத்தோதலும்
ஒவ்வோரறக் அத்தில்அவூ தோதலும்
பாசையுரைபாத் திஹாமுடிவிற்
பயனைப்பற் றியாமீன்கூறலும்

மூசுமுன்னிரண்டி றக்அத்திலும்
முழுசூறத்தன்றேல் ஆயத்தோதல்
றேச றுக்கூவுக்குஞ் சுஜூதினுக்கும்
நிகழுமிருப்பிற்குந் தக்பீறோதல்.

என்பது, அவற்றின் வகைகளைக் கூறல்.

(இதன் போருள்.) 5-வது நிய்யத்தோடு தக்பீறு சொல்லிக் கைகளிணைத்த பின்னரோசை வெளிவராதுள்ளடக்கி யொச்சகுத் தோதலும், அத்தொழுகை பறுலாயினு நபுலாயினுமொக்கும், 6-வது ஒவ்வோரறக்அத்தடங்கலிடத்தும் அத்தகையாக வோசை வெளிவராதுள்ளடக்கி அலூதோதலும் இத்தன்மையாவோதல் அத்தொழுகைத் தன் பறுலினோசையை வெளிப்படுப்பினு மறைப்பினு மொக்கும், 7-வது அறபுப் பாஷையுரையாகிய பாத்திஹாமுடிவில் அதன் பயனைப் பற்றுதலோடு ஆமீன் கூறலும், 8-வது முந்திவருமிறக்அத்திரண்டிடத்தும் பாத்திஹாவோதிய பின் சூறத்தோலும் அஃது முற்றவாயினுஞ் சில ஆயத்தாயினு மொக்கும், 9-வது றுக்கூவுக்குப் போம்போதுஞ் சுஜூதிற்குப் போம்போது மிடையிருப்பிலாப் போதுந் தக்பீறு சொல்லுதலுஞ் சுன்னத்தாமென்றவாறு.

[அலூதோதவென்று பிசுமிலினையெடுத்துக் காட்டாது பிரித்தமையால் அஃது பாத்திஹாவிற் சேர்ந்த தென்பது கருத்தாயிற்று [இனி பயனைப் பற்றி யெனவே அம்மீமினை யிரட்டித்தாற் பயன் பேதகப்படு மென்பது மதனையிரட்டியாது அவ்வலிபினை நீட்டினுங் குறிக்கினும் பேதகப்படாதென்பதுஉங் கருத்தாயிற்று. [முழு சூறத்து அன்றேல் அயத்தோதலெனவே சூறத்துமுற்றவோதலு மன்றியும் பொழுது குறைந்தாவது மனமறந்தாவது அதற்கிடையூறுயின் ஆயத்தோதலென்பது மொன்று ஆயினுமிவ்வாயத்துக்களிற் சிறியதாயினுஞ் சூறத்துமுற்றுமேல் ஏறிய பயனென்பது மொன்று அன்றியுமவ்வாயத்து மூன்றிற்குத் தாழாதாதல் ஏற்றமென்பது மொன்று, அவ்வாயத்துக்களாயினு மல்லது சூறத்துக்களாயினும் பின் வருவன முன் வருவனவற்றிற் குறையவாதலு மொன்று, இச்சூறத்தோதல் தனித்துந் தொடர்ந்துந் தொழுமிருவர்க்கும் பொதுவாகையாலிவன் மஅமூமாகிய தொடர் தோனுயினவனுக்கு முன்னிலையாகிய இமாமினோதலைக் கேட்டிருப்பவன் அன்றியிவன் அவ்வோதல் கேளாதளவில் அகல நின்றுலுமல்லது அத்தொழுகை யோசையை மறைப்படுப்பினுமிவனுஞ் சூறத்தோதுவனென்றுணர்க. [ஓசையை வெளிப்படுத்துந் தொழுகை மகுறிபு இஷா சுபுஹூ அதனை மறைப்படுத்துந் தொழுகை லுஹறு

அஸறென்று கொள்க. [முற்கவியில் றுக்கூவினை யிருத்தித்
தாலோ சேர்த்துக் கையுயர்த்தன் மாத்திரங்கூறி யிக்கவியிற்
சுஜூதிருப்பி ரண்டினோடு சேர்த்துத்தக்பீறுங் கூறினமையா ளனங்
கொண்டு அன் அதற்குரிமையுங் கொண்டது. அகையால் றுக்கூவிக்
கையுயர்த்தலுந் தக்பீறு முரித்தாயிற்று. ஆகவே மற்றவிசுஜூ
திருப்பு இவ்விரண்டிற்குந் தக்பீரன்றிக் கையுயர்த்த வில்லையா
யிற்று. [முன்னெண்ணுன்கு மென்ற வெச்சவும் மையால் இந்தச்
சுஜூதில் போம்போது கையுயர்த்தாது தக்பீறு சொல்லும்
இரண்டு முழங்கால்களை முற்பட வைத்தலும் பின்னிரண்டு கைகளை
யும் வைத்தலும் அதன்பின் நெற்றியு மூக்கும் வைத்தலும் அவ்
வைப்பிற் கைகளிரண்டு இரண்டு புயங்களினெதி ராதலுமக்
கைகளின் விரற்களை நிமிர்த்துச் சேர்த்துக் கிபுலாவுக்கு நேராக
விரித்து வைத்தலும் அன்றியும் இரண்டு முழங்கால் முட்டுக்க
ளொன்றுதகற்றிக் துடைகளில் வயிறு தாழாதுயர்த்தி யிரண்டு
விலாபுரமு மிரண்டு வாருவினும் அண்டாதகட்டி வைத்தலும்
பிறவுஞ் சுன்னத்தாம். இவ்வைப்புனுக் கூவிக்குங் கொள்க.

[மற்றப் பெண்பாலிற்கு ஒன்றித்துவைத்த லென்றுணர்க.
மற்ற அவ்விடையிருப்பின் முழங்கால் முட்டிற்கு அருகிலிரண்டு
கைகளின் விரற்களை விரித்துச் சேர்த்துக் கிபுலாவுக்கு நேராக வைத்
வைத்தலு மோதலு மிவ்வனைத்துஞ் சுன்னத்தென்றுணர்க.

இதுவுமது.

ஒக்கறுக் கூவினிற்றரி படலில்
உரைத்த இருத்தித்தால் நிலையதனின்
மிக்க சுஜூதினிற்றசுபீகோதன்
மேவும் அத்தஹிய்யாத் திருப்பிற்
றக்கவலது தகவிரல் மடங்கி
ஷஹாதத்து விரற்றலை நிமிர்த்திப்
பக்க மிடதுகை விறலை யெல்லாம்
பரப்பித் துடைகண் மேல் வைத்தலுமே.

என்பது, அவற்றின் வகைகளைக் கூறல்.

(இதன் பொருள்.) 10-வது தக்பீறோடு கையெடுத்தலு மன்றி
யந்தறுக் கூவிற்றரிபடு தலின்கண் தசுபீகோதலும் 11-வது இருத்
தித்தால் நிலையிற்றரி படுதலின்கண் தசுபீகோதலும் 12-வது சுஜூ

திற்றரி படுதலின்கண் தசுபீகோதலும் 13-வது அத்தஹிய்யாத்தி
ருப்பில் வலது கையின் எல்லா விரலையு மடக்கிச் சுட்டு விரலாகிய
கலிமாவிரலொன்றனையுமே தலைமடங்காது, நீட்டி வலது துடை
யிற்றலை முட்டில் வைத்தலும் 14-வது இடது கையின் எல்லா
விரலையும் பரப்பி யிடது துடையிற்றலை முட்டில் வைத்தலுஞ் சுன்
னத்தா மென்றவாறு.

[மிக்க சுஜூதென்று சிவப்பித்தமையிற் றசுபீகோடுதுவாவு
மோத மென்று. [அத்தஹிய்யாத் திருப்பி லென்று பொதுப்படக்
கூறின மையாலிப்பரிசு இரண்டித்திலு மொன்றுணர்க.

இதுவுமது.

இல்லல்லா வெனுஞ் சொல்வரும்போ
தியல் பாசகாதத்து விரலுயர்த்தல்
எல்லா விருப்பிடக்கான் மேலாதல்
ஈற்றினிருப் பொன்றுந் தரையினுதல்
சொல்லு மிருப்பிடக் கால் விரல்கள்
தோன்ற வலக்கணைக் கீழேயாக்கி
நல்ல வலக்காலின் படனிறுத்தல்
நாட்டு மச்சத் தாற்றொழுதலுமே.

என்பது, அவற்றின் வகைகளைக் கூறல்.

இதன் பொருள்.) 15-வது அத்தஹிய்யாத் தோதுகையில் இல்
லல்லா வெனுஞ் சொல் வருங்கால் இயல்பாக அச்சுட்டு விரலினை
யுயர்த்தலும், 16-வது அத்தொகையின் அகத்தமைந்த ஆதன
மெல்லா மிடது காலின்மே லிருந்திடலாதலும் 17-வது அத்தொழு
யினீற்றின் வரும் அத்தஹிய்யாத்தி ருதன மொன்றுமே தரையினி
ருந்திடலாதலும் 18-வது இங்ஙனஞ் சொல்லும் இவ்வீற்றின் அத்
தஹிய்யாத் திருப்பாவது இடது கால்விரல்கள் வலது கால் கணையின்
புறந்தோற்ற அவ்வலது பாதத்தின் விரல்கள் நிலத்தின் அகப்பட
வூன்றிக் கிபுலாவிற்கு நேரிட்டு நிற்க பிற்றட்டு நிலத்திற் பதியவிருந்
திடலும் 19-வது அத்தொழுகையிண்டாகிய கருமங்களியா தொரு
ன்றும் வழுவாதபடிப் பேணுதலோ டுன்றிற்கு முள்ளம் அச்சத்
தோடு தொழுதலுஞ் சுன்னத்தா மென்றவாறு.

[இயல்பாக வுயர்த்த லென்ற வெச்சம் மடக்கிவளைத்துயர்த்தா
மையு முயர்த்தலன்றி யசைத்திடாதமைத்தலு மொன்றென்பதனைக்

குறித்து [ஈற்றினிருப்பொன்றுந் தரையினுதலென்றுஞ் சொல்லு மிருப்பி தன்மைத்தென்றும் விதந்து கூறிமையால் எல்லாவிருப்பு மிடக்கான்மே லாதலென் றவ்விருப்பின் றன்மையினே வினவாரா யினும் பொருட்காலுந் தரையுநிலநாகத் தோற்று நின்றது. அஃதா வது வலதுகாலது போலப்பதத்தின் விரல்கள் நிலத்தின் அகப்பட வூன்றிக் கிபுலாவுக்கு நேரிட்டு நிற்ற இடதுகாற்பதத்தின் புறம் நிலத்திற்கிடப்ப அதன்காண்டையின்மேற் பிற்றட்டுப்பதிய விருந் திடலும் [இனுகாட்டு மச்சசத்தாற்றெழுத வென்பதற்கு அச்சத் தாற் றெழுதலே நாட்டுதலு மொன்றென்றுக்கி இமாமுடனே பின்வந்து தொடர்ந்தவன் தன்சேளமுள்ள கருமத்தைச்செய்து தன் றொழுகையை நிறைத்தற்தெழுந்திடல் வேண்டி இவ்விருப்பினிருந் திடலும் அன்றியுமறதியேய்ந்தவன் சுஜூது சசுவிற்காக இவ்விருப்பி னிருந்திடலுஞ் சுன்னத்தென்பதனே யமைத்துக்கொள்க.

இதுவுமது.

ஐயமற அத்தஹிய்யத்தோடும்
அடுத்தசொன் மூன்றுந் தொடபாவோதல்
செய்யுஞ் சுஜூதிரண்டும் முடிந்தாற்
சிறிது மிருப்பில்லே தரிப்பன்றியே.
கைகளிரண்டையு நிலத்தினூன்றிச்
சடிதினிலே தனிலாகுதலுந்
துய்பவிழிபுறம் பெயர்ந்திடாமற்
சுஜூதிடுந்தலம் பார்ப்பதுமே.

என்பது, அவற்றின் வகைகளேக் கூறல்.

(இதன் பொருள்.) 20-வது, ஐயமறும்படி யோதுகின்ற அத்த ஹிய்யாத்தென்னுஞ் சொல்லுடனே யடுத்துவருஞ் சொற்கள் மூன்றினேயுமொன் தொடர்பாக வோதலும் அஃதாவது அத்தஹிய் யாத்துள் முபாறக்காத்துஸ் சலவாத்துத்தையிபாத்து என்பதாம் 21-வது, சுஜூதிரண்டுஞ் செய்து முடிந்தாற் சிறிது பொழுதிற்கு மிருத்தற் கிடமில்லே யெழுந்திடற்காகத் தரிபடலேயன்றி எனவே சுஜூதுசெய்து முடிந்த பின்னரெழுந்திடற்கும் அந்த முடிவிற் கிடையிற் செய்கைகளின் றொடர்பால் வன்மைதோன்றுமல் உடற்கோர் மேன்மையாகிய நயந்தோன்றக்கிடந்த தாமதிப்பு இருந்திடல் தரிபடலிரண்டிற்கும் வேற்றுமையினுலுணர்க. 22-வது இரண்டு கைகளினுட்புறத்தை நிலத்தினூன்றி விரைவாக வெழுந்து

நிலேயிலாதலும் 23-வது நிலேயுனிற்கும் போதிற் கண்களால் வல மிடம் பார்வை பெயர்த்திடாமற் சுஜூதிடுந்தலத்தினேயே விடாது பார்த்தலும் சுன்னத்தாமென்றவாறு.

[இச்செய்கைகளின் பேத மெவ்வளவாயினு முளவாயிற் றேர்ந்துணர்ந்து கொள்க.

இதுவுமது.

கத்தன்றனேயுன்னி வணங்கும்போது
கவலாதாராய் வாக்குறுனேதலும்
சித்தமறவாதுள்ளக நினேத்தல்
செப்புவிமாம் ஆமீனெடுசெப்பலும்
உத்தமத்தி மாரெலிமத் தோதுங்கால்
ஒலித்தேயோதலும் லுகறசறிற்
சத்தமமையாம லோதுதலுந்
தனித்தே யோதுதலுமவு மூமுக்கே

என்பது, அவற்றின் வகைகளேக் கூறல்.

(இதன் பொருள்) 24-வது உலகவியக்கமானத்தினேயுஞ் செய்து முடிக்குங்கத்த நாயகிய நாயகனே யுள்ளத்தானேக்கி வணங்கும் வணக்கத்தின் கண்ணே மனத்திற்கவலேகொள்ளாதே பொருளினே யாவது சொல்லினேயாவது உறுதிபயப்ப ஆராய்தலினேடே குறு ஆனேதலும் 25-வது சித்தத்தின் மறதிகொள்ளா துள்ளமாகிய கல்பினிடத்தில் அவனது, தகுத்தோற்ற நினேத்தலும் 26-வது இமாம் ஆமீன் சொன்னபின் அதோடு மவுமூமும் ஆமீன் சொல்லு தலும், 27-வது இமாமானவனேசையை வெளிப்படுத்தி யோதுங் கால் அத்தொழுகையில் மவுமூமும் ஆமீனென்று ஓசைவெளிப்பட வோதலும், 28-வது அவ்விருவரும் லுஹறுடைய தொழுகையிலும் அசறுடைய தொழுகையிலும் வெளிப்பட வோசையமையாது சத்தமக்கே செவிக்கமையாவோதலு மற்றமூன்று பொழுதின் றெழுகையிலு மவுமூமானவன் வெளிப்பட வோசையமையாது தனக்கேயமையவோதலுஞ் சுன்னத்தாமென்றவாறு.

[வணங்கும்போதிர் கசலேகொள்வாதெனவே உடற்கோர் சடலேகொள்ளாமற் செறிந்த மகிழ்ச்சியோடு தொழ்ப்புகுதலும்

கல்பும் வேறொரு பராக்கிற் புகுதா தொழிதலும் சுன்னத்தா மென் பதாயிற்று. [ஆராய்வாக் குறுஆனேதலெனவே அத்தொழுகையி னமைந்த திக்றுகளையும் அத்தன்மையாகவே வோதலு மொன்று [சித்த மறவாதெனவே பயப்பாடு கருத்துள் வைத்தலுஞ் சுன்னத் தென்பதாயிற்று. [ஒலித் தோதுக்கால் ஒலித்தே யோதலெனவே அவ்வாமினேடியைக் திடினும் இப்பொருள் கொண்டு நின்றது தனித்துத் தொழுபவனுஞ் சொன்ன விரண்டு பொழுது வணக்க மும் அன்றி மற்ற மூன்று பொழுது வணக்கமும் வணங்குங் காலங் தொனித்தே யோதுவனென்பது கருத்தென்றுணர்க.

இதுவுமது.

தொழுகை முடிவைத் தய்யாத தீற்றிற்
சொல்லலகமா கல்லைத் தொடுதுவாவும்
பழுது பகராமலிடது பக்கம்
பார்த்தே சலாஞ் சொல்லிமாமே யாகில்
வழியே தொழுமவ் மூம்களுக்கும்
மலக்கு கின்னுக்கு மெனக் கருதற்
றெழிலிற் றொடர்ந்தலா தற்குந் தாஞ்
சொன்னே மெனக்கருதிட லுந்தானே.

என்பது, அவற்றின் வகைகளைக் கூறல்

(இதன் பொருள்.) 29-வது தொழுகை யீற்றின் முடியவரும் அத்தஹிய்யாத் தோதி அதன் கடைசில் கமாசல்லைத்த வோதலும், 30-வது அதன் கடையில் அவ்லாகும் மகுபிற்லீ யென்னுந் துவா வோதலும், 31-வது சொற்பழுதாகாம யிடதுபுறந் திரும்பிப் பார்த்து சலாஞ் சொல்லுதலும், 32-வது வலப்புறமாயினு மிடப் புறமாயினுஞ் சலாஞ் சொல்லும்போதில் அந்தந்தப் புறங்களிலுள்ள மலக்குகளுக்கு மூமினுகிய மனிதர்களுக்கும் மூமினுகியசின்களுக்கு மென்று கருதலும் அவன் இமாமாகில் தன் வழியைத் தொடர்ந்து தொழுமவுமூம்களுக்கு மென்று கருதலும் அம்மவுமூம்களுந் தங்கள் சலாம் அதற்கு உத்தரமென்று கருதலுஞ் சுன்னத்தா மென்ற வாறு.

[முடிவத்தஹிய்யாத் தென்று வரையறுததமையால் அவ்வத்தி ஹிய்யாத்துஞ் சேர்ந்த நபியுல்லா பேராற் சொல்லுஞ் சலவாத்

தினும் அந்த துவா வதிகப்படாதாதலுஞ் சுன்னத்தென்பதாயிற்று. [பக்கம் பார்த்தே சலாஞ் சொல்லலெனவே வலப்புறமாயினு மிடப்புறமாயினுங் கபோலம் பக்கத்தார்க்குத் தோற்றுமளவுந் திரும்பலென்பதாயிற்று. தொடர்ந்தவர் அதற்குத் தரஞ் சொன்னேமெனக் கருதிடலென்று பொதுவாகக் கூறினமையாற் செய்கையினென்றாகு மெனும் இடத்தால் அத்தொடர்பு மூன்றாயிற்று. வலத்தினின்று தொடர்ந்தார் இடத்தினின்று தொடர்ந்தார் நடுவனின்று தொடர்ந்தாரென்று வேறுகொண்டு அவ்விமாமானவனுடைய சலாமுக்கு இரண்டாஞ் சலாமைக் கொண்டு அவன் வலத்தினின்றும் தொடர்ந்தாரும் முந்திய சலாமைக் கொண்டு அவனிடத்தினின்று தொடர்ந்தாரும் இரண்டா லொன்றில் நாடிய சலாமைக் கொண்டு அவனுக்குப் புறத்தே யிவர்களுக்கு நடுவனின்று தொடர்ந்தாலும் அவனுடைய சலாமுக்கு உத்திரத்தினைக் கருதுதலென்பதே கருத்தென்று உணர்க. [இவருள் நடுவனின்று தொடர்ந்தவர் முந்திய சலாமைக் கொண்டு கருதல் வரிசையதென்று கொள்க. இக்கருத்தாயினும் அவ்விமாமுடைய முந்திய சலாமைக் கொண்டு தொடர்பு நீங்குண்ட படியால் அம்மவுமூமுக்கு அப்போதே சலாம் சொல்லவுமன்றிச் சிறிது துவா முதலிய வோதிய பின் சொல்லவு மன்றி அவனொரு சலாமுக்குப் பின்னையே யிவனுடைய விரண்டு சலாமுஞ் சொல்லவுமா மென்று கோடற்காக அதற்கு உத்தரஞ் சொன்னேமெனக் கருதிடலென்று வரையரையாது கூறினா ரென்றுணர்க.

இவற்றிற்கோரியல் கூறல்

தந்தந் தொழுகை தான்றீர்ந்த பின்னர்
தசுபீ கொடுதிக் ரோதுதலும்
முந்தவிடஞ் சற்றே சறுகி நின்று
முறையாம் சுன்னத்துத் தொழுதிடலும்
அந்த வகை யலங்கார சுன்னத்
தவைகடாந் தெரிந்துணர்ந்து கொள்வீர்
இந்த சுன்னத்திலியா தொன்றேனும்
இழக்கினுங் கூடுந் தொழுகைதானே.

என்பது, இவற்றினை முற்றுவித்து இவற்றிற் கோர் புற நடையியல் கூறல்.

(இதன் பொருள்.) தத்தமக்குரிய தொழுகைகளைத் தாந்தாந் தொழுது சலாங்கொடுத்து முடித்தபின்னர் தசுபீஹு ஓதலுந்

திகரேதலும் முன்னர் நின்று தொழுதவிடத்தினைவிட்டுச் சற்றே சறுகி நின்று சுன்னத்துத் தொழுகைகளைத் தொழுதிடலு முலைமை யாகும். அழகாகிய பலவகைகொண்ட விவ்வனைத்தும் அலங்கார சுன்னத்துக்களாம். இவைகளையுள்ளத் தாலறிந்து உணர்வாலு ணர்ந்து கருத்தாலெடுத்துக் கொள்வீராக. இங்ஙனங் கூறிய சுன்னத்துக்களி லியாதொன்றினையாயினும் அத்தொழுகையிழக்கப் பெறுமாயினும் அத்தொழுபவனைக் கூடிக் கொள்ளுமென்றவாறு [இழக்கப் பெறுதாயின் அதிக பலனேடு கூடிக் கொள்ளுமென்பதா யிற்று. ஆகையால் அந்தந்த பறுலான கருமங்களிலுள்ள சுன்னத் துக்களைப் பேணுதல் அக்கருமங்களதனுலுந் தம்மாலும் பலன்றரு மென்றுணர்க. இக்கருத்து நோக்கிற் செய்தாற்குப் பலன்றருதலே யன்றித் தன்னைச் செய்யாதார்க்குப் பறுலுகளைப்போலே வேதனைக் குட்படுத்துந் தண்டனையினைத்தராது சுன்னத்துக்களென்று கொள் வதாயிற்று. முந்தவிடஞ் சற்றேசறுகி நின்று தொழுகைலெனவே முற்படச் சுன்னத்துத் தொழுது பறுலுதொழுதற்குச் சற்றேசறுகி நிற்றலுமொன்று முறைபான சுன்னத்தென்றதனை சுன்னத் திற்குப் பண்படையாக்கிய அதற்கு இனமுமெடுத்து முறையாகிய சுன்னத்தும் முறையாக சுன்னத்தென விருவகைப்படுத்திப்பொருள் கூறினும் அமையும். அவற்றுள் முறையாகிய சுன்னத்தாவன சுபுஹுக்குப் பறுலுதொழுதற்கு முற்படவிரண்டு றக்அத்தும் ளுஹு றுக்கு முற்படவிரண்டு றக்அத்தும் பிற்படவிரண்டு றக்அத்தும் மகுறிபுக்குப் பறுலுக்குப் பிற்படவிரண்டு றக்அத்தும் இஷாவுக்குப் பிற்படவிரண்டு றக்அத்தும் தொழுதல் பறுலொடு முந்தியும் பிந்தியு முறைகொண்டு நிதபனவென்று கொள்க. அன்றியுங் காரணமுங் காலமுமுறைபாகக் கோடலும் இஃதன்றிப் பன்மையு மொருமையு முறையாகக் கோடலும் இம்முறையுளமைக் கலாமிவை யல்லனவெல்ல முறையாகா சுன்னத்தென்றுணர்க.

[எவையாயினுஞ் சற்றே யொன்றுக்கொன்று சறுகி நின்று தொழுதலுமொன்று. [இவ்வகைத் தொழுகைகளெல்லா மதற் குரிய பேதாபேதகங்களெல்லா நன்குணர்த்த நல்லோருணர்த்த வுணர்ந்து கொள்வாயாக.

சுன்னத்துக்கள் முற்றிற்று.

மக்றூஹுகளைக் கூறல்.

சீராந்தொழுகையின் மக்றாஹான
　　செயல்களிருபதுண்டுணர்ந் துகொண்மின்
மாராயமுகந் திரும்புதலும்
　　மலர்க்கண் வானகமே நோக்கலும்
வாருங் குழலாடை வினைசெய்தலும்
　　வாயின்முறையன் றிசைவைத்தலும்
பாரிற்றுளொன் றினூன் றியலும்
　　பணிதன் மலஞ்சலக் கான்முட்டோடே
ஒதுக்கத் திடந்தினுந் தெருவிடத்தும்
　　ஓட்டைத்துறை யினுமாலயத்தும்
புதைக்குமிடத் தினுங்குப்பையினும்
　　புகுந்துவணங்கலும் றுக்கூவதனிற்
சதிக்கச்சிரத் தினைக்குனித்திடலுஞ்
　　சரத்தைமருங்கினிற் கொடுத்திடலும்
எதிர்ப்பில்வலத் தினிலுமிழ்ந் திடலும்
　　இச்சைசயுணுமுன் னர்தொழுதலுமே.
　　　　இரண்டுகவியு மொருதுடர்.

என்பது, கூறிவந்த தொழுகையிற் பறுலொடு கலந்ததிற் சில வாகியும் அதனை யலங்கரித்தும் வந்த சுன்னத்துக்களின் வகையினை யுங் கூறி யிவற்றிற்கிடையில் செய்கைகள் திருத்தமாதற்காகத் திருத்தற் கிடைப்படும் பொருத்தமாகாக் கருமங்களாகிச் செய் யினுஞ் செய்யாதிருக்கினு நயமொடுபயமும் இல்லாதனவாகிய மக்றாஹுகளினெண்ணின் வகையுங் கூறல்.

(இதன் பொருள்.) சிறப்பாகிய தொழுகையினைச் செய்யுமிடத் திற் செய்தற்குப் பொருத்தமில்லா மக்றாஹானசெயல்களோ ரிருப துண்டும் அவை யிவையென வுணர்த்துவனீ ரீருணர்ந்து கொள் வீராக அவற்றைக் கூறுவன், 1-வது நாயன் சமுகத்தினின்றஞ்சி யொடுங்கி வணங்குஞ் செய்கையின் அவனிடத்திருந் தனுகுங் கிரு பையைக் கொண்டுவரும் பேரின்பமாகிய மாராயத்தைப் பார்த்துறு நின்ற முகத்தினைக் கிபுலாவென்னுந் திசையன் றிப் புறதிசையிற்றி ருப்புதலும் 2-வது மலர்போன்ற கண்களால் வானகத்தின் புறமாமே

103711

னோக்கலும் 3-வது தலையின்கேசமாகிய வுரோமத்திற்கு மேவிய வுடை மனக்குரிமை யன்றிங் சுஜூது முதலிய செய்யுமிடத்தில் அவற்றிற்குரிமைப்படுத்தும் வினைசெய்தலும் 4-வது தன்வாயினிடத்திற் கைவைக்கு முறைமையல்லாது வீணாக வைத்தலும் 5-வது நிலையிலொருகாலின் ஊன்றலாகப் பொருந்து நிற்றலும் 6-வது மலமுட்டுப் பாடுள்ளபோது தொழுதலும் 7-வது சல முட்டுப் பாடுள்ளபோது தொழுதலும் 8-வது காற்று முட்டுப் பாடுள்ளபோது தொழுதலும் 9-வது குளிக்கக் கட்டியவொதுக்கமாகிய விடத்திற்றொழுதலும் 10-வது பலமக்கள் போக்கும் வரத்து மொழியாதுகொண்ட நடைவழியிற்றொழுதலும் 11-வது ஒட்டைகள் கட்டுந் துறையிடத்திற் றொழுதலும் 12-வது வேற்றுமை நெறியுடையோர் வணங்குங் கோயிலிடத்திற் றொழுதலும் 13-வது புதைக்கு மருபளுக்களிடத்திற் றொழுதலும் 14-வது பல கழிவுபடும்பதார்த்தங்களை யெறியப்படுங் குப்பையினிடத்திற் றொழுதலும் 15-வது ருக்கூவினனவினுக் கதிகமாகத் தலையைக் குனித்திடலும் 16-வது கைபினை மருங்கில் வைத்து நிற்றலும் 17-வது முன்னோக்கி நிற்குங் கிபுலாத் திசையின்வாய் நீருமிழ்தலும் 18-வது வலப்புறத்தில் வாய் நீருமிழ்தலும் 19-வது பசியுடனே யுணவு மெதிரிருப்பத் தொழுதலும் 20-வது தாகத் துடனே பருகு நீரும் எதிரிருப்பத்தொழுதலும் ஆகிய விவ்விருபதுமாமென்றவாறு.

[முறையன்றிக் கைவைத்தலுமெனவே முறையோடு கைவைத்தல் சுன்னத்தாயிற்று. அஃதாவது ஷெய்தான் புகாதபடி கொட்டாவியாற் றுறந்தவாயினைக் கைவைத்தடக்கல். [தாளொன்றினான்று மக்றூ கெனவே யாதானுமொரு வருத்தத்தானூன்றுமாயின் மக்றூஹாகவென்றுணர்க. ஒதுக்கு மிடமெனவே குளித்தற்காக மேலாடையுரிந்து வைக்கு மிடமுங்கொள்க. [புதைக்குமிடத்தினு மெனவே பறிக்குமிட மன்றுபிற்று பறிக்குமிடமாயிற் றொழுதலாகாது யாதோர் விரிப்புண்டா யிருக்கினு மதுவுமக்றூஹூ ஆகையாலென்றுணர்க. இக்கருத்தாற் புதைக்குமிடந் தூய்மையுளதாயின் மக்றுகென்றாயிற்று. இலதாயிற்றொழுதலே யாகாதென்பதாயிற் றென்றுணர்க. [எதிர்ப்பில் வலத்தில் உமிழ்ந்திடலாகாதெனவே யிடத்தி லுமிழ்ந்திடலாமென்பதாயிற்று இஃது பள்ளிவாயலல்லா விடத்தினென்றுகொள்க. பள்ளிவாயில் உமிழ்தலாகாமையாற் றன்னுடையிடத்து உமிழ்ந்துகொள்வன் இடத்தின் மாக்களுண்டாயிருக்கிலும் இம்முறையேகொள்க. இம்மக்றூஹ்களின் அமைந்த விகற்பமெல்லாம் இக்கவிகளாலுய்த்துணர்ந்து கொள்க.

மக்றூஹ்கல்-முற்றிற்று.

O-,194NAL7,A
N48

வழுவியல் கூறல்.

சொல்லும்பறுலிலொன் றினைவிட்டாலுஞ்
சூழுஞ்சறுத்திலொன் றினைவிட்டாலும்
புல்லுஞ்செயல் முன்பினாக்கினாலும்
பொருந்துமடவாகப் பேணாதாலும்
அல்லாச்செயலதி லுள்ளதேனும்
அப்பாற் செயன் மிக்கா வரினுமற்றும்
வல்லகாரண மிடையூறுபின்
வழுவியகன் றிடுந்தொழுகைதானே.

என்பது, சொல்லி வந்த தொழுகையின் அகத்து நிகழும் வழுவினைக் கூறல்.

(இதன் பொருள்.) அதிகரித்த தொழுகையிற் சொல்லா நிற்கும் பறுலு பத்தொன்பதில் ஒன் றினை செகில விட்டாலும் இத்தொழுகை யினையும் அதன் பறுலுகையுஞ் சூழாநிற்கும் முன்னம் அகமும் புறமுமாகிய சறுத்துக்கள் எண்பத்திரண்டில் ஒன்றனையாயினும் விடுதலைச் செய்தாலும் அத்தொழுகை யிடத்திற் பொருந்திய செயல்களாயுள்ள பறுலுகளிலொன்றனையாயினு முன்னையதைப் பிற்படுத்திப் பின்னையதை முற்படுத்தினாலும் இந்த பறுலுகளிலா யினும் அந்த சறுத்துக்களாயினும் விட்டதனையும் நிலைமாறி அதனையுமறிந்து மதற்கதற்குரிய விடங்களிற் பொருந்து மொழுங் காகப் பேணுதலைச் செய்யாமையாலும் அத்தொழுகைக் குரிமை யல்லாத செயலதன் அகத்தேயுளதாயினு மதனைச் செய்தாலும் அத்தருணத்தினு மற்றைத்தருணத்தினும் அத்தொழுகையை விட்டு புறப்படுவேற்று செயல்கண்மிக்கென்று சொல்லப்படுவனவற்றை வரும்படிச் செய்தாலு மன்றியுமத் தொழுகைக்கு முதலாக வுந்துணையாகவு முள்ளவல்லமமுடைய காரணங்கடாமே யிடை யினூறு படுமாயினும் அதனை செய்யுங் கருத்தாவாலூறுபடுமா யினும் இவ்வனைத்தானும் அத்தொழுகை தானே வழுவி யவனைக் குற்றமுடையனாக்கி அகலுமென்றவாறு.

விட்டாலு மாக்கினாலு மென்ற செயப்படு பொருளேற்ற பிறவினை அச்செய்கையினை யுடையான் மேற் படுத்தின மையால் மனத்தினறிந்து செய்தலாயிற்று. [இனி யொருவன் றுக்கூவுல் வந்து இருத்தித்தாலிற் செல்லாமற் சுஜூதில் வருவானாயின் ஒரு பறுலை விட்டதாற் றொழுகை வழு விற்று அல்லது றுக்கூவில் வந்தவன் அதனளவுகுனியாம லிருத்தித்தாலின் மீள்வானாயின் ஒரு சறுத்தை விட்டதாற்

றொழுகை வழுவிற்று அல்லது றுக்கூவில்வந்து சுஜூதிற்போய் பின்பு இருத்தித்தாலில் வந்தானாயிற் பின்னையதை முற்படுத்தி முன்னையதை பிற்படுத்தியதாற் பரிசரியாமையும் அடவினைபெடா மையுமாகிய சறுத்தும் பறுலுங்கெடுதலாற் வழுவிற்று ஒருவன் மறதியால் றுக்கூவில் வந்தவனிருத்தித்தாலிற் செல்லாமற் சுஜூதிற் சென்றான் அதனிடத்தி லுணர்வுதோன்றிற்று, அவ்வுணர்ச்சியுடனே யிருத்தித்தாலின் மீளாது உறுவனாயின் முன்பின்னாபதை யடவாகப் பேணுதலைச் செய்யாமையாற் றொழுகை வழுவிற்று. இவ்வெடுதுக் காட்டல் அனைத்தினுவவனைக் குற்ற முடையவனாக்கி அத்தொழுகை யகன்றதென்றுணர்க. [செயல் முன்பினாக்கலென் றமையாற் செயல்களாயுள்ள பறுலுகளிற் குறியதை னெடியதாக்கலு மென்று அஃதாவது இருதித்தாலுஞ் சந்திருப்புந்தறிய பறுலால் அவ்விருத்தித்தாலி லொருவன் பாத்திஹாவோது மாத்திரையளவும் அதற்குரிய வோதலன்றி மற்றோரோதலாலேனு மல்லது வாய்வாளாதேனு நீட்டித் தானாயினும் அச்சந்திபிருப்பில் அத்தஹிய்யாத்தோது மாத்திரையளவு மிவ்விரண்டு காரணத்தினொன்றாலேனு நீட்டி தானாயினும் அவனது தொழுகை வழூஉ மென்றுணர்க. இந் நீட்டித்தல் மறதியானுண்டாயின் அவ்வழுமைதியாற்றொழுகை கூடுஞ் சுஜூது சகுவுஞ் செய்வனென்ப. [செயல் முன்பினென்று பிரித்தமையாற் சொல்லாயுள்ள பறுலுகள் முன்னையது பின்னையாயினும் பின்னையது முன்னையாயினும் இவ்வழுவினைக் கொள்ளாவென்பதாயிற்று. [அஃதாவது றுக்கூவினிடத்திலாயினும் ஈற்றில் வரு மத்தஹிய்யாத்தினிருப் பிடத்திலாயினும் பாத்திஹா முழுவது மேயாயினுஞ் சிறிது மேயாயினு மோதலும் அன்றியு நிற்குநிலையினிடத்தில் அத்தஹிய்யாத்து முழுவது மேயாயினுஞ் சிறிது மேயாயினு மோதலும் போல்வனவாமிவற்றா லத்தொகை வழுவாதென்றுணர்க. ஆகையாலிவ் வழுவமைதியாயிற்று. [செயலினெதிர் மறுத்த சொல்லு மச்செயல் போலப் பொதுவாகையாற் சொல்லாயுள்ள பறுகளெல்லா மென்று கொள்ளற்க, தொழுகையிற்றுவக்குந் தக்பீறு முடிக்குஞ் சலாமுமாகிய சொல்லாயுள்ள பறுலுகளிவ்விரண்டு மன்றி மற்றுள்ளன நிலைமாறிடில் வழுவாதா மிவ்விரண்டுமாகில் வழூஉமென்றுணர்க.

இதனா லத்தொழுகை யென்னும் பொருளினை நிறுத்தி யதன் அகமும் புறமுங் கூறவேண்டுதலி னென்றுணர்க. வழுவினைக் கொள்ளாதானிச் சொற்களி னிலைமாறுதல் மறந்தேயாயினுஞ் சலாமுக்கு முன்னர் வருஞ் சுஜூது சகுவினைக்கொண்டு வருவனவாயிற்று. சலாமு மறதியால் நிலைமாறிற் சுஜூது சகுவினைக் கொண்டு வருமல்லதாயி கொள்ளாது. வழுவினைக்கு மென்றுணர்க. [அல்லாச் செயலதினுள்ள தென்றது றுக்கூவையாது சுஜூதையாவது செய்து

முடித்து மறுத்துஞ் செய்தல் போல்வனவாம். மறதியாற் செய்தல் போல்வனவாம். மறதியாற் செய்தால் வழுவமையாது சுஜூது சகுவு செய்தற் குரியவாய் [அப்பாற் செயன் மிக்காவரினு மென்றது தொழுகையினிற்கும் போதின் நடக்கல் அடித்தல் அடியெட்டி வைத்தலிவை போல்வன பிறவினைகளாம். இவையொரு தொடராக மூன்றடுக்க வருதல் மிக்கனவா மென்று கொள்க. [வல்லகாரணமிடை யூறுகி லென்றது தொழுகை முறிதரு மென்னுங் கவியுமெய்யினுடட நீங்கியென்னுங் கவியுமாம். இக்கவியிற் போந்த விரிவினை யுய்த்துணர்ந்து கொள்க. மேல்வருங் கவிகளானு முணர்க.

வழுவாதியற்றலைக் கூறல்.

மறந்த செயல் பின்னர் நினைவில் வந்தால்
மருவிக் கொள்ளுவனஃதே மீண்டால்
இறந்த செயலினுக் கீடாக்குவன்
எதிர்ந்த செயலெல்லா மடவாக்குவன்
றுறந்து போயதும் அபுஆலாகிற்
றொடர்ந்த பறுவினைப் பேணிக் கொள்வன்
நிறைந்த றக்அத்தில் சுஜூதிலையும்
நினைவினுறு தியான் முடிப்ப னென்றார்.

என்பது, முன்னர்க் கூறிய வழுவுதலின் காரணங்காட்டி அத்தொழுகையின் கணமைவன வமைத்து மமையாதனவற்றை யொழித்து மதற்கோர் வழுவில்லா தியற்று தலைக் கூறல்.

(இதன் பொருள்.) கூறிய தொழுகையின் அகத்தமைந்த அச்செயல்களாயுள்ள பறுலுகளின் ஒன்றனை மறதியாற் செய்யாது விட்டு மற்றொன்றனைச் செய்யா நிற்கின்ற அவனுக்குப் பின்னர் தான் மறந்த செயலாயுள்ள பறுலு இன்னதென்றும் அதனிலன் இன்னதென்று முணர்வின் கண் வருமாயினுடனே அந்நிலத்திலும் அச்செய்கையிலுஞ் சென்று மருவி யெடுத்துக் கொள்ளுவன் அன்றியும் அவ்வுணர்வு தோற்றாது செல்லுகையில் அவன் விட்ட நிலனும் அதன் செய்கையு மற்றோரி றக்அத்தில் மீண்டு வருமாகில் அதன் பின்னர் அவனுக்குணர்வுக் தோற்றிடில் இதனை முந்திய றக்அத்தில் மறந்துவிடப்பட்ட செயலினுக்கீடாக வாங்கிக்கொள்ளுவன் அப்படிக் கொண்ட பின்பு மேலே யெதிராக வருஞ் செயல்கள் அனைத்துப் அத்தொழுகையின் அடவு போல வொழுங்காக்கிக் கொள்ளுவன். இவன் மறதியால் இவனை விட்டு நீங்கி போயதும் அபு ஆலுசுன்னத் தாகுமாயின்

இவன் இதனை விட்டுவிட்டெடுத்துத் தொடர்ந்த பறுலினை விட்டு இதன்பால் மீளாமல் அதற்கோர் பழுதுறுமற் பேணிக்கொண்டு வருவன். இஃதன்றித் தொழுகையி னிறைபூண்ட றக்அத்துக்களின் எண்ணிக்கையின் பிறத்துந் தன் நறத்துஞ் சமதேகம் வந்தாலும் சுஜூதுக்களிற் சந்தேகம் வந்தாலுஞ் சுஜூதுக்களால் றக்அத்தினிடத்திற் சந்தேகம் புவதாலும் அவன் கருத்தினுள் இருதலையாராய் விற்றெளிவுகொண்ட வொருதலையாராயினுலும் அல்லது தன்னினைவிற் போந்த வுறுதியானு மெடுத்துக்காட்டிய முறைபோலச் செய்து இச்சந்தேகங்களை நீக்கித் தொழுகையை முடிவுபடுத்தவ னென்றவாறு.

இவைவருமாறு ஒருவன் றொழும்போதில் முதலாம் றக்அத்தில் ஒரு சுஜூதினை மறந்து விட்டு இரண்டாம் றக்அத்தில் நிற்குநிலையில் வந்தபின்பு உணர்ச்சிதோன்றி நினைத்தானாகில் அவன் செய்த ஒரு சுஜூத்துக்குப் பின்னரிருந்து பின்னெழுந்தவனுமாகிலுடனே மறந்த சுஜூத்திற்புகுந்து செய்து மேல்வரும் பறுலுகளையெல்லாம் அடவாகச்செய்து முடிப்பான். அன்று இராதபடி எழுந்தவனுமாகிய லிடையிருப்பிருந்து பின் சுஜூதுசெய்து முடிப்பான் [இருந்து பின்னெழுந்தவன் அவ்விருப்பினை யிரண்டு சுஜூதிற்கு மிடையிருப்பென்றாயினுங் கடையிருப்பென்றாயினு நிய்யத்து வைத்திருந்தாலுமாம். இதில் மறந்தசெயல் விட்டசுஜூது பின்னர் நிற்குநிலை நினைவில் வந்தது. அம்மறதியையுணர்தல் மருவிக்கொள்ளுதல் விட்ட சுஜூதினைச் செய்தல் என்றுணர்க. [பின்னறென்றது மற்ற றக்அத்திலுள்ள சுஜூதிற் புகுமளவு மென்றாயிற்று. இஃதன்றி அவன்றனக்கு மற்றவிரண்டாம் றக்அத்தில் சுஜூது செய்தபின்பு மறந்துவிட்டது. உணர்ச்சிதோற்றி நினைவில் வந்தாலிந்த றக்அத்திற்செய்த மூந்தின சுஜூதை முதலாம் றக்அத்தில் மறந்து விட்ட வொருசுஜூதிக் கீடாகவாக்கியொரு றக்அத்தென் றெண்ணிக் கணக்கிட்டு நிலையில்வந்து மேலே எதிர்த்து வரும் பறுலுகளை யெல்லாம் அடவாகச்செய்து தொழுகையை முடிப்பான் [அஃதே மீண்டாலிறந்த செயலினுக் கிடாக்கி யெதிர்த்த செயலெல்லா மடவாக்குவனென்று ஆக்குவனென்று முற்றுவினையை யாக்கியென வெச்சவினையாதற் கருத்து இரண்டாம்றக்அத்தில்செய்த சுஜூது முதலாம் றக்அத்தில்விட்ட சுஜூதே அவனறியாமையோடு வந்தமையல் அஃதே யீண்டாலென் னதனைக் கருத்தாவாக்கி மீளலை அதன் பாற்படுத்தினர். ஆகையால் விட்டதற்கு மெடுத்தற்கு மிடைப்பட்ட செயலெல்லா மிவனுக்கு மிவனது தொழுகைக்கு முரிமையாகாமையின் வீண்டொழிலாயிற்று இம்மூன்று துறையினும் அதிகச்செய்கை செய்தமையாற் சுஜூது சகுவு செய்வன். [இனி இவன் மறந்துவிட்டதுமேலே யெடுத்துக்

கூறிய அபுஆலூ சுன்னத்துக்களாயின் எனவே செயலானும் சொல்லானுமாகிய ஆறுமென்றுணர்க. [அவைவருமாறு நடுவத்தஹிய்யாத்தினை மறந்துவிட்டு நிலையினவனுங் குனூத்தினை மறந்துவிட்டு சுறுதிலானவனு மற்று மிவைபோலொத்த சுன்னத்துக்களை மறந்துவிட்டு அதற்கதற் கடுத்த பறுறுகளைத் தொடர்ந்தவனு முணர்ச்சிதோற்றி மறந்தவை நினைவில்வருங்கால் அவ்விடப்பட்ட சுன்னத்துக்கள் அளவின் மீளாமல் அத்தொடர்ச்சித் தன்னையே பழுதுறாது பேணிக் கொள்ளுவன். [தொடர்ந்த பறுலினைப் பேணிக்கெள்ளுவனென்று கூறி அதனை யெதிர் மறுத்தாற் றொடரும் பறுலினையுந் தொடாரா நின்றபறுலினையும் பேணிக்கொள்ளானென்பதாயிற்று. [அஃதாவது ஒருத்தன் அந்நடுவத்தஹிய்யாத்தினை மறந்துவிட்டு அதற்கடுத்த பறுலாகிய நிலையினைத் தொடர்தற்காகப் போம்போதிலுணர்ச்சி தோற்றி மறந்து நினைவில்வருங்கால் அவ்வத்தஹிய்யாத்தின் மீண்டு கொள்வனாம். அன்றி நிலையைத் தொடர்ந்த பின்னர் மீள்வானாயின் அவனும் அச்செயல் ஆகாதென்பதை யறிந்தவனாயும் அல்லது அச்செயலினை முண்டித்துச் செய்தவனாயு மாகுவனேல் அவனுடைய தொழுகை வழூஉ மென்றறிக. அன்றியும் அவன் இதனை யறியாதவனாயு மல்லது அத்தருணமறதி யுடையனாயு மாகுவனேல் அவனது தொழுகை வழுவினைக் கொள்ளாதென்றறிக. உரிய செய்கையை விட்டதாலும் அறியாமையு மறதியுந் தொட்டதாலு மிவற்றிற்குச் சுஜூது சகுவு செய்வன். [தொடர்ந்த பறுலினைப்பேணிக் கொள்வனென்பதற்குத்தான் றொடர்ந்த இமாமுடைய தொடர்ச்சியாகிய பறுலினைப் பேணிக் கொள்ளுவனென்று பொருளாக்கி முந்தியபொருளைத் தனித்துத் தொழுபவனுக்கும் இமாமாகத் தொழுபவனுக்குமாகக் கொள்ளலா தென்பது கருதித்துறந்து போயதும் அபு ஆலாகிலென்று பிரித்துக் கூறினாரென்று முணர்க. [இங்ஙனம் இமாமுடைய தொடர்ச்சியினின்ற மவமூவானவன் அவ்வத்தஹிய்யாத்திலிராது நிலையில்லாது சுஜூதிற்குப் புகுந்தாலும் அவ்விருப்பிலும் அந்நிலையிலுமாதலும் போதலும் அவனுக்கு வாஜிபாகும். அம்முறை செய்யாது தன்முறையே செய்வானாயில் அவனுடைய தொழுகை வழுவிப்போ மென்றுணர்க. (இனி யொருத்தன் அந்நடுவத்தஹிய்யாத்திற் காகவிராது நிலைபிற் போகின்றவன் மீண்டு அவ்விருப்பின் வந்தானாயின் அவனுடைய மடங்கு நிலன் அவனிருப்பினிலத்தினும் அவனிற்கு நிலத்திற்கணித்தாகுமேற் சுஜூது சகுவுசெய்வை குனூத்தினை மறந்துவிட்டுச் சுஜூதிற்குப் போம் போதின்மீண்டவனும் அவனுடைய மடங்கு நிலன் றுக்கூவினளவினையெய்துமாயிற் சுஜூது சகுவு செய்வனென்றுணர்க.

அன்றாயின் அன்று [இனியொருவன் றன்றொழுகையினி றைந்த றக்அத்தில் தொழுதது மூன்றோ நான்கோ வென்றை யுற்றானா யினுமன்றியிவ்வி றக்அத்திற் செய்த சஜதா வொன்றோ விரண்டுமோ வொன்றையுற்றானாயினு மொழுதலை துணியாகிய றக் அத்து மூன்றினையுஞ் சஜதா ஒன்றனையுங்கொண்டு மறுதலை ஐயுற்ற றக்அத்தொன்றினுக்கு வொரு றக்அத்தும் சஜதா ஒன் றினைக்கு ஒரு சஜதாவு மறந்தசெயல் பின்னர் நிலைவின் வந்தா லென்று சொன்னதுபோலச் செய்து தன் றொழுகையை முடிவு படுத்துவன். [றக்அத்தின் அய்யமுஞ் சஜதா ஐயமு மிரண்டு மொன்றாகக் காட்டியது இரண்டாகப் பிரித்துக்கொள்க. [அவ்வி றக்அத்திற் றோற்றிய சந்தேகம் அவனது சலாமுக்கு முன்னர் நீங்கினாலும் அல்லது நீங்காதிருக்கிலும் அல்லது கருத்து இரு கூற்றினும் அதிகரித்தாலும் சுஜூது சவுகு செய்வன். [இனி றக் அத்தென்ற போதுமையை நீக்கிச் சிறப்பாக்கி அவ் வைத்தினை யதற்குச் சிறந்ததாகச் சதுநிலைலொழுகைத் தொழுபவனொருவன் மூன்றாம் றக்அத்திற் கருத்தில் ஐயந்தோன்றி யிது மூன்றாவதோ நான்காவதோவென்று ஐயுற்றவன் அவ்விறக் அத்தைச் செய்து முடித்தற்கு முன்னே அது மூன்றென்று துணிந்து நான்காவதுஞ் செய்தவனாகில் அவன் சுஜூது சகுவு செய்யான். [அவன் அவ் வையத்தை நான்காம் றக் அத்திடத்தில் முந்தியது மூன்று இஃது நான்கென்று துணிந்தானாயிற் சுஜூது சகுவு செய்வன். இவ் வுணர்ச்சித் தெளிதற்கு முன்னியவினை மிகுந்த திவ்விறக் அத் தென்னு மெண்ணத்தோடு முடிந்தாலென்றுணர்க. எண்ணிற் பிறந்த சந்தேகத்தில் அவ்வெண்ணானது வினை முதலாகிய விதி வினையு மறைவினையுங் கொண்டு முடிதலானினைவி னுறுதியை விதி வினைக்கேற்றி மறைவினைக்கு மற்றொன்றினைச் சேர்த்தமையால் எவ்விதத்துஞ் சுஜூது சகுவு வேண்டியதாயிற்று. [இனி தன்னிச் பிறந்த சந்தேகத்தில் விளைகொள்ளாது தன்னையே குறித்து நின்று தன்னளவிற் றன்னைத்தெளித்தமையாற் சுஜூது சகுவு வேண்டாயிற்று. [அன்றித் தன்னைப் விறவொரு நிலத்திற் றெளிக்குங்கால் நினைவி னுறுதிகொண்டு முடித்தற்குரிய பண்பா யிற்று. [இப்பண்பினாற் சுஜூது சகுவு வேண்டலாயிற்று. [இஃ தன்றி றக்அத்தில் என்பதற்கு, றக்அத்திடத்தில் ஐயம் பிறந்த சந்தேகத்தினை நினைவினுறுதியால் முடிப்பனென்பதற்கு அவ்விறக் அத்திற்குரிய பறுலுகள் அனைந்தினுமொவ் வொன்றாகப் பிரித்துஞ் சேர்த்தும் இன்ன பறுலினைச்செய்தனமோ மறந்தனமோ வென்று பிறந்த ஐயத்தினையும் இவ்வையத்திற்கு முந்திய பறுலின் அமைந்த வுறுதியால் மறந்தசெயல் பின்ன ரென்றது போலச் செய்து முடிப்பனென்றுணர்க. [இவ்வையம் அதனகத்தே பிறந்து அதனகத்தே தெளியுமேற் சுஜூது சகுவின்மையுமுணர்க. நினை

வுறுதியால் முடித்தலின் அந்நினைவினுறுதிசலாம் கொடுத்தற்கு முன்னர் தோற்றிய ஐயத்திலுண்டாகு மேல் ஆம். [ஈண்டுக்கூறிய பறுலுகளின் ஐயமு நினைவினுறுதியுஞ் சலாமுக்குப் பின்னுண்டா யின் எப்பாற்படுமோவெனின் இங்ஙனங் கூறிய றக்அத்தின் பறுலு களில் நிய்யத்தும் அவ்வல் தக்பீறுமல்லாதன அவற்றிற் பிறந்த ஐயமும் அந்நினைவுங்குணஞ் செய்யாவென்றுணர்க. [இனி நிறைந்த றக்அத்தில் சுஜூதில் ஐயநினை வினுறுதியால் என்பதற்குத் தொழுகையினிடத்தில் நிறைதலைப் பெற்ற கடைசி றக்அத்தினிடத் தினுள்ள சுஜூதில் ஐயப்பட்டு துணிந்தது ஒழிந்தவொரு சஜதா விற்காக வொரு சஜதாச்செய்தவன் பின்னர் அத்தஹிய்யாத்து மோதி சுஜூது சகுவுஞ்செய்து சலாம் கொண்டு முடிப்பன். [அன்றியும் நிறைந்த றக்அத்து என்பதனைக் கடையினின்றதன்றிச் செய்கை முற்றப் பெற்ற மற்ற றக்அத்துக்களென்று கொண்டு இச்சுஜூதிற் றெளிந்தது ஒழிந்த ஒரு சஜதாவிற்கு அஃதே மீண்டால் இறந்த செயலினுக்கிடாக்குவன் எதிர்த்த செயலெல்லாம் அவ்வாக்குவனென்றமையாற் தன்றொழுமையினீற்றல் உணர்ந் தவனொரு றக்அத்துத் தொழுது சுஜூது சகுவுஞ்செய்து சலாம் கொண்டு முடிப்பன் இவ்விரண்டி துறையும் நினைவினுண்மையால் மறந்தசெயல் பின்னரென்று அதன் இயல்பாக முடிவு பெற்றது இவ்விரண்டு துறையிடத்திலும் ஐயமாத்திரமுண்டாயின் அதனை யொருதலை துணிவால் எடுத்தற் கேலாமையால் மிகவும் பேணுதலைக் கருதியொரு றக்அத்துத் தொழுதல் வாசிபாம். [அன்றியும் ஒருத் தன்றன் றொழுகையினீற்றில் இக்கடைசி றக்அத்தில் சஜதா வொன்று செய்தனமோ விட்டனமோவென்றும் அல்லது இக் கடைசி றக்அத்தன்றி மற்ற றக்அத்தில் சஜ்தா வொன்று செய் தனமோ விட்டனமோ வென்றும் ஐயப்பட்டானுயினு மெவ் வோரி றக்அத்துத் தொழுது சுஜூது சகுவுஞ்செய்து சலாம் கொண்டு முடிப்பன். [இத்துணிவும் ஐயமும் அத்தொழுகையின் முடிவாகிய சலாமுக்கு முன்னரென்பது போந்தபொருளாயிற்று. அதற்குப் பின்னராயினிடையிற் பொழுது நீளாமனு மறுமொழி பகராமலும் ஏற்றுக் கொள்ளாத நஜீசைத்தொடாமலுமுளனுயின் அம்முறையே செய்து முடிப்பன். [இனி யிவ்வாறன்றி நிறைந்த றக்அத்தில் சுஜூதில் ஐயம் நினைவின் உறுதியால் முடிப்ப னென்பதற்கு தொழுகையினீற்று அத்தஹிய்யாத்தி ணிருப்ப வனுக்குச் சதுநிலைத் தொழுகையினுந் திரிநிலைத் தொழுகை யினுந் துவிநிலைத் தொழுகையிலுமுள்ள றக்அத்துக்களெல்லா நிறைந்தனவென்றும் அவைகளிடத்தில் விட்ட சுஜூதியினிடத் திற்பிறந்த ஐயந்துணிவுபட்டுத் தோற்றியவிடஞ் சந்தேகப்பட் டதை அஃதேமீண்டாலென்றுசொன்ன பொருள் நினைவினுறுதி கொண்டு அதனோடுமுடிப்பனென்று பொருள் கோடலுமொன்று

அகுதாவது ஓரிடை யூறு கொண்டு வீழ்ந்த பின்னர் அறியப்பட்ட சுஜூதுகளுடைய விடமாகிய றக் அத்துக்களில் அகுது இவ்விடத்தோ மற்றைய யிடத்ததோ வென்றறிதற்குக் காரணம் இயாதொன்றுந் தோற்றாமையால் ஐயப்படுதலாம். இவை நினைவின் உறுதி கொள்ளாமையாய் அறியாமையைத் தோற்றி வித்து நின்றது. [அவை விளக்குதும் சதுர்நிலைத் தொழுகை யுடையா னொருத்தன் றன்றொழுகையின் ஈற்றினிடத்தில் உணர்வினாலுணர்ந்தான் மறந்து விட்ட சுஜூதுகளின் எண்ணத்தினைப் பின்னர் அவன் அவற்றிற் கிடனாகிய றக்அத்தில் அவ்வீழ்தலினுடைய றக்அத்து முந்திய தென்றும் பிந்திய தென்றும் இடையினதென்றும் உணரானாயின் அவன் விட்ட சஜூதுகளிடத் துணிவுபட்ட எண்ணினைக் கொண்டு அகுதே மீண்டால் அடவாக்குவன் என்றதின்படி முடிப்பன் இடந் தெரியாமல் வீழ்ந்து இரண்டு சஜதா வென்றாவது மூன்று சஜதா வென்றாவது துணிந்த எண்ணினால் இரண்டு றக்அத்து மீளத் தொழுதல் வாசிபாம். அகுதெப்படி யென்னில் முதலாம் றக்அத்தில் வீழ்ந்த சஜதா வொன்றிச்கு இரண்டாம் றக் அத்தில் ஒரு சஜதாவை யீடாக்குவன். இரண்டு மொரு றக்அத் தென்று கணக்காக்குவன் மூன்றாம் றக்அத்தில் வீழ்ந்த சஜதா வொன்றிற்கு நான்காம் றக்அத்தில் ஒரு சஜதாவை யீடாக்குவன் இவ்விரண்டினையும் இரண்டாம் றக்அத்தென்றும் கணக்காக்குவன் பின்னர் இரண்டு றக்அத்துத் தொழுது முடிப்பின் இந்நான்கும் இரண்டாதற்கு இடையிலுள்ள செயல்களை வீணாக்குவன் இவ்விதிகச் செய்கைக்காக சுஜூதுசகுவு செய்வான். இகுது சுஜூது இரண்டு வீழ்ந்த துறை இதுபோல் இரண்டு சுஜூதுடன் மேலும் ஒன்று விட்டவனுங் கணக்காகி இரண்டு றக்அத்துத் தொழுவ னென்றுணர்க. [அன்றியும் இடந்தெரியாமல் வீழ்ந்தது நான்கு சஜதா வென்றா துணிந்து எண்ணினால் ஒரு சஜதாச் செய்து பின்பு இரண்டு றக்அத்து மீளத் தொழுதல் வாசிபாம்.

[அகுதெப்படி யென்னில் முதலி றக்அத்தில் சஜதா விரண்டாகவும் இரண்டாவதில் ஒன்றாகவும் நான்காவதில் ஒன்றாகவும் உத்தி செய்து முதலாவதை வீணாக்கி யிரண்டாவதை மூன்றாவதைக் கொண்டு நிறைத்து ஒரு றக்அத்தாக்கி நான்காவதை ஒரு சஜதாச் செய்து நிறைந்து இரண்டு றக்அத்தென்று கணக்காகிப் பின்னிரண்டு றக்அத்துத் தொழுது மிடிப்பன் [இந்நான்கும் ஒரு சஜதா வொழுந்த விரண்டு றக்அத்தாதற்கு இடையில் உள்ள செயல்களை வீணாக்குவன் இவ்வதிகச் செய்கைக்காகச் சுஜூது சகுவு செய்வன். [அறியும் இடந் தெரியாமல் வீழ்ந்தது ஐந்து சஜதா வென்றாவது ஆறுசஜதாவென்றாவது துணிந்த எண்ணினால் மூன்று றக்அத்து மீளத்தொழுதல் வாசிபாம். [அகுது

எப்படி யென்னில் முதலி றக்அத்தில்வீழ்ந்த சஜதாவிரண்டாகவும் இரண்டாம் றக்அத்திலும் இரண்டாகவும் மூன்றும் றக்அத்தி லொன்றுகவும் உத்திசெய்து மூன்றுவதை நான்காவதைக்கொண்டு நிறைத்து ஒரு றக்அத்தென்று கணக்காக்கியும் [அன்றியும் மூன்று றக்அத்திலும் வீழ்ந்தசஜதா ஆறுகவும் உத்திசெய்து நான்காவதை யொரு றக்அத்தென்று கணக்காக்கியும்பின் இரண்டு துறைக்கு மூன்று மூன்று றக்அத்துத் தொழுது முடிப்பன் இந்நான்கு மொரு றக்அத்தாதற்கு இடையிலுள்ளசெயல்களை வீணுக்குவன் இவ்வதிகச் செய்கைக்காகச் சுஜூது சகுவுசெய்வான். [அன்றியும் இடந்தெரியாமல் வீழ்ந்தது ஏழு சஜதாமென்று துணிந்த எண்ணி னுல் ஒருசஜதாவுமூன்று றக்அத்து மீளத் தொழுதல் வாசிபாம். அகுதெப்படியென்னின் மூன்று றக்அத்தில் ஆறுசஜதாவும் நாலா வதிலும் ஒரு சஜதாவும் வீழ்தலாக வுத்திசெய்து நான்காவதற்கு ஒரு சஜதாவும் மற்றமூன்று றக்அத்தும் தொழுதுமுடிப்பன் இதற் குச் சொன்னதுபோல சுஜூதுசகுவுஞ்செய்வன் [அன்றியும் இடந் தெரியாமல் வீழ்ந்தது எட்டு சஜதாவென்று துணிந்த எண்ணி னுல் இரண்டு சஜதாவும் மூன்று றக்அத்து மீளத்தொழுதல் வாசி பாம். [அகுதெப்படியென்னில் நான்குறக்அத்திலும் வீழ்ந்தசசதா எட்டாகவும் உத்திசெய்து முந்தவிரண்டு சஜதாச்செய்து பின்பு மூன்று றக்அத்துத்தொழுது முடிப்பன் இதற்குஞ் சொன்னது போலச் சுஜூது சகுவுசெய்வன். இவ்வுத்திகள் நிலநாகிய றக்அத் துக்க ளினியையமாறி நோக்கினும் அமையுமென்றுணர்க. [இவ் வீழ்பாடு சஜதாக்களிற்றரிபடுதலை விடுதலானுந் தலைப்பாகை நெற்றி யைமறைப்பினும் போல்வன வேதுவாலுண்டாகுமென்றுகொள்க. றக்அத்திலென்றுஞ் சுஜூதில் ஐயமென்றும் பொதுவாகப் போந் தமையால் அந்நாலினையும் இவ்வெட்டினையுங் கொண்டு நின்றது தனக்கோரிடையூறுண்டாகியுந் தன்செய்கைக்கோ ரிடையூறுண் டாகியுந் தகைத்தமையானும் அதனை நீக்கினமையானும் பறுலு களுஞ் சுறுத்துக்களும் இடம்பெயர்ந்துஞ் சிதைந்தும் பின்னர் பொருந்து மடவாகப்பேணுதலைப்பெற்றமையானும் அதிகத்திற்கு பொருந்தமுடமையைப் பொருந்தியதானும் அத்தொழுகையானது தானும் வழுவாகாது அதனைச்செய்பவனையுங் குற்றமிலனுக்கி அக லாதுநின்றதென்றுணர்க. [இவ்விடத்தமைத்ததுறைகளியாவையும் இக்கவியிற்போந்த பொருளால்உத்தியிற் செலுத்தி அடவும்விடு தற்குக்கொடையு மிடையீடுமுதலிய எல்லாம் ஆய்ந்தெடுத்துக் கொள்க. [இதுதன்றியு மிடைப்படுந்துறைகளுஞ் சிலவுளம்டுத்து மிடனறிந்து படுத்துக்கொள்க.

சஜ்தா சகுவினை துவினைக் கூறல்.

மலியுஞ்செய லினைமடக்கலோதல்
　　மறுபால்பெயர்த் திடல்மறந்தானுக
நிலையினிருந் திடல்நிலையிற் போதல்
　　நிகழ்த்தல்குறை மொழிசலாமைப் போத்தல்
நலிதல்குறுஞ் செயல்அய்யநீளம்
　　நபிலான்சப றிற்றன்றிசையுமாறல்
வலிதரம்அபு ஆலைவிடுத்தலெல்லாம்
　　வருத்துஞ் சகுவுடைச் சஜதாவையே.

என்பது, எடுத்துக் காட்டிய வழுவகற்றுன் துறைகள் சில வகையாலும் இன்னமும் பலவுளவாலும் அவைவிளங்கிக் கொள்ளு தற்காகச் சஜதாசகுவினை துக்களைக் கூறல்.

(இதன் பொருள்.) 1-வது ஒருத்தன்றுன்றொழுந் தொழுகை யினிடத்தின் மலிவாகிய செயலாயுள்ள பறுலுகளை மடக்கிச் செய்தலும் 2-வது ஓதலாயுள்ள பறுலுகளை அதனில் அல்லாமல் மற்றோர் நிலத்திலோதலும் 3-வது மறந்தவனுக விருக்குந் தலத்தி லிராது மேற்போந்த றக்அத்து நிலையிற் போதற்காக நெகிழ்தலும் 5-வது மறந்தவனுகக் குறைமொழிதலும் 6-வது மறந்தவனுகச் சலாமை யதனிடமன்றி மற்றோரிடத்திற் சொல்லுதலும் 7-வது மறந்தவனுகக் குறியதாகிய பறுலினை நெடியதாக்கலும் 8-வது மறந்தவனுக அத்தொழுகை யிலியாதும் போயிற்றோ வென்ற திகத்தின்மாறுத ஐயநீட்டித்தலும் 9-வது சபரினிடத்தில் நபிற் றொழுபவன்றுன் குறித்துப் போந்திசையுங் கிபுலாவின் றிசையு மன்றி மற்றோர்திசையிலடங்கா வாகனக்குறும்பாற் சிறுபொழுது மறுகுறலும் 10-வது சுன்னத்துக்களில் வலியதாகிய அபுஆனு சுன்னத்துக்களி லொன்றனை விடுதலும் ஆகிய விப்பத்துக் கருமங் களுஞ் சுஜூது சகுவினைவருத்திவிக்கு மேதுக்களாமென்றவாறு மறந்தானுக வென்பதனையிடை நிலைத்தீபமாகக் கொள்க. [இவ் வினைத்திற்கும் உதாரணங்களுந் துறைகளு மிவற்றின் முடிவுகளு முன்னரெடுத்துக் காட்டினேம். இனி யிவைகளினிடைப்படுந் துறைகளோடு பல துறைகளையு மெடுத்துக் கணக்கிட்டு மாட் டேற்றிப் பகுத்துக்கொள்க. குறைமொழியெனவே சொல்லானும் பொருளானுங் குறையாது வருவனவெல்லா நிறைமொழியாம் ஆகையால் மறந்தவனுகவிரு சொல்லொருதொடரன்றி முச்சொல் லொரு தொடராயினும் மறவாமலிரு சொல்லொரு தொடராயினும்

பொருள்தோன்ற ஒரெழுத்து ஓர் மொழியாயினு மொழிவனுன் அவனது தொழுகைதான் வழுவி அவனைக் குற்றமுடையனுக்கி யசஹுமென்றுகொள்க. (ஐயநீளலெனவே யவனது தொழுகையிற் பிறந்த ஐயம் மற்ற றக்அத்திலும் படர்தலாகக் கொள்க) நபிலான் சபரிற்றன் றிசையுமாறலெனவே மற்ருேர் காரணத்தால் மாறலுங் கிபுலாவிற்றுவக்கித் தன்றிசைகொண்டு தொழுபவனுகையால் அம் மாறல் கிபுலாவையுங் கொள்ளாமையைக்கருதித் தன்றிசையுமென வும்மையாலெதிர்மறுத்தாரென்றுகொள்க (பொழுது நீட்டித்தால் அத்தொழுகை கூடாமையா றிந்த சஜதாவினுடைய துறையில் அமைத்தலாற் சிறு பொழுதாயிற்று. இதிற் போந்த பொருள் சபரினிடத்தில் நபிற்றெழுகைத் தொழுபவன் றன்னேறுவாகன முரியாட்டத்தாற் றன்றிசையையுந் தான்றுவக்கிய கிபுலாவினது திசையையுஞ் சிறு பொழுது வருதலென்றுணர்க. மற்றுள்ளன வெல்லா முய்த்துணர்ந்து கொள்க.

இமாமவுமூமிவர்கள் சஜதா சகுவினைக் கூறல்.

தொடர்ந்தோன் மறப்பினுற்சச தாச்செய்யான்
 றெடர்ந்துபின் னரேசெய்திடினுந்
தொடர்தோன் மறதியேபின் னராயிற்
 றெடர்பட்டோனதைச் சுமந்துகொள்ளான்
றெடர்ந்தோன் சலாம்சொல்லிப்பின் றெழுதாற்
 றெடர்பட்டெனையுஞ் சுமந்துகொள்வான்
றெடர்ந்தோன் றெடர்பட்டோன் சஜதாவையுந்
 தொடர்வான்முண்டித் தாற்றெழுகைபோமே.

என்பது, தொடர்ந்தவனுக்குந் தொடரப்பட்டவனுக்கும் இடையில் இக்கருமங்கள் உண்டாயின்று அதற்குப் பொருந்துஞ் சுஜூதுசகுவுண்டாதலெவ்விதமோ வென்று ஐயப்படுவார் ஐய நீக்குதற்காக இவ்விருவரின் சஜதாசகுவின் இயல்பைக் கூறல்.

(இதன் பொருள்.) தொடர்ந்தோனுகிய மவுமூமானவன் அவனுடைய தொடர்ச்சியினிடத்தில் மறதியாகிய முற்கவியின்

அடக்கிக் காட்டிய யேதுக்களில் ஓரேதுவாகிய விடுதலாயினுஞ் செய்தலாயினும் வந்து அமையுமாகில் அவனதற்குச் சஜதா சகுவு செய்யான். அம்மறதியை யிவனது தொடச்சி இமாமுடைய சுமையிலாக்கி வித்ததைன்று கொள்க.

(அன்றியும் ஒரு மவுமூமானவன்றான் மறந்து விட்ட நிய்யத்துந் தக்பீறு மல்லாத பறுலினைத் தன்னிற்றத்தஹிய்யாத்தில் உணர்ந்தவன் இமாம் சலாங்கொடுத்த பின்னரெழுந்து மறந்த செயல் பின்னரென்னுங் கவிபோலச் செய்து முடித்தாலுஞ் சஜதா சகுவு செய்யான். இது தொடர்சியிடத்திற் பிறந்தமையானென் றுணர்க. (அம்மறதியைப் பின்னர் தொடர்ந்து செய்திடினுஞ் செய்யானென்று கொள்க) மற்றும் அகல நின்றான் ஒரு மவுமூமானவன் இமாமுடைய சலாமுடிந்த தென்று எண்ணிச் சலாங் கொடுத்தான். பின்பு அவன் எண்ணம்போல் ஆகாமையறிந்தவன் இமாம் சலாம் சொன்னவனுஞ் சஜதா சகுவு செய்யான் இவ்விரண்டு மறதியுந் தொடர்ச்சியினுள்ளது (தொடர்ந்தேன் மறதியே பின்னர் கொள்ளாவென்றது, இமாமானவன் சலாஞ் சொன்னதற்குப் பின்னர் மவுமூமானவன் யாதொரு கருமத்தை மறந்தானுயின் அதனுனுள்ள சஜதா சகுவினை அவ்விமாமானவன் சுமையுள் அமைத்துக்கொள்ளான் இவனே சுமந்து கொள்வன் [தொடர்ந்தோன் கொள்ளவானென்றது பின்வந்து தொடர்ந்த வொரு மவுமூமானவன் தன் இமாமுடைய சலாமுடனே மறதியாகச் சலாஞ் சொல்லியுடனே தனக்குணர்வு தோன்றித் தொழவேண்டிய சேட முள்ளதைத் தொடுக்துத் தொழுபவன்றன் மறதியின் சஜதாவையுந்தன் இமாமுடைய மறதியின் சஜதாவையுஞ் சுமந்து கொள்வன் (சலாஞ் சொல்லிப் பின்றொழுதா லென்பதனுலும் பிந்தித் தொடர்ந்தவனென்று வருதலாலுச் தொடர்ந் தோரிருவகையாரென்பது கூறுக்கூற்று விளக்கிற்று. (அன்றியுந் தொடர்ந்தோன் தொடர்வானென்றது தொடர்ந்த மவுமூமானவன்றன் இமாமுடை சஜதா சகுவையுந் தொடர்ந்து கொள்ளுதல் அவனுடைய தொடர்ச்சியின் உரிய பொருளாகக் கொள்வன். அதனைச் செய்யாது முண்டித்து விடுவானுயின் அவனது தொழுகை வழுவி யகன்றுபோ மென்றவாறு. (இக்கவியின் அகத்திற் பிறந்த துறையுமன்றிப் பிறத்தும் பல துறைகளுமுள்ள அவையெல்லம் இமாமுக்கு மவுமூமுக்கும் இடைவாய்ந்த தொடர்ச்சியின் பந்தத்தானும் அப்பந்தம் விடுதலானுஞ் சில விடை யூறிடைப் படுதலானும் வந்தமையும் அவற்றையுய்த் துணர்ந்து கொள்க.

பின்றொடர்ந்தா னியல்புஞ் சஜதாவிவனண் ணு நிலனுங் கூறல்.

பிந்தித் தொடர்ந்தவன் மறந்தவனைப்
பேணியவனோடுந் தொழுத பின்னர்
அந்தத்திற்றானுஞ் சஜதாச் செய்வன்
அதனையவன் செய்யா விடினுமன்றே
அந்த மறதிகண் மிக வாயினும்
அமையுஞ் சஜதாவோரிரண்டேயாகும்
இந்த சஜதாவுஞ் சலாமுக்கு முன்
என்றேயுரைத் திட்டாரிமாம் ஷாபியி.

என்பது, இத்தொழுமையின் இமாமுடன் பின்வந்து தொடர்ந்தவன் இயல்பு இன்ன முறை யென்றும் பல முறை வழுவு மறதியு முண்டாகுங்கால் சஜதா சகுவும் பலமுறையோ வொரு முறைதானோ வென்று ஐயுற்றார் ஐயநீக்கலும் அஃது எவ் விடத்தோ வென்று ஐயுறுது இன்ன விடத்ததென்று அதனிய லுங் கூலல்.

(இதன் பொருள்.) முன்னர்க்கூறிய பத்துவகைச் யேதுக்களி னொன்றாயினும் பலவாயினும் அடைந்த தற்குப் பரிகரித்தலுஞ் செய்பவனை மறந்தலனென்று வழங்குதலால் அம்மறதியுடைய வோரிமா மானவனைத் தொழும் போதிற் பிந்திவந்த தொடர்ந்த வொரு மவுமூ மானவன் றன்றொடர் பிற்கோர் பழுதுறுது பேணி யும் அவனோடு சகுவுடைய சஜதாவுந் தானுஞ் செய்தும், பின்னர் தனக்குரிய சேடமுள்ள தொழுகையைத் தொழுகை ஈற்றின மீள வுஞ் சகுவுடைய சுஜூது செய்வது அன்றியும் அதற்குரிய இமா மானவன் செய்யாது விட்டானாகிலும் இவன் செய்வன் இனியிவன் றொடர்ந்த பின்னர் அவ்விமாம் மறதியுடையானாகில் இம்முறை செய்த னென்பதற்குத் தாபத்தியாற் காட்டினாரென்றுணர்க. [ஒரு தொழுகையாளன் அவனுக்கு அவ்வேதுக்கள் பலமுறை யுண்டாயினும் ஒரு முறையே சுஜூது சகுவு செய்வன் அஃதோர் இரண்டு சசதாவாகும் இதற்கு நிலனாவது அத்தொழுகையை முடிக்குஞ் சலாமுக்கு முன்னர் அத்தஹிய்யாத்துச் சலவாத்துகள் ஓதலுக்குப் பின்னரென்று இமாம் ஷாபியி அருளிச் செய்தார் களென்றவாறு.

[முன்னர் பறுனு பத்தொன்பதென்றும் அதன் அகமும் புறமுமாக இருந்த ஒழுங்கினை அவற்றுள் அடவு ஒரு பறுவென்றும் வகுத்தார் [இதற்கு மிடையின்மறப்பு நினைப்புமுண்டாகுமேல் ஆதனைப் பொருத்தஞ்செய்யுஞ் சஜதாவும் ஒருபறுவென்று கூறுமையானு மற்றுஞ் சான்றுண்டா யிருந்தலானும் வேண்டிய சுன்னத்தென்பதே விளங்கிற்று.

அந்த சுஜூதின்முடிப்பு கூறல்.

தெரிந்துஞ் செய்யாமல் சொல்வானுற்
சேராதன்றியு மறதியாகிற்
பிரிந்தபொழுதுமே நீளுமாகிற்
பெயர்ந்தும் வாராதமச்சஜதா
வரைந்தபொழுது நீளாதிருக்கில்
வருமே முன்னியசலாமும்பின்னே
பிரிந்தமறதிக்குச் சஜதாச்செய்தும்
இல்லையாகிலும் வருமேயென்றூர்.

என்பது, ஈண்டுக்கூறிவந்த சுஜூது சகுவின் முடிவு கூறல்.

(இதன் பொருள்.) ஒருத்தன் ருெழுகைபின் மறந்த கருமங்களைக் கண்டுணர்ந்து திருத்தஞ்செய்திருந்தும் அதற்கு முண்டித்துச் சஜதாசகுவு செய்யாமல் சலாமையேகொண்டு அதனை முடிப்பானுகில் அந்தச் சஜதாவும் அதன்பயனும் அவனுக்குக் கிடையாதாம். அன்றியும் அவனந்தச் சஜதா சகுவினைமறந்துவிட்டுச் சலாஞ் சொல்வானுகிற் பின் உணர்வுக்கும் இவன் சலாமுக்கும் இடையிற் பொழுது நீடிக்குமாகில் அவ்விடத்து மதுபோலக் கிடையாதாம் இவ்விடைப்படும் பொழுது நீளாதிருந்தால் அந்த சஜதா சகுவுமுன்னும் அந்த சலாம் பின்னுமாக வருஉம். [இஃதன்றி யொருத்தன் அவ்கேதுவுண்டென்று கருதிச் செய்யுஞ் சுஜூதினைச் செய்த பின்னர் அஃதில்லை யென்று மீண்டு வருஉம் அந்த சஜதா சகுவென்றவாறு.

திராவமூக்களைக் கூறல்.

தொழுகைமுறிதருபிரகாரங்கள்
சொல்லும்வகை பொருபதிற் றென்றென்றார்
மொழிகள்விளங் கவேபகர்ந் திடினும்
மூன்றுசெயற் றொடர்பாகச் செய்கினும்
தொழுகையிடத் தினுமுடிந் திடினும்
துடக்கின்வகை யாதொன்றாற் றிடினும்
கழுவவிதியான நஜீசுதனைக்
கலைமேனியிடங் காண்கிலும்மே
மெய்பி னுடைநீங்கிவெளி கண்டாலும்
மேவுங் கிபுலாவை மாரிடினும்
அய்யமறவெடி சிரிப்பான்தொர்
அற்பமாகிலுஞ் செவிகேட் கிலும்
செய்யுநிய் யத்தைச் சந்தாபித்தாற்
றின்கிலியாதொன் றைக்குடித் திடலும்
பொய்யாங்குபிர் தனினிலைப் பட்டாலும்
பொருந்தாதா கன்றிடுந்தொழுகைதானே.

இரண்டு கவியுமொருதுடர்.

என்பது, மேலே வல்ல காரண மிடையூறுயினென்று கூறிய திராவமூக்களின் வகையுமியலும் அவை யிவை யென்று விளங்கக் கூறல்

(இதன் பொருள்) தொழுகைக்கு முறிதலைத்தருகின்ற வேறுபாடாகிய வூறுகள் தாவை முகநூல்களிற் கூறுநிற்கும் பதினொரு வகை யென்று இமாம் சொன்னார்கள். அவற்றுள் 1-வது தொழுகையிற் பிறக்கும் பொருள்விளங்க மொழிகளைப் பகர்திட்டாலும் (இதனுன்) பறுலாகிய பாத்திஹா முதலிய வோதலாகிய வல்ல காரணம் அக்கருத்தா வானிடையிலூறு பாடலாயிற்று. [விளங்கவே யென்றமையாற் றனக்கும் பிறர்க்குமாயிற்று. ஆகையாற் கருத்துணினைவிற் கிடந்த நிய்யத்துக்

துதித்தலிற் பதிந்தவுருக்கமும், ஓதலிற் கிடந்தவாய்ச் சசியும் வணக்கமென்றொடிங் கிடந்த அச்சமும் ஒழிந்து போகப்படார்ந்தது அப்மொழியாயிற்று. [அன்றியும் ஒருவன் விளக்கிக்கொடுக்குங் கருத்தினாற் குறுஆனை அவ்விளக்கத்தோடு சூறத்திலோதல் சுன்னத் தென்றதனைப்பேணி ஓதுவானாயின் அவன்றொழுகை வழுவாதென்பதுவும் அல்லதாயின் வழூஉ மென்பதுவும் இஃதன்றி மற்றொருத்தரை முன்னிலைப்படுத்தாது நாயகனையே முன்னிலைப்படுத்துந் துவாவும் திக்றும் அச்சொல்லாயின் வழாதென்பதூஉந் தோற்றி நின்றது. இன்னும் அவ்விளக்கம் பெரும்பான்மையும் ஈரெழுத்து முதலாப்பல வெழுத்தாறுஞ் சொல்லொடு கிடந்தமையால் அவ்வீரெழுத்துங்கனைத்தனும் நகைத்தலினு முயிர்தலினு முனக்கலினும் அழுதலினுந் தோற்று மேனும் அத்தொழுகை வழூஉம் அல்லவாயின் வழாவென்பதுங் கருத்தாயிற்று. 2-வது மூன்று செயலினையிடையில் அறுதோரு தொடராக வடுக்கிச் செய்திட்டாலும் (இதனான்) பறுலாகிய செயல்களின் சறுத்துக்களவற்றினை யசையாது வலியுறுத்தி நிற்றலாகிய வல்லகாரணம் இக்கருத்தா வானிடையிலூறு படுதலாயிற்று. [தொடராவெனவே தொடர்பற்று வருமன பலவாயினும் அத்தொழுகை வழுவாதென்பது தோன்றிற்று. இத்தொடர்ச்செய்கை மறதியாற் செய்யினு மூன்றித்தே செய்யினுமொன்று 3-வது அத்தொழுகையிடத்தே இவனுடைய வுலுவானது முறிவுபட்டாலும் (இதனான்) உலுவின்றித் தொழுகை துரிஸ்தாகா தென்றமையின் காரகவேது போலாகிய காரியத்தின் பொருளாகிய புனிதமென்னும், வல்ல காரணந்தானே யிடையினூறு படுதலாயிற்று. 4-வது துடக்கினிடத்தில் கூறிய வகைகளி னியாதொன்றாயினும் அத்தொழுகையினிடத்தில் இடையுற்றாலும் இதனான் துடக்கு நிக்கலென்னுஞ் சறுத்தாகிய வல்லகாரணந்தானே யிடையினூறு படுதலாயிற்று 5-வது கழுவுதலை விதியாக்கிவிக்கும் நஜீசுகளியா தொன்றையாயினுந் தன்னுடையினாவது தன்மேனியினாவது தான் றொழுமிடத்திலாவது காணப்பட்டாலும் (இதனான்) நஜீசு நீக்கலென்னுஞ் சறுத்தாகிய வல்ல காரணந்தானே யிடையினூறு படலாயிற்று. [கழுவதியெனவே கழுவாது பொறுத்துக்கொள்வன வாயின் அத்தொழுகைவழாதென்பது தோன்றிற்று. 6-வது, அத்தொழுகையினிடத்திற் றன் சரீரத்தி லெடுத்துக் காட்டிய மானமுடைய தலத்தின் மறைத்துக் கிடந்தவுடை நீக்கிய அவ்விடத்தினை வெளியிற் காணப்பட்டாலும் (இதனான்) அபமறைத்த லென்னுஞ் சறுத்தாகிய வல்லகாரணந் தானே யிடையினூறு படலாயிற்று. 7-வது, தானோக்கித் தொழுகின்ற கிபுலாவுடைய திசையை மாறிப்போகவிட்டாலும் (இதனான்) சந்தேகமின்றிக் கிபுலாத்தன்னை நோக்கலென்னுஞ் சறுத்தாகிய வல்லகாரணம் அக்கருத்தாவானிடையினூறு படலாயிற்று. 8-வது

வெடிபடு நகைப்பால் அதிவேசையோர் அற்பமாயினுஞ் சந்தேக மறத்தன் செவி கேழ்க்க நகைத்தாலும் (இதனன்) உள்ளச்சங் கொண்டு வணங்குதன் முதன்கையின் அவ்வுள்ளங்களித்தலினுய கன் முன்னர் நிற்றலென்னும் வல்லகாரணம் அக்கருத்தாவா னிடை யிலூறு படலாயிற்று. 9-வது தானெடுத்த தொழுகையின் றலையின் மனத்தானே யுறுதிபெற அமைத்தலைச்செய்யும் அங்கிய யத்தை முற்றெருங்கு மமைந்ததோ அதிற் சிறு தொழிந்ததோ அன்றி நினைத்தனமோ வின்றேவென்று அய்யுற்றாலும் (இதனன்) அத்தொழுகையின் முதலாகிய பறுலும் அதன் சறுத்து மாகிய வல்லகாரணம் அக்கருத்தாவானிடையிலூறு படலாயிற்று. 10-வது தொழுகையினிடத்தி யாதொருணவினைத் தின்றாலும் இயாதோர் பானத்தைப்பருகினலும் (இதனன்) மற்றுங் கருமங்களனைத்தையும் விட்டொழிந்து ஒருமையினிறைவன் சமுகத்தினுதலென்னும் வல்ல காரணம் அக்கருத்தா வானிடையினூறு படலாயிற்று. 11-வது பொய்மையாகிய குபிரியற்கை அத்தொழுகையிடத்தினு மவ னுள்ளத்திடத்தினு மமைத்திட்டாலும் (இதனன்) உண்மைத் தன்மை யொருவனிடத்துந் தூதரிடத்தும், அவன் வேதத்திடத் தும், பற்றி நிற்குஞ் சிந்தையினிசுலாமாதலென்னும் வல்லகாரணம் அக்கருத்தாவானிடையினூறு படலாயிற்று. [பொருந்திக்கொள்ளா தவனை விட்டு அகலப்போம் அத்தொழுகைதானே யென்றவாறு. [இப்பதினென்றுக்கும் எடுத்துக்காட்டி சமுரணியல்பதினென்றும் பறுலாகியும் அப்பறுலுகளைத் தொடர்ந்த சறுத்தாயுஞ் சுன்னத்தா யுங் கித்தாபாயுங் கருத்தாவிருவகையுங் கலந்துக் தனித்தும் வருதலும் இவற்றிற் சிறிது வேறுபாட்டிற்றேற்றுந் தன்மையும் எல்லாமுய்த் துணர்ந்து கொள்க.

ஒழிபியன் முற்றிற்று.

சலாத்துல் அறுக்கான் மாலை முற்றிற்று.

இங்ஙனம்,

க. மீ. மு. முஹம்மது ஹசன்.

Printed at Shahul Hameedia Press, Madras 5.

வெகு காலமாக ஆவலோடு எதிர் பார்த்துக்கொண்டிருந்த

குர்ஆனுடைய தமிழ் " தப்ஸீர் "

வெளிவந்து விட்டது! تبصير الحميد في تفسير القرآن المجيد வெளிவந்து விட்டது!!

தப்ஸீறுல் ஹமீத், பீ தப்ஸீரில் குர்ஆனில் மஜீத்

இந்த தப்ஸீர் நம் தமிழ் நாட்டு முஸ்லிம்களுக்காக தமிழ் பாஷையில் மிகவும் விளக்கமாக சங்கை பொருந்திய சுன்னத்து வல் ஜமாஅத்தின் உலமாக்களாலும் இமாம்களாலும் எழுதப்பட்ட ரூஹுல் பயானையும் பல தப்ஸீர்களையும் ஆதாரமாக கொண்டு, குர்ஆன் ஆயத்துகளை அறபியில் அழகாக எழுதி போட்டோ பிளாக்கு செய்யப் பட்டு ஆங்காங்கமைத்தும் அதன் கீழ் சரியான மொழிப் புரையும் (தப்ஸீர்) விரிவுரையும் வியாக்யானமும் (ஷஃனு நுஸூல்) ஒவ்வொரு ஆயத்தும் இறங்கிய அவசியமும் அதற்கேற்ப ஹதீது, ரிவாயத்து, ஹிக்மத்து, பாயிதா, கிஸ்ஸா, அஜீபா முதலிய அரும் பெரும் ஆதாரங்களும் ஒருங்கே சேர்த்து அமைக்கப்பட்டிருக் கின்றன.

இந்த தப்ஸீர் சூறத்து பாத்திஹா, பகறுவிலிருந்து, சூறத் துன்னிஸா முடிய (ஒரு மன்ஸில் முடிய) $5\frac{1}{4}$ ஜுஸு எழுதி முதல் வெளியீடு வெளிவந்திருக்கிறது. இது றாயல் 8 பேஜ் சைஸில் 100 பாரம் 800 பக்கம் கொண்டது, வெண்மையான உயர்ந்த 50 பவுன் கிளேஸ் காகிதத்தில் அச்சிட்டு அழகான பைண்டும் செய்யப்பட்டது. இதற்கு சாரியான விலை ரூ. 20-ஆகும். ஆனால் இஸ்லாமின் சேவையை முன்னிட்டும் யாவரும் சுலபமாய் வாங்கும் பொருட்டும் குறைந்த விலை ரூ. 10. இரண்டாம் பாகம் $10\frac{1}{4}$ ஜுஸு வரை (2-வது 5 ஜுஸு) ரூ. 10. (போஸ்ட் சார்ஜ் வேறு.)

சொற்ப காப்பிகளே அச்சிட்டு வெளிவந்திருப்பதால் முந்திக் கொள்ளுங்கள்.

இன்ஷா அல்லா. அடுத்த வெளியீடும் சீக்கிரத்தில் வெளிவரும்.

ஹாஜி M. A. ஷாஹுல் ஹமீது & ஸன்ஸ்,

நெ. 20, ஹைரோட், திருவல்லிக்கேணி, மதறாஸ். 5.

பிராஞ்ச் ஆபிஸ்:—

194, கெய்ஸர் தெருவு, பேட்டா கொழும்பு 11, (ஸிலோன்).